SKY WINGS LTD
TRAVEL & TOURS
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119,Tooting High street, London, SW17 OSY

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 12 ♦ ISSUE - 246 ♦ FRIDAY 24 JULY 2015

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE *
* Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

- விசா முடிவடைந்து சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள்.
- புதிதாக அகதி அந்தஸ்து கோருபவர்கள்.
- ஏற்கனவே அகதி அந்தஸ்து கோரி நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆலோசனை மற்றும் விண்ணப்பம் செய்து தரப்படும்
- கைது செய்தல் தடுத்து வைத்தல் மற்றும் உயர் நீதிமன்ற விண்ணப்பம்
- ஐரோப்பிய சட்டத்தின் கீழ் உறவினர்கள் மற்றும் துணைகளை Sponsor செய்தல்
- மனிதாபிமானம் மற்றும் Fresh Application விண்ணப்பம் அனுப்புதல்

போன்றவை தொடர்பில் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழு தமிழ் மக்களுக்கான இலவச ஆலோசனை வழங்கி வருகிறனர்.
M&S Solicitors
1A Beaconsfield Road Southall Middlesex UB1 1BA
(Southall Stationக்கு அருகாமையில்)
Mob: 078 7076 3570, 075 0874 4038
Tel: 020 8571 7760
Email: fahmy@mandssolicitors.com

Nandika's Sarees
மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக பட்டுப் புடவைகள், சுடிதார், பிளவுஸ், மற்றும் காஞ்சி பட்டுகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Free UK Delivery
www.nandikasarees.co.uk

Accountancy Vacancy
Vacancy Available in Ramesh & Co Accountants for Immediate Start
Please Contact Ramesh & Co Accountants
Mail : info@rameshandco.co.uk
Tel : 020 8682 3336
020 8355 2532

FM Carpets
Special Offers for Landlord & Estate Agents
20% OFF
Domestic & Commercial, Huge Stock, Fast Fitting
Huge Stock Variety of Colours Fast Fitting
வீட்டிற்கும் தொழில் நிலையங்களுக்கும் ஏற்றவை
MANY OFFERS IN STORE www.fmcarpets.com
Tel : 020 8252 6433 / 07946 566 885
120 Aldborough Road South, Seven Kings, Illford, IG3 8EZ

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

வான் சாரதிகள் தேவை
மிட்சம் (Mitcham) பகுதியில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு பொருட்கள் விநியோகம் செய்வதற்கு வான் சாரதிகள் தேவை.
Robert Fresh Fruit & Veg Ltd
Unit 13 , 91 -92 church road
Mitcham, CR4 3TD
தொடர்புகளுக்கு : 02086871222
Mob : 079 1902 6083

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்



REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING
UK COOL
AND SHOPFITTING Ltd.
SHELVING
REFRIGERATION
168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk
MAXKOLD
Summer Offer
New and Used Fridge for Sale
New Fridge 3.75 Meter
£3900 + VAT
UK COOL & SHOPFITTING
REFRIGERATION
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation
SHOP FITTING
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter
MOVING & DEVILERY
URGENT REPAIR? CALL:07951854057
1 YEAR PARTS & LABOUR WARRANTY
7 Days 24 HRS Services & Repair




newlife
Home of Fertility, Immunology & Women's Health
Newlife Fertility Clinic
20 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொண்டு குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்கிடுங்கள்
Access Fertility
நிறுவனத்துடன் இணைந்து வழங்கும் விசேட விலைகழிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்
We provide the best affordable infertility treatments (IVF, IUI, ICSI)
www.newlifeclinic.org.uk
T : 01372 738 932
The Pines, 2 The Parade, Epsom KT18 5DH




WORKPLACE PENSIONS
FINANCIAL PLANNER CII CHARTERED
All businesses with employees will have to have a workplace pension.
We can take the burden from you and use our expertise to set everything up quickly and efficiently.
The government has made it compulsory for all employers to not only have a pension scheme but to also comply with the new regulations
Retirement
Why not give us a call and see how we can help you?
ARM ASSOCIATES
FOR MORE DETAILS PLEASE CALL - 020 8763 2221
Web : www.srinivasan.co.uk | Mail : srini@srinivasan.co.uk




ENGINE TEC MOTORS
We offer Facilities For:
Serving
Clutches
Brakes
Overhauls
Car Electricals
Pre - MOT Checks
All types of Repair & Body Work
Insurance Work Undertaken
உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்.
Ask for Vel or Rajan
Tel: 02086408000 / 02086401230
Mob:07860226476 / 07860770945
Unit 5, 339 London Road, Mitcham, Surrey CR4 4BE
e mail: vel@etmluk.com Web:www.etmluk.com




herbalAid
ஆண்களுக்கான மசாஜ் எண்ணெய் பார்மசிகளில் பெற்றுக் கொள்ளலாம்
- உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கலா?
காலத்தை வீணடிக்காமல் தொடர்பு கொள்ளவும்
- ஆண்மைக் குறைவுக்கான சிகிச்சைகளும் எம்மிடம் உண்டு
- சகல விதமான மருத்துவ ஆலோசனைகளுக்கும் வழங்கப்படும்.
QUALITY ASSURANCE
Massage oil for Men to increase strength & vitality
100% safe herbal formulation
Premium SAANDHHA OIIL
AN ORIGINAL PRODUCT REGISTERED IN UK
Note: Please beware of counterfeit products for safety reasons.
For more information or buy online
Visit : www.herbalaid.co.uk
Email : herbalaid@hotmail.co.uk
Phone : 020-8843-0330
R.E.P.L
SAANDHHA OIIL
SATISFACTION 100% GUARANTEE

# பூவரசு




## வரும் தேர்தலில் புலம்பெயர் மக்களின் பங்கு..

அன்புள்ள ஆசிரியருக்கு,

இலங்கையில் தேர்தலும் வந்தாச்சு, பிரதான கட்சிகளும், உதிரிக் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியில் குதித்துவிட்டன. நாடாளுமன்ற அரசியல் மூலம் தமிழ் மக்களின் இழந்த உரிமைகள் மீட்கப்படுமா என்பது கேள்விக்குறி. உள்ளூர் அரசியலில் நம்பிக்கை இழந்துவிட்ட தமிழ் மக்கள் சர்வதேச தலையீட்டை நம்பி இருப்பதுதான் சமகால நிலைமை.

எனவே, இத்தேர்தலை ஒரு சர்வசன வாக்கெடுப்பாக தமிழ் மக்கள் தமது ஏகோபித்த ஒற்றுமையை வெளிக்காட்ட புலம்பெயர் சமூகம் அழுத்தம் கொடுப்பது வரவேற்கத்தக்கது.

*- உமா மகாலிங்கம்*

## வாழ்த்துக்கள் !

வருது வருது *ஒரு பேப்பர்*
தருது தருது புதுவிசயம்
பலரும் கண்டு வியந்திடவே
பலரும் பத்தும் உதவுதுவே
பாவை ஜெயபால் எழுதிடவே
பார்க்க ஊரில் வாசத்தையே
உலகே வியக்கும் தமிழீழ
உன்னத விசயம் வருகுதுவே
சுடச்சுட வருகுது செய்திளே
சுழலும் உலகைப் பற்றியதே
வளர்க வளர்க *ஒரு பேப்பர்*
வயமாய் வளர வாழ்த்துகிறேன்

*- கோபி (செ.நாகநாதன்)*

## யாழ்.இந்துக் கல்லூரியின் 125 ஆண்டு நிறைவு

ஜூலை 11ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரியின் 125 ஆண்டு நிறைவை முன்னிட்டு அதன் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினர் விழா எடுத்தார்கள். நடந்த கலை நிகழ்ச்சிகளில் பழைய மாணவர்களின் பிள்ளைகளும் பங்கு பற்றி சிறப்பித்தார்கள். அதனுடன் ஒரு கல்லூரி 125 ஆண்டு விழாக் கொண்டாடுவது பெருமைக்குரிய விடயம். விழா சிறப்பாக நடந்தது. எங்கள் ஆதங்கம் என்னவெனில் இந்தியாவிலிருந்து கலைஞர்களை வரவழைக்க 40 ஆயிரம் பவுண்ஸ்கள் செலவாம். அதற்கு செலவு செய்த அந்தப்பணத்தை (இலங்கைக்காசில் 80 இலட்சம் ரூபா) பாடசாலைக்கு நேரடியாக அனுப்பியிருந்தால் பாடசாலை அபிவிருத்திக்கு பயன்பட்டிருக்கும் அல்லவா?

*- ராமக்கிருஷ்ணன்*

## ஏன் பிற்போட்டுள்ளார்கள்?

இந்தக் கிழமை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படவிருந்தது. அதை இப்ப பின்போட்டிருக்கிறார்களாம் ஏன் ஐயாக்கள் ? இன்னும் இந்தியா, அமெரிக்காவிலிருந்து அறிவுறுத்தல் மின் அஞ்சல்கள் வரவில்லையா?

*- சித்தாவத்தை உதயகுமார்*

## புலிப்பூச்சாண்டி காட்டும் நவத்தார்!

சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் தமது நிகழ்ச்சிக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை அழைத்திருந்தது. அவரை அந்த நிகழ்ச்சிக்கு வரவிடாமல் தடுக்க சிலர் முயற்சி செய்தார்களாம். இந்த அமைப்பினர் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் ஆகையால் அங்கு போகவேண்டாம் என டொக்டர் நவா என்பவர் முதலமைச்சருக்கு மின்னஞ்சல் அனுப்பியருக்கிறார். இவற்றை முதலமைச்சர் கவனத்தில் எடுக்கவில்லை என்பதனை அவர் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டமை உறுதிப்படுத்துகிறது.

*- துரை. இளமுருகன்*

## தமிழ் மக்களுக்கு சைக்கிள்தான் வேண்டும்!

திருகோணமலைக்கு பயணம் செய்த வட அயர்லாந்திற்கான பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான இயன் பெய்ஸ்லி அங்கு சம்பந்தனைச் சந்தித்து உரையாடியது பற்றி பிரித்தானியப் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். தமிழ் மக்களின் தேவைகள் பற்றி சம்பந்தனிடம் தான் கேட்டபோது, அவர்களுக்கு சைக்கிள்தான் தேவை என்று கூறியதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

சம்பந்தனின் தீர்க்க தரிசனத்தை என்னவென்று சொல்வது. தேர்தலில் தமிழ்மக்கள் சைக்கிளுக்குத்தான் வாக்குப் போடப்போகிறார்கள்.

*- பா. திருநாவுக்கரசு*

## வடமராட்சியில் இது எடுபடாது

தேசியத்தலைவர் பிரபாகரன், இடதுசாரித்தலைவர் கந்தையா, தமிழ் கொங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம், தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் என தமிழ்த் தலைவர்களை உருவாக்கிய மண்ணை இலக்கு வைத்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து மூவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து மூவர், வித்தி குழுவிலிருந்து அறுவர் தேர்தலில் நிற்கிறார்கள். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தோற்கடிக்க இவர்கள் வியூகம் அமைத்திருந்தாலும் வடமராட்சி மக்களை ஏமாற்றிவிட முடியாது.

*- பவதாரினி*

## வீட்டுக்குள் திருடனை வைத்துக்கொண்டு...

யாழ்ப்பாணத்தில்போதைப்பொருள் பாவனை அதிகரித்துவிட்டது என்று ஒப்பாரி வைப்பவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள மாட்டர்களா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது போதைப்பொருள் கடத்தியதாக வழக்கொன்று இருக்கிறது. இந்த வழக்கில் அவருக்காக வாதிடுபவர் வேறு யாருமல்ல சட்டத்தரணி சுமந்திரன்.

ஒரு வேளை இது சிறிலங்கா உளவுத்துறையின் சதி என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் எண்ணை வளமுள்ளதாக கூறப்படும் அப் பிரதேச மக்களை கேட்டுப்பாருங்கள் உண்மை புரியும்.

*- இணுவை சி. இரங்கன்*

## கோகிலவாணியைத் தெரிவு செய்வோம்

2006ம் ஆண்டு தொடக்கம் நான் பணியாற்றிய ஐரோப்பிய ஒன்றிய தொண்டு நிறுவனத்தில் கோகிலவாணி அக்காவும் பணியாற்றியிருந்தார் சுனாமியால் பாதிக்கப்பட்ட, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடையே வாழ்வாதாரம் மேம்படுத்துதல், சுயதொழிலை ஊக்குவித்தல், போன்ற மக்களின் அடிப்படை அத்தியாவசியமான உதவிகளை, தன்னலம், சுயநலம் பாராது செயற்பட்டவர். தற்பொழுது தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் பாராளுமன்ற தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுவது அனைத்து மக்களிடையே மகிழ்ச்சியளிக்கிறது.

*- கலாவரன்*

*ஒரு பேப்பர்* தொடர்பான
உங்கள் கருத்துக்களுக்கு.....
Tel : 020 7043 4314
Email: info@orupaper.com

## "பேச வேண்டிய இடத்தில் பேசுவோம்; மோதவேண்டிய இடத்தில் மோதுவொம்"

"பேச வேண்டிய இடத்தில் பேசுவோம்; மோத வேண்டிய இடத்தில் மோதுவோம்." இது முன்னாள் எம்பி எம்.ஏ.சுமந்திரனின் கூற்று. சரி இந்த ஐந்து வருடத்தில் அவர்கள் பேசிய இடங்கள் எவை? மோதிய இடங்கள் எவை?

பேசிய, மோதிய இடங்கள் என்பதுவே உள் பிரிவுகள் கொண்டவை. யாருக்காகப் பேசியவை? யாருடன் மோதியவை, யாரின் அறிவுறுத்தலில் பேசியவை? மோதியவை? பேசியவற்றால், மோதியவற்றல் நன்மை பயப்பது யார்? அல்லது எவர் நன்மைக்குப் பேசியவை? மோதியவை? இதில் அவர்கள் உண்மை உரைக்க முடியுமா?

01. ஐ.நா அறிக்கை தாமதப்படுத்தல்.
02. ஐ.நா அறிக்கை தாமதப்படுத்தல் முலம் காக்க விரும்பிய சக்திகள்.
03. உள்ளக விசாரணைப் பொறிமுறைக்குத் துணைபோதல்.
04. 13 திருத்தச் சட்டத்தில் ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு தீர்வை எதிர்பார்த்தல்.
05. நிகழ்ந்தவை இனப்படுகொலைகள் என்பதற்குப் பதிலாக பயங்கரவாததிற்கு எதிரான போர் என்போருக்குத் துணை போதல்.
06. சர்வதேச விசாரணை அழுத்தத் தவிர்ப்புக்கு துணையாதல்.
07. புலிகளிற்குப் புனர்வாழ்வளித்தல் என்னும் போர்வயில் இயங்கும் இராணுவ ஆதிக்கத்தில், அரச நிர்வாக சேவையில் உள்ளோர் கைது செய்யப்பட்டும், பல்கலைக்கழக மாணவர் கைது செய்யப்பட்டும் நீதிக்காக எழும் குரல்களை அடக்கும் சக்திகளுக்குத்துணை போதல்.
08. ஒரு அரசால் தண்டிக்கப்பட்ட உறுப்பினர்களும் போர் குற்றத்தில் ஈடுபட்டனர் என சர்வதேச சமூகத்திடம் கூறி, தண்டனை பெற்றவர்களுக்கு மீண்டும் தண்டனை என்பதற்கு அப்பால், இன்று நடைமுறையில் இல்லாத ஒரு அமைப்பின் மீது சர்வதேசத் தடையை நீடிக்க உதவுதல்.
09. ஓர் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதிகளின் போராகச் சித்தரிக்கும் நிகழ்ச்சி நிரலுக்குத் துணைபோதல்.
10. விடுதலைக்கான ஆயுதம் ஏந்திய போரை பயங்கரவாதப் போர் என நாடாளுமன்றப் பதிவேட்டில் பதியும் வகையில் உரையாற்றுதல்.
11. 5 ஆண்டுகளில் வடக்கையும் கிழக்கையும் பிரித்த வழக்கில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை கூட உங்களால் பேரம் [உங்கள் மொழி] பேசாமல் ஆட்சியாளருக்கு இசைவாக இருத்தல்.
12. சமஷ்டி என்னும் வார்த்தை யாலத்தில் ஒற்றையாட்சியை மக்கள் மனதில் திணித்தல்.
13. நாம் ஒரு தேசம் என்பதை மக்கள் மனதில் இருந்து அகற்றும் விதமாக தமிழர்கள் சிறுபான்மை என்னும் புரையோடிய சித்தாந்தத்தை விதைத்தல்.
14. தீர்வு, 13ம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் எனக் கூறுவதன் மூலம் பிராந்தியத்தின்,ஒற்றையாட்சித் தத்துவத்தின் கீழ் குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுதல்.
15. கிழக்கை விடியும் என்று வடக்கைப் பார்த்தல்.
16. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைக் கூட உங்களால் கட்சியின் விசுவாசமாகக் கொள்ள முடியாதிருத்தல்.
17. கட்சிகளின் கூட்டமைப்பாக இருத்தாலும் இருநபர் சர்வாதிகார நிறைவேற்றுக் கொள்கையைக் கொண்ட கூட்டமைப்பாக இருத்தல்.
18. இருவர் சர்வ அதிகாரங்களையும் கொண்ட கூட்டமைப்பானாலும் அவர்கள் மேல் ஓர் சக்தியைத் தமதாகக் கொண்டு மக்கள் ஆணையை மதிக்காமல் செயல்படுதல்.
19. மக்களின் பிரதிநியாக இருந்தும் மக்களுடன் அரசியல் செய்தல்.
20. இழந்த உயிர்களின் விடுதலைக்கான தியாகங்களை உதாசீனம் செய்து அவர்கள் இழப்பில் அரசியல் ஆசனம் வீற்று தியாகங்களுக்கே குழி பறித்தல்.

*சீராளன்*

Broadband
Choice of best available download and upload speeds to suit your needs
Range of ADSL, Superfast or Fibre Broadband now up to 80MB speed
Data package to include Static/Dynamic IP addresses and routers to fulfil your needs

Hosted voice solutions
FREE Inter-Office calls
FREE on net calls to landlines and mobiles
UNLIMITED DDI numbers
Provided as an end-to-end fully managed service
Simple Management via online portal
Ability to add, move or edit users at the click of a button
Easy call management schedules for office hours and holidays
Flexibility to move office as all phones are plug and play
Customise features according to user needs
Flexible Auto Attendant and 'Press 1' menu options
Soft Phone (pc based) available
Increased business efficiency

Inbound numbers
Full range of inbound number types available including 020x, 03xx, 0800, 0844, 0845, 0870 and 0871
Have your own Virtual Reception to enhance efficiency and excel in customer service
Low monthly service rental and call charges





SALES@MONEXTELECOM.CO.UK
0207 402 2900
WWW.MONEXTELECOM.CO.UK

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JULY 24, 2015, ISSUE 246

## புதிய திசையில் பயணிப்பாரா விக்னேஸ்வரன்?

கடந்தவாரம் லண்டனுக்கு வந்திருந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் நடத்திய வருடாந்த சிறப்புரை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நீண்ட உரையாற்றினார். 2009ம் ஆண்டுக்கு பின்னர், தாயகத்திலிருந்து வந்த வேறெந்தத் தமிழ் அரசியல்வாதிக்கும் திரு. விக்னேஸ்வரனுக்கு கிடைத்தது போன்ற வரவேற்பு கிட்டவில்லை என்று கூறுமளவிற்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மக்கள் வெளிப்படுத்திய ஆதரவிலிருந்து அவதானிக்க முடிந்தது. இந்த வரவேற்பும், ஆதரவும் அவரது அண்மைக்காலச் செயற்பாடுகளினால் மட்டுமல்ல, அவர் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மீதுள்ள அதிருப்தியினாலும் ஏற்பட்டவை என்பதனை அவர் அறியாதிருக்க நியாயமில்லை.

செய்தியாளர் ஒன்றியத்தின் நிகழ்வில் திரு. விக்னேஸ்வரன் ஆற்றிய உரையில், தடம்மாறிச் செயற்படும் அரசியல்வாதிகளை நோக்கிச் சில ஆணித்தரமான கருத்துகளை அவர் வெளியிட்டிருக்கிறார். அவரது உரையில், தமிழ் மக்களுக்கு உரிதான தனித்துவ தேசிய அந்தஸ்து, சுயநிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகளை விடுத்து இலங்கைத்தமிழர் வெறும் சிறுபான்மையினம் என்ற வாதத்தைப் பயன்படுத்தும் எம்மவர் யாராக இருந்தாலும் அதனை அவர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் தமிழ் மக்களுக்கு உரிமைகளையும் நீதியையும் பெற்றுத்தர அர்ப்பணிப்போடு அவர்கள் செயற்பட முன்வரவேண்டும் எனவும் கோரியிருந்தார்.

இனஅழிப்பை வெளிக்கொணருந் தீர்மானத்தை வடமாகாணசபையில் நிறைவேற்றியதனைக் கண்டிக்கும் தமிழ் அரசியல்வாதிகளைச் சாடியதுடன், தமிழினத்துக்கு நடந்த இனஅழிப்பை வெளிப்படுத்தத் தயங்கும் அல்லது தடுக்கும் தமிழர்கள் தொடர்பாக அவர்களின் அரசியல் நெறி தொடர்பாக எமது மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும் எனவும் திரு. விக்னேஸ்வரன் கூறியிருந்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கைவிட்டு வெளித்தரப்புகளுக்கு விலை போகும் அரசியல்வாதிகளையிட்டு தனது அதிருப்பதியை வெளியிட்டுள்ளபோதிலும், யாரையும் பெயர்குறிப்பிட்டு அவர் இனங்காட்டவில்லை. எனினும், தமிழரசுக் கட்சியின் தலைமை, அதனுடன் சேர்ந்தியங்கும் அருட்தந்தை இமானுவலின் உலகத்தமிழர் பேரவை போன்றவற்றை நோக்கியே அவர் இக்குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார் என்பதனை இவ்விடயங்களில் ஆர்வமுடையவர்கள் விளங்கிக் கொள்வர். இவ்வரசியல்வாதிகளிடமிருந்து தன்னை விலக்கிக் கொண்டு திரு. விக்னேஸ்வரன் புதியபாதையில் செயற்படவேண்டும் என்பதே அவரை ஆதரித்து நிற்கும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

## ஒரு பேப்பர்

*வணக்கம் !*

*இரண்டு கிழமைக்கு ஒரு முறை உங்களைச் சந்திக்கிற நாங்கள் மூண்டு கிழமைக்கு பிறகு சந்திக்கிறம். இந்த மாதம் அஞ்சு வெள்ளிக்கிழமை வாறதுதான் இதுக்கு காரணம். அதுவும் வசதியாகப் போச்சுது. ஏனெண்டால் சிறிலங்காப் பாராளுமன்றத் தேர்தல் சம்பந்தமான சில விவரமான கட்டுரைகளை இந்தப் பேப்பரில் பிரசுரிக்க முடிஞ்சுது.*

*சிறிலங்காப் பாராளுமன்றத் தேர்தல் பற்றி கட்டுரை பிரசுரிக்கிறம் எண்டதும்தான் ஞாபகம் வருது. கிட்டடியிலை எங்களுக்கு போனடிச்ச தம்பி ஒருத்தர் சொன்னார். நீங்கள் பேப்பர் முழுக்க சிறிலங்கா அரசியலைத்தான் போடுகிறியள், இஞ்சை நடக்கிற விசயங்கள் ஒண்டையும் போடுறதில்லை எண்டு அடுக்கிக் கொண்டு போனார். தம்பி சொன்னது உண்மைதான் எண்டபடியால் நாங்களும் பொறுமையாக இருந்து கேட்டுக் கொண்டிருந்தோம்.*

*புலம் பெயர்ந்த நாடுகளிலை, குறிப்பாய் பிரித்தானியாவிலை கோயில் திருவிழாக்கள், புத்தக வெளியீட்டு விழாக்கள், அரங்கேற்றங்கள் போன்ற நிகழ்ச்சிகளை விட பல நிகழ்ச்சிகள் நடக்குது. அதிலை எங்கடை இளம் பெடி பெட்டையள் பங்குபற்றுகிறார்கள் எண்டது எங்களுக்குத் தெரியும். ஆனால் அதுபற்றின விபரங்களை யாரும் எங்களுக்கு அறியத்தருகிறதில்லை. நிகழ்ச்சிகளை நடத்திறவையும் எங்களுக்கு சொல்லிறதில்லை. ஆகவே இந்த நிகழ்ச்சிகளிலை பங்கு பற்றுகிறவைதான் இந்த விசயத்திலை எங்களுக்கு உதவ வேண்டும்.*

*ஒரு பேப்பர் துவங்கின காலத்திலை நாங்கள் 'ரீன் பேப்பர்' எண்டு ஒரு பகுதியை பிரசுரிச்சு வந்தது உங்களுக்குத் தெரியும். அந்தப்பகுதிக்கு பொறுப்பாய் இருந்தவை வளர்ந்து கலியாணம் கட்டி பிள்ளை குட்டியளோடை இருக்கினம். அதுக்குபிறகு அப்படியொரு குழுவை அமைக்க எங்களாலை முடியேல்லை எண்டதுதான் உண்மை. இந்த விசயத்தை இளம் ஆட்களுக்கு கொண்டு சென்று அவர்களை எங்களுடன் இணைத்துவிட்டால் அந்தத் தம்பி சொன்ன குறையை நிவர்த்தி செய்யலாம்.*

*அடுத்த பேப்பர் ஒகஸ்ட் 7ம் திகதி வருகிறது. சிறிலங்காப் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக உங்கடை கருத்துகளை சொல்லிறதற்கு அதுதான் இறுதிச் சந்தர்ப்பம் எண்டதாலை. தேர்தல் தொடர்பான உங்கடை கருத்துகளை அனுப்பி வையுங்கள். உங்கடை கருத்து எப்பிடியிருந்தாலும் அவற்றை நாங்கள் பிரசுரிப்போம்.*

***ஒரு பேப்பர்*** *பத்தாண்டு நிறைவு தொடர்பாக ஒரு நிகழ்ச்சி நடத்திறதாய் சொல்லியிட்டு நாங்கள் தொடர்ந்து ஏமாத்திக் கொண்டு வாறம் எண்ட குற்றச்சாட்டில் உண்மையிருக்கிறது. இப்ப பதினொரு வருசங்கள் முடிஞ்சிட்டுது. நாங்கள் ஏமாத்திறம் எண்டில்லை, ஆனால் ஏனோ நாட்கள் தள்ளிப்போய்க் கொண்டே இருக்குது. இருந்தாலும் கூடிய விரைவில் நடத்த முயற்சிக்கிறம்.*

*வேறை என்ன*

*அடுத்த பேப்பரில் சந்திப்பம்*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகள்*

# An Aimless TNA and the Disillusioned Tamils



**By M.K. Eelaventhan**

TNA, functioning like a tail during LTTE's reign, is still continuing to don this robe. TNA, a mixture of, EPRLF, TELO, PLOTE, and the Thamil Arasu Katchi is grappling with disunity, dissension, lack of direction, and objectives each pulling in different directions in the absence of a strong willed dynamic and aggressive leadership. Sampanthan is ailing in politics and he is finding it difficult to put up a unified approach, and working for a set of purpose and objective as expected from a strong leader who is unable to unite to keep his house in order.

TNA, after getting the mantle of Tamil leadership from June 2009, has failed miserably to advance the causes of the defeated and traumatized Tamils. Instead, they have been prodding and plotting to set up an agenda or goal needless to mention the lethargical and cavalier approach to the burning problems of Tamils.

Their listless records of performances so far do not augur well for the Tamils. Tamils are confused as to TNA targets or aims. Is it 13 or plus or something else? They have already provided a sworn affidavit renouncing separation and accepting the unitary form of present Sri Lankan government. This step has closed the doors to mount agitations for a two-states solution. It appears that no one is prepared to sacrifice office, power and privileges for the future existence of Tamils by agitating for self-determination. TNA has not succeeded in empowering the Northern provincial council with powers over land and police as provided for in the 13th amendment using their present flirtations with Maithiri. TNA has failed to obtain the release of even a single Tamil political prisoner, many languishing in jails for more than twenty years without charges. TNA has failed to reduce the presence of the army amounting to 150,000, though camps have been reduced from 193 to 137. Sri Lankan President has already confirmed the permanent presence of this army, brushing aside TNA or "Wigneswaran's requests". TNA has failed in its efforts to retrieve the civilian lands acquired by the army which is about 87 000 acres in the north. A token 400 acres have been released amidst pomp and pageantry filled ceremony by Maithiri. So far there is no word about the rest of the land. And this issue appears to be, a rest in peace situation.

The howling voices of Mahinda clan are now heard about the threat to national security by LTTE, which is already declared extinct by Gota and Mahinda in 2009 with about 1 army to 5 Tamils living in North. It is nothing but a fiction to accept this story unless the soldiers are also lending their assistance to the budding tigers or turning their eyes away. The naked truth is, Tamils and Tigers remain as the fodder for Sinhalese politicians and they will continue to thrive on this to remain in power and in politics.

TNA's lopsided and concealed meetings with Sri Lanka's government ministers earlier in Singapore and recently in London with one man Sumanthiran's participation have only boosted the image of Sri Lanka who also succeeded in creating divisions and dissensions among the powerful diaspora. These unholy flirtations ended with empty rhetoric from Sumanthiran who lashed out at his fellow TNA MPS. exposing the disunity of TNA. So far these meetings have drawn blank for the Tamils who are more confused than ever.

TNA's, friendly but unacceptable past gestures, raising lion flag, participating in independence day celebrations, appearing in court in support of the 19th amendment, have produced nothing but only humiliation for the TNA and Tamils.

TNA has failed miserably to avail the Maithiri's 100 day programme and even after to obtain any kind of relief for the Tamils not to mention any proposals towards political settlement or even any measures to perfect the limping Northern and Eastern provincial councils.

TNA representing the wounded Tamils is duty bound to mount agitations to obtain the healings from the offenders. Instead, TNA is adopting the "let us hope and wait" submissive approach which is not the historical trait of the Tamils.

TNA has not taken up the agonizing matter of more than 90,000 who are said to have disappeared. Even information as to their disappearance, who got killed, along with their numbers are hidden and shrouded in mystery. Thousands of Tamil women are living in a state of untold anxiety and mental agony to decide their lives as widows or live as wives separated from their husbands.

TNA appears to have abandoned the demand for an international independent investigation, which is now the only weapon for Tamils. TNA has abandoned the demand for a referendum as laid down in the UN charter also. TNA has weakened its standing as a united force by not registering it as a single political party. TNA is calling the Tamils to stand united while TNA itself stands divided and disunited to preserve its self-image and interests. Sampanthan knows "charity begins at home." For the sake of the future of Tamils, TNA should spell out its goals: even at least in the forth-coming elections, instead of emotional, political empty rhetorics to tap the votes of Tamils.

A murky political scenario is in the offing after the forthcoming elections. Possibilities are Maithiri as President and Mahinda as a Member of Parliament conniving to become Prime Minister Ranil, as opposition leader as usual, while TNA will be isolated and Muslim congress allying with whoever controls the power. The net result is Tamils will have to re-start the engine of politics from square one with all the trappings of uncertainties with its members pulling in different directions.

Communalism will dominate the Sinhalese's parties and politicians and the issues of Tamils will be preserved for future use exploitation .

# Sri Lankan president pledges to block rival



By Wasantha Rupasinghe

In a lengthy speech on Tuesday evening, Sri Lankan President Maithripala Sirisena assured critics that he remained completely opposed to former President Mahinda Rajapakse. He declared that he would use his presidential powers to block any attempt by Rajapakse to become prime minister through the August 17 parliamentary election.

Sirisena defeated Rajapakse in the January 8 presidential election in what amounted to a regime change operation backed by the US and India which are hostile to Rajapakse's close ties with China. Sirisena, who had been health minister, resigned to stand for the presidency with the backing of former President Chandrika Kumaratunga and United National Party leader Ranil Wickremesinghe, both of whom have close ties with Washington.

Sirisena was not expelled from the Sri Lanka Freedom Party (SLFP) and, as the country's president, has also assumed the post of SLFP leader. He has, however, been increasingly marginalised within the party by Rajapakse supporters as the country's economy has continued to deteriorate and opposition has grown over the minority UNP government's broken promises.

Sirisena won the January 8 election with the support a layer of academics, liberals, non-government organisations and pseudo-left groups such as the Nava Sama Samaja Party (NSSP) which denounced the Rajapakse "dictatorship," hailed Sirisena as a "democrat" and the election outcome as a "democratic revolution."

The announcement on July 3 that Sirisena had agreed to allow Rajapakse to stand as a candidate in the August 17 election for the SLFP-led United People's Freedom Alliance (UPFA) provoked bitter recriminations from these upper middle-class layers.

Nirmal Ranjith Devasiri, a spokesman for the Federation of University Teachers and a leader of Purawesi Balaya (Citizens' Power) declared: "We brought Maithripala Sirisena to power by helping to defeat Mahinda Rajapakse. He is now bringing him back… The one who was defeated and the winner are going to work together."

An editorial in the Sunday Times on July 5 was headlined "President waves the white flag and capitulates." A prominent Purawesi Balaya leader Gamini Viyangoda denounced Sirisena for "paving the way for Rajapakse to come to the parliament," declaring it to be the "greatest betrayal by a Sri Lankan state leader since independence."

Rajapakse represents sections of the ruling class who benefitted from the Chinese investment that flowed into the country after the defeat of the separatist Liberation Tigers of Tamil Eelam (LTTE) in 2009. Rajapakse has already criticised the government for blocking Chinese projects in Sri Lanka and has promised to restore them if he becomes prime minister.

These comments underscore the thoroughly anti-democratic character of these social layers. In effect, they were demanding that Sirisena use his position as SLFP president to prevent the party from nominating Rajapakse and his supporters as candidates in the parliamentary election.

Sirisena's speech on Tuesday was aimed at reassuring them that Rajapakse would not head the next government. He hailed "the democratic revolution that occurred on January 8" and pledged "to spend the next five years following election performing my duties by keeping the promises I made on January 8."

Sirisena provided a lengthy self-justification, saying that he had tried to retain control of the SLFP but had ultimately failed and was compelled to allow Rajapakse's nomination. He also claimed that by calling the election he had thwarted an SLFP conspiracy to use its parliamentary numbers to oust the minority UNP government and appoint Rajapakse as prime minister by providing him with a national list seat.

In answer to his critics, Sirisena declared: "I must state very clearly that in the upcoming election I have no association with Mahinda Rajapakse," adding that his opposition towards Rajapakse "still remains the same." He then insisted that he would not appoint Rajapakse as prime minster even if the UPFA won the election.

The willingness of Sirisena, like Rajapajkse, to use his sweeping presidential powers against a rival underscores the absurdity of the claim that a "democratic revolution" took place on January 8, as well as the declaration in his speech that he would "remain in a neutral position during the upcoming election."

Sirisena's speech was above all addressed to Washington, which, having backed the intrigues to oust Rajapakse in January, has no intention of allowing him to return as prime minister. The removal of Rajapakse was part of the US "pivot to Asia" to isolate China, encircle it militarily and ensure American hegemony throughout the region.

The displeasure in Washington over Rajapakse's nomination was reflected in the reaction among diplomats reported by the Sunday Times political columnist on July 5. "Members of the Colombo-based diplomatic community, particularly those from the West, were shocked and even shaken [by Rajapakse's nomination]," he wrote.

The bitter power struggle in Colombo has nothing to do with the defence of "democracy" but is bound up with Washington's intensifying war preparations against China and the country's deepening economic struggle.

Rajapakse represents sections of the ruling class who benefitted from the Chinese investment that flowed into the country after the defeat of the separatist Liberation Tigers of Tamil Eelam (LTTE) in 2009. Rajapakse has already criticised the government for blocking Chinese projects in Sri Lanka and has promised to restore them if he becomes prime minister.

Rajapakse is seeking to whip up anti-Tamil chauvinism, criticising the government for allowing the revival of the LTTE and calling for "the protection of the motherland."

Sirisena and his backers represent layers of the political establishment that are deeply concerned about the consequences of alienating the US and its European allies which Sri Lanka's largest export markets. They fear that as US-China tensions sharpen, Sri Lanka could become the target for American retaliation if it does not distance itself from China.

The fact that Rajapakse is able to make another bid for power reflects the growing popular hostility and opposition with Sirisena and the UNP-led government. Sirisena came to power promising a 100-day action plan to ease the pressure on living standards, but has broken many of his pledges. He calculated that distancing Sri Lanka from China would open the door for financial assistance, but the International Monetary Fund turned down the government's application for a new loan and insisted on further austerity measures.

In answer to his critics, Sirisena declared: "I must state very clearly that in the upcoming election I have no association with Mahinda Rajapakse," adding that his opposition towards Rajapakse "still remains the same." He then insisted that he would not appoint Rajapakse as prime minster even if the UPFA won the election.

In his speech, Sirisena declared that "democracy is blossoming" but he had no compunction in deploying the military into hospitals to try to break a recent strike by 47,000 health workers. Police commandos have been repeatedly unleashed against protests by university students. Similar crackdowns have taken place against Tamils protesting the ongoing military occupation in the North of the island. Last week Sirisena invoked the Press Council, which could be used to take action against the media and journalists.

The removal of Rajapakse was part of the US "pivot to Asia" to isolate China, encircle it militarily and ensure American hegemony throughout the region.

Sirisena's speech bluntly declaring his determination to thwart Rajapakse and his faction will only further fuel acrimony within the SLFP. Neither faction of the ruling elite represents the interests of the working class. Whatever the outcome of the August 17 election, the next government will not hesitate to use autocratic methods to impose the austerity demands of the IMF and international finance capital.

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

**BBK Partnership**
Croydon.................. 020 8150 9950

**Meera Arnold & Co**
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

**இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.**

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

*ஆசிரியர் குழு:*

*பிரித்தானியா*
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

*கனடா*
**தயா - அரவிந்தன் - சிந்து**

*பொறுப்பாசிரியர்*
**- கோபி -**

*விளம்பரம்*
**அஜந்தா**

*அச்சு*
**தர்சினி (கனடா) - சுகன்யா**

*வடிவமைப்பு*
**மயூரன் - யுகன்**

*முகப்பு வடிவமைப்பு*
**seven zero graphics**

*விளம்பர வடிவமைப்பு*
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

*தமிழ் எழுத்துரு உதவி*
**சுரதா யாழ்வாணன்**

*நிதி – நிர்வாகம்*
**அஜந்தா**

*வழங்கல்*
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**

**உங்கள் தொடர்புகட்கு:**

*தொலைபேசி* (Tel)
**லண்டன்** 020 7043 4310
**கனடா** 416 613 2850

*தொலைநகல்* **(Fax)**
**லண்டன்** 020 7043 4312
**கனடா** 416 438 7855

*ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:*

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

*மின்னஞ்சல்:*
**info@orupaper.com**
*இணையம்:*
**www.orupaper.com**

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# தமது கொள்கை நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி சொல்லிலும் செயலிலும் இயங்குபவர்களை அடையாளம் கண்டு தேர்ந்தெடுங்கள்

**- பிரதமர் வி.உருத்திரகுமாரன்**

சிறிலங்கா நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு நாடுகடந்த அரசாங்கத்தின் பிரதமர் திரு. வி.உருத்திரகுமாரன் விடுத்துள்ள அறிக்கையிலிருந்து சில முக்கிய கருத்துகளை இங்கு தருகிறோம்.

சிறிலங்காவின் நாடாளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் அங்கம் வகிப்பது சிறிலங்கா அரசின் சிங்கள பௌத்த இனவாத குணாம்சங்களை மாற்றியமைத்து விடப் போவதில்லை. சிறிலங்காவின் நாடாளுமன்றமே சிங்கள இனவாதத்தின் மையமாக இருந்து வருவதையும் தமிழ் மக்கள் நன்கறிவார்கள். சிங்கள பௌத்த மேலாண்மையை நிலைநிறுத்தும் சட்டங்களும், தமிழ் மக்களின் தேசிய வாழ்வைச் சிதைக்க வழிவகை செய்யும் சட்டங்களும் இந் நாடாளுமன்றத்திலேயே நிறைவேற்றப்படுகின்றன. இவ் வரலாற்றுக் காரணங்களின் பின்னணியில் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதனாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களாவதிலும் என்ன பயன் இருக்கிறது என்ற கேள்விகளும் கூட மக்கள் பலர் மனதில் உண்டு. மேலும் தமிழ் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை நிராகரிக்கும் வகையில் அமைந்த ஆறாவது திருத்தச் சட்டத்துக்கமைய உறுதிமொழி எடுத்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவேண்டியிருப்பதனையும் கொள்கைசார் முரண்பாடாகப் பார்க்கும் பார்வையும் பலரிடத்தில் உண்டு.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது தமிழ் மக்களின் அரசியற்தீர்வு குறித்து மக்கள் சுதந்திரமாக விவாதித்து முடிவெடுக்க வழிவகை செய்யும் வகையில் சிறிலங்காவின் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை உறுதியாகக் கொண்டுள்ளது. இருந்த போதும் தமிழ் மக்கள் நாடாளுமன்றத் தேர்தலில் தந்திரோபாய அடிப்படையில் பங்கு பெறுவது அவசியம் என்றே நாம் கருதுகிறோம். தேர்தல் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப் படுபவர்களையே மக்கள் பிரதிநிதிகளாக அனைத்துலக சமூகம் கருதுவதனால்? தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கி நகர்த்தக் கூடியவர்களை மக்கள் தமது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்தல் இங்கு அவசியமானது.

தற்போது நடைபெறவுள்ள தேர்தல் ஜனவரி 8ஆம் திகதி நடந்தேறிய ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடைபெறும் முதலாவது பொதுத் தேர்தலாகும். இப் பொதுத் தேர்தல் ஆட்சி மாற்றத்தின் பின் குறுகிய காலத்தில் இடம் பெறுவதனால் இதனை ஆட்சி மாற்றத்தின் தொடர்ச்சியாகக் கருதுவோரும் உளர். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை ஒற்றையாட்சிக்குட்பட்ட வகையில் கையாள்வதும் தமிழின அழிப்புக்கெதிரான அனைத்துலக விசாரணைக்குப் பதிலாக அதனை உள்நாட்டு விசாரணையாகச் சுருக்கிக் கொள்வதும் ஆட்சி மாற்றத்தின் பின் பதவிக்கு வந்தோரினது திட்டங்களாகவே உள்ளன. இந் நிலையில்? எந்தச் சிங்களக் கட்சியின் தலைமையிலான அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறினாலும் அவர்கள் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தினைப் பாதுகாப்பவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிரப்பக்கூடிய தீர்வுஎதனையும் 2016ஆம் ஆண்டுக்குள் பெறமுடியும் எனத் தமிழர் தலைமைகள் கற்பனையில் மூழ்கக் கூடாது. மக்கள் மத்தியில் பொய்யான நம்பிக்கைகளை விதைக்கவும் கூடாது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதில் உறுதியாகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். எம்மை சிங்களத் தலைமைகள் மட்டுமல்ல, தமிழ்த் தலைமைகளும் ஏமாற்றுவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. தமக்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் இருக்கக்கூடியவர்களை இத் தேர்தலில் மக்கள் தமது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு தவறான முடிவுக்கும் நாம் பின்னர் விலை கொடுத்தாக வேண்டும் என்பதனையும் மக்கள் கவனத்திற் கொள்வார்கள் என்றே நாம் நம்புகிறோம்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினைப் பொறுத்த வகையில் நாம் இந் நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் வாக்களியுங்கள் என்று மக்களைக் கோரப் போவதில்லை. தேர்தலுக்குப் பின்னர் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஈழத் தமிழர் தேசம் அரசியல் இராஜதந்திர வழியில் தீவிரமாகப் போராட வேண்டிய நிலை வரும். தமிழின அழிப்புக்கு எதிரான அனைத்துலக விசாரணையை உள்நாட்டு விசாரணையாகச் சுருக்கும் முயற்சிக்கு எதிராகக் கடுமையாகப் போராட வேண்டி வரும். இப் போராட்டத்தில் ஈழத் தாயகம், புலம் பெயர் தமிழ் மக்கள், தமிழகம் மற்றும் உலகத் தமிழ் மக்கள் அனைவரும் கைகோர்த்து ஈடுபட வேண்டியது அவசியமானதாக இருக்கும். இதனால் இத் தேர்தலில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உண்மையாக உழைக்கக்கூடியவர்களை மக்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இத்தகையவர்களை அடையாளம் காண்பதற்கு அவர்கள் முன்வைக்கும் கொள்கைகளை, நிலைப்பாடுகளை மக்கள் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். அவர்களது சொல்லிலும் செயலிலும் ஒருமைப்பாடு உண்டா என்பதனையும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

இத் தேர்தலில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய கொள்கை நிலைப்பாடுகள் சிலவற்றை நாம் மக்கள்முன் வைக்க விரும்புகிறோம்.

**1.** எந்தவொரு அரசியல் தீர்வும் திம்புக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். வட மாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தியுள்ளமையினை நாம் வரவேற்கிறோம்.

**2.** தமிழ் மக்களின் தேசியப்பிரச்சினைக்கான எந்தவொரு அரசியல் தீர்வும் தாயகத்திலும் புலத்திலும் வாழும் ஈழத் தமிழர் தேசத்தவரிடையே மக்கள் வாக்கெடுப்புக்கூடாகத் தீர்மானிக்கப்பட வேண்டும்.

**3.** தமிழின அழிப்புத் தொடர்பாக அனைத்துலக விசாரணை நடைபெற வேண்டும் என்பதில் உறுதியாக இருத்தல் வேண்டும். இந் நிலைப்பாட்டின் பிரதிபலிப்பாக வட மாகாணசபையால் நிறைவேற்றப்பட்ட தமிழின அழிப்புத் தீர்மானத்துக்குப் பகிரங்கமாக ஆதரவு வழங்கிச் செயற்பட வேண்டும். அனைத்துலக நிபுணர்கள் பங்கு பற்றும் விசாரணைப்பொறிமுறை எதுவும் சிறிலங்கா சட்டங்களுக்கு அமைய நடைபெறலாமெனப் பரிந்துரைக்கப்படின் அதனை உள்நாட்டு விசாரணையாகவே கருதி நிராகரிக்க வேண்டும்.

**4.** சிறிலங்கா பௌத்த பேரினவாத அரச கட்டமைப்பால் ஈழத் தமிழர் தேசம் மீது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் கட்டமைப்புசார் இன அழிப்பைத் தடுத்து நிறுத்தவும், புலம் பெயர் மக்கள் அச்சமின்றித் தமிழர் தாயகப் பகுதியின் மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடத் துணை செய்யும் வகையிலும் அனைத்துலகப் பாதுகாப்புப் பொறிமுறையொன்று அமைக்கப்பட வேண்டும்.

**5.** தமிழர் தாயகப் பகுதியில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும்.

இந்த ஐந்து நிலைப்பாடுகளையும் ஏற்று அவற்றின்படி சொல்லால் மட்டுமன்றி செயலாலும் உண்மையாக, விசுவாசமாக இயங்குபவர்கள் யார் என்பதனை அடையாளம் கண்டு அவர்களைத் தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்குமாறு மக்களை இத்தருணத்தில் வேண்டிக் கொள்கிறோம்.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## எல்லாம் ஒருநாள் முடியும்!

இது வரை படித்த பாடங்கள் எல்லாம் வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் வாழ வழி காட்டுபவை. நிறைவாகவும், மகிழ்ச்சியாகவும் வாழக் கற்றுக் கொடுப்பவை. இந்தப் பாடங்களைப் புரிந்து கொள்வது சுலபம். ஆனால் இவற்றை வாழ்ந்து காட்டுவது சுலபமல்ல. பெரும்பாலானோரும் சில பாடங்களில் தேர்ச்சி பெற்று விடுகிறோம். சிலவற்றிலோ பற்பல முறைகள் சறுக்கி விடுகிறோம். எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்றுச் சிறப்புப் பெறுவது யதார்த்த உலகில் அவ்வளவு எளிதான விஷயமல்ல என்பதை வாழ்ந்து பார்க்கும் போது தான் நமக்குப் புரிகிறது. எல்லாப் பாடங்களையும் கற்றுக் கடைப்பிடிக்க ஒரு வாழ்நாள் போதுமானதாக இருப்பதில்லை என்பதையும் பலர் உணர்கிறார்கள்.

இந்தப் பாடம் வெற்றிகரமான சிறப்பான வாழ்க்கைக்கல்ல. வெற்றியோ, தோல்வியோ, நிறைவான வாழ்க்கையோ, குறைவான வாழ்க்கையோ, மொத்தத்தில் மன அமைதியை உணர வைக்கும் பாடம். அது தான் எல்லாம் ஒரு நாள் முடியும் என்றுணர்வது!

ஏகநாதர் என்ற ஞானி வாழ்ந்து வந்தார். அவர் முகத்தில் எப்போதும் அமைதியும், புன்னகையும் தவழும். அவரை நீண்ட நாட்களாகக் கவனித்து வந்த ஒரு மனிதருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் பல ஆன்மிக வாதிகளைப் பார்த்திருக்கிறார். ஆனால் இந்த அளவு தொடர்ந்து அமைதியாக இருக்க முடிந்த ஆட்களைப் பார்த்ததில்லை. ஒரு முறை அமைதியாக இருக்க முடிந்த நபர் இன்னொரு முறை அமைதியாக இருப்பதில்லை. இப்படி எதிலேயும் பாதிக்கப்படாமல் தொடர்ந்து அமைதியாக இருக்க முடிவது என்றால் அதில் ஏதோ ரகசியம் அல்லது சூட்சுமம் இருக்க வேண்டும் என்று நினைத்தார்.

ஒரு நாள் அதை அவர் ஏகநாதரிடம் சென்று கேட்டே விட்டார். "சுவாமி உங்களால் எப்படி இப்படி அமைதியாக, எதிலும் பாதிக்கப்படாமல் இருக்க முடிகிறது? இப்படி முடிவதன் ரகசியம் என்ன?"

ஏகநாதர் அவரையே உற்றுப் பார்த்து விட்டு "நீ உன் கையைக் காட்டு" என்றார். அந்த மனிதரும் தன் கையை நீட்டினார். அவரது ரேகைகளை ஆராய்ந்த ஏகநாதர் "உனக்கு இன்னும் ஏழு நாட்கள் ஆயுள் தான் பாக்கி இருக்கிறது" அந்த மனிதருக்கு அதிர்ச்சி. ஏதோ கேட்க வந்து ஏதோ கேட்க நேர்ந்ததே என்று மனம் நொந்தார். ஏகநாதரின் அமைதியின் ரகசியம் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை விட அதிகமாய் சுய பச்சாதாபம் அவருக்குள் வந்தது. ஞானிகள் எக்காலத்தையும் அறிய வல்லவர்கள் என்பதால் அவருக்கு ஏகநாதர் சொன்னதில் எந்த சந்தேகமும் இல்லை. அவசரமாக வீட்டுக்குச் சென்றார். மனைவி மக்களிடம் தகவலைச் சொன்னார். குடும்பம் அழுதது. அவரும் வருத்ததில் ஆழ்ந்தார். ஆனால் அழுது புலம்பி எந்தப் பயனும் இல்லை என்பதை உணர்ந்த அந்த மனிதர் வருத்தத்தை எல்லாம் சீக்கிரமே மூட்டை கட்டி வைத்து விட்டு சாவதற்குள் செய்து முடிக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய ஆரம்பித்தார்.

ஏகநாதர் சரியாக ஒரு வாரம் கழித்து அந்த மனிதரை அவர் வீட்டில் சந்தித்தார். அந்த மனிதர் மிகுந்த அமைதியுடன் இருந்தார். "நான் செய்ய வேண்டியதை எல்லாம் செய்து விட்டு மரணத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்." ஏகநாதர் சொன்னார். "நீ இப்போது எந்த மன நிலையில் இருக்கிறாயோ அதே மனநிலையில் நான் என்றும் இருக்கிறேன் மகனே. மரணம் வரும், எல்லாம் முடிந்து போகும் என்ற உண்மையை உணர்வதால் கிடைக்கும் அமைதியே அலாதியானது அதற்குப் பிறகு எதுவும் பெரிய விஷயமாகத் தோன்றுவதில்லை. எதுவும் அதிகமாக பாதிப்பதில்லை. இதைச் சொன்னால் புரியாது,அனுபவத்தில் மட்டுமே உணர முடியும் என்பதற்காகத் தான் நான் உன் கேள்விக்குப் பதிலாக உன்னிடம் ஏழுநாட்கள் மட்டுமே ஆயுள் பாக்கி உள்ளது என்றேன். உண்மையில் உனக்கு தீர்க் காயுள் இருக்கிறது. நீ நீண்ட காலம் வாழ்வாய்" என்று சொல்லி விட்டு வாழ்த்தி விட்டுச் சென்றார். ஏகநாதர் சொன்னது உண்மையே. மரணம் எந்நேரமும் வரலாம் என்று தத்துவம் பேசுகிறோமே ஒழிய, அந்த உண்மை நம் அறிவிற்கு எட்டுகிறதே ஒழிய, அது நம் ஆழ் மனதிற்கு எட்டுவதில்லை.

நாம் வழிப்போக்கர்கள். அவ்வளவே. வந்தது போலவே இங்கிருந்து ஒருநாள் சென்றும் விடுவோம். அதனால் இங்கு இருக்கும் வரை, முடிந்த வரை எல்லாவற்றையும் முழு மனதோடு செய்யுங்கள். இது வரை சொன்ன பாடங்களைப் படித்துணர்ந்து சரியாகவும் முறையாகவும் வாழும் போது வாழ்க்கை சுலபமாகும், நாமாக விரித்துக் கொண்ட வலைகளில் சிக்கித் தவிக்க நேராது. அது முடிகிறதோ, இல்லையோ அதற்குப் பின் வருவதில் பெரிதாக மன அமைதியிழந்து விடாதீர்கள். ஏனென்றால் எல்லாம் ஒரு நாள் முடியும்!

*- என்.கணேசன்*

# தமிழ் வாக்காளர்கள் அறிவுபூர்வமாகச் சிந்தித்து வாக்களிப்பார்களா ?




**கோபி**
*ஒரு பேப்பர்*

கடந்த இதழில் வெளியான இப்பத்தியில் தமிழ் அரசியலில் ஒரு மாற்றம் வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு, மாற்றுத் தெரிவாகவுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்போது தேர்தல் பரப்புரைகள் சூடுபிடித்துள்ள நிலையில், தமிழ் அரசியற் கட்சிகளினால் வெளியிடப்படும் உண்மைக்கு புறம்பான கருத்துகள், உறுதிமொழிகள் பற்றி இப்பத்தி கவனத்தைச் செலுத்துகிறது. தமிழ் வாக்காளர்கள் அறிவுபூர்வமாகச் சிந்தித்து இத்தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்பதும் அதற்கு தமிழ் ஊடகங்கள் உதவிட வேண்டும் என்பதுவுமே இங்குள்ள எதிர்பார்ப்பு.

இம்முறை தேர்தல் பரப்புரைகளில் தமிழ்த் தேசியக் கருத்துகள் முன்னரை விட அதிகமாக வெளியிடப்படுவதாகத் தெரிகிறது. தமிழ் தேசியக் கருத்துகளில் உறுதியாகவிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைக் காட்டிலும் தாங்கள் அதிகமான தேசியவாதிகள் போன்று காட்டுவதற்கு கூட்டமைப்பின் வேட்பாளர்களும், யாழ் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிடும் விஜயகலா மகேஸ்வரனும் முயற்சிக்கின்றனர். இப்போது ‘இனப்படுகொலை’, ‘சர்வதேச விசாரணை’ போன்ற விடயங்கள் விவாதத்திற்கு இடமில்லாத வகையில் இத்தரப்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் சர்வதேச அமைப்புகளின் அனுசரணையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எல்லாம் ‘இனப்படுகொலை’ என்ற சொல்லை உச்சரிக்க மறுத்த கூட்டமைப்பின் தலைமை, இனப்படுகொலைத் தீர்மானத்தை கொண்டுவர வேண்டாம் என தமது கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு அறிவுறுத்தியமை வாக்களார்களுக்கு நினைவிலிருக்கலாம். ஆனால், இப்போது தேர்தல் பரப்புரைகளில் ‘இனப்படுகொலை’ என்ற சொல்லை வைத்து வாக்குக் பொறுக்க முற்படுகிறது கூட்டமைப்பு.

இனி, மாவீரர் புகழ்பாடுவதும், தேசியத்தலைவரின்புகழ்பாடுவதும்கூட நடைபெறலாம். ஏற்கனவே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தனது இணையதளத்தில் (http://www.shritharan.com/?p=6123) “தமிழ் தேசியத்தின் அடையாளம் தலைவர் பிரபாகரனும் போராளிகளுமே !” என்று பிரசுரித்துள்ளார். இதற்கிடையில், அடுத்தவாரம் வெளியிடப்படவிருக்கிற கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் திம்புக் கோடுபாடுகளின் அடிப்படையில் தீர்வினை வலியுறுத்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் உறுதிப்படுத்த முடியாத தகவல்கள் தெரிவிக்கின்றன. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கிற அத்தனை கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட திம்புப் பேச்சவார்த்தையில் ஒருமனதாக கொண்டுவரப்பட்ட இப்பிரகடனம் இதுவரை காலமும் கிடப்பில் போடப்பட்டிருந்தது. தேர்தல்காலத்தில் மாத்திரம் அது தூசி தட்டி எடுத்துவரப்படுகிறது என்பதனை வாக்காளர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும்.

### அதிகரித்த பிரதிநிதித்துவத்துவம் அரசியல் தீர்வினைப் பெற்றுக் கொடுக்குமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு. சம்பந்தன் இந்தத் தேர்தலில் தங்களது ஆசனங்களை அதிகரித்துக் கொள்வதன் மூலம் சிறிலங்காக அரசாங்கத்துடன் பேரம் பேசலில் ஈடுபடமுடியும் எனக் கூறியுள்ளார். 225 அங்கத்தவர்களை கொண்ட சிறிலங்காப் பாராளுமன்றத்தில் அதிகபட்சமாக 22 ஆசனங்களையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கைப்பற்ற முடியும். இச்சிறுதொகையான நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்துத் தனியான சட்டமூலம் எதனையும் அதனால் நிறைவேற்ற முடியாது. ஆனால் இத்தேர்தலில் இரண்டு பெரும்பான்மை சிங்களக் கட்சிகளும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் அக்கட்சிகளுடன் பேரம் பேசி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகரித்த பிரதிநித்துவம் உதவக் கூடும். இதைத்தவிரவும், தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளைப் பாராளுமன்றத்தின் மூலம் பெற்றுக் கொள்ளவதற்கு அதிகரித்த பிரதிநிதித்துவம் உதவப்போவதில்லை.

### ஒற்றுமைக் கோசம்

ஒடுக்கப்படுகிற ஒரு தேசிய இனம், அதுவும் இனவழிப்பிற்கு உள்ளாக்கப்படுகிற இனம் ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலமே அதன் அரசியல் இலக்கினை அடையமுடியும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்கப்போவதில்லை. ஆனால் அத்தகைய ஒற்றுமை தேர்தலில் வாக்களிக்கும் விடயத்திற்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையையே இங்கு அவதானிக்க முடிகிறது. கொள்கையளவில் உடன்பட முடியாத கட்சிகளும், தனிநபர்களும் வாக்குகள் பிரியாமலிருப்பதற்காக ஒற்றுமைப்படுவது சந்தர்ப்பவாதச் செயற்பாடே தவிர, இனத்தின் நலனை முன்னிறுத்திய தூர நோக்கான செயற்பாடு அல்ல என்பதனை தமிழ் வாக்காளர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையேயும், அதன் அங்கத்தவர்களிடையேயும் காணப்படும் முரண்பாடுகளை வெறும் கருத்து வேறுபாடுகள் எனக் கடந்து செல்ல முடியாது. ஏனெனில் முதன்மையான அரசியல் நிலைப்பாடுகளிலையே அவர்களுக்கிடையில் நேரெதிரான கருத்துகள் காணப்படுகின்றன. உதாரணத்திற்கு ஒன்றைக் கூறலாம். தேசியப்பட்டியலில் நியமிக்கப்பட்ட சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் ஐ.நா. அறிக்கை தொடர்பாக உள்ளக விசாரணையை ஆதரித்து நிற்க, மற்றையவர்கள் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதாகக் கூறி வருகிறார்கள்.

### தேசியத் தலைவர் உருவாக்கிய அமைப்பா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பவர்கள் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டில் முதன்மையானது, தேசியத்தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பை உடைக்க முற்படுகிறார்கள் என்பது. ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் அவர்களின் முயற்சியினால் தமிழ் அரசியற்கட்சிகளை இணைத்து உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டிருந்தது. அந்தவகையில் தேசியத்தலைவர் அவர்களது ஆதரவு கூட்டமைப்பிற்கு இருந்தது. ஆனால் மே 2009 க்கு பின்னரான காலத்தில், புலிநீக்க அரசியலை முன்னெடுக்கும் கூட்டமைப்பின் தலைமையானது தமக்குக் கிடைத்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் விடுதலைப் புலிகள் அமைப்பையும், தேசியத்தலைவரையும் கொச்சைப்படுத்த பின்நிற்கவில்லை. கொழும்பிலிருந்து வெளியாகும் Ceylon Today பத்திரிகைக்கு அண்மையில் சுமந்திரன் வழங்கிய செவ்வியில் ‘விடுதலைப் புலிகளுக்கோ, விடுதலைப் புலிகளின் கொள்கைகளுக்கோ நாம் விசுவாசமுள்ளவர்கள் அல்ல. மாறாக, நாம் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராடி வருகின்றோம் என்பதற்காக பயங்கரவாதத்தினை ஆதரிப்பவர்களோ, ஊக்குவிப்பவர்களோ அல்ல, இதை யாவரும் அறிவர்’ எனக் கூறியிருந்தார்.

தேர்தல் வரும்போது விடுதலைப்புலிகளையும் தேசியத்தலைவரையும் புகழ்ந்து வாக்காளர்களை ஏமாற்றி வாக்குச் சேர்ப்பதனைத் தவிர, தற்போதுள்ள கூட்டமைப்பிற்கும், தேசியத்தலைவரின் வழிகாட்டலை ஏற்றுக்கொண்ட முன்னைய கூட்டமைப்பிற்கும் இடையில் பாரிய கொள்கை வேறுபாடுகள் உள்ளன என்பதனை வாக்காளர்கள் கவனத்திற் கொள்ளவேண்டும்.

### சமஸ்டித் தீர்வை பெற்றுக் கொடுப்பார்களா?

பதின் மூன்றாம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான தீர்வினை ஏற்றுக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களுக்கு, தாம் ஒரு சமஸ்டித் தீர்வினையே வேண்டி நிற்பதாகக் கூறிவருகிறது. இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் மைத்திரிபால - ரணில் கூட்டரசாங்கம் இவ்விடயத்தில் தம்முடன் இணங்கியுள்ளதாகவும், தமக்கிடையில் எழுதப்படாத இதயங்களுக்கிடையிலான ஒப்பந்தம் ஒன்று இருக்கிறது என்றும் கூறி வருகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒற்றையாட்சி முறையை வலியுறுத்தவில்லை எனவும் அது அவர்களது சிந்தனை மாற்றத்தைக் காட்டுவதாகவும் சுமந்திரன் கூறிவருகிறார். ஆனால் ஜனாதிபதித் தேர்தலிற்கு முன்னர் மைத்திரிபாலவிற்கும் ஜாதிக ஹெல உருமயவிற்கும் இடையிலான எழுத்து மூலமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தான் பதவிக்கு வந்தால் ஒற்றையாட்சி முறையை மாற்றப் போவதில்லை என்ற உறுதிமொழியை மைத்திரிபால வழங்கியிருந்தார். ஒரு வேளை தேர்தலுக்கு பின்னர் அவர் தனது நிலைப்பாட்டை மாறிவிட்டார் எனக் கருதுபவர்களுக்கு சந்தேகத்திற்கு இடமின்றி அதனை நிரூபிக்கும் வகையில் அண்மையில் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஜாதிக ஹெல உருமயவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் ஒற்றையாட்சி முறை மாற்றப்பட மாட்டாது என்ற உறுதிமொழி வழங்கப்பட்டிருக்கிறது. சிங்கள அரசியற் தலைவர்கள், தமிழ் மக்கள் விடயத்தில் தமக்கு வாக்களித்த மக்களுக்கு விரோதமாக செயற்படுவதற்கு என்ன முகாந்திரம் இருக்கிறது என்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்தான் மக்களுக்கு விளக்கவேண்டும்.

### சர்வதேசத்திற்கு செய்தி சொல்ல வேண்டாமா?

தாம் போட்டியிடும் எல்லாத் தேர்தல்களிலும், தம்மை வெற்றியடைச் செய்வதன் மூலம் சர்வதேசத்திற்கு ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும் என கூட்டமைப்பின் தலைமை கூறிவருவதனை வழமையாகக் கொண்டிருக்கிறது. 1977இல் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை தமது தேர்தல் விஞ்ஞாபனமாகக் கொண்டு “தமிழர் விடுதலைக் கூட்டணி” ஆக போட்டியிட்ட காலத்திலிருந்து இவ்வாறான தந்திரத்தை தமிழரசுக்கட்சியினர் பயன்படுத்தி வருகிறார்கள். கடந்த நாற்பது ஆண்டுகளில் இவர்களுக்கு வாக்களித்ததன் மூலம் தமிழ் மக்கள் என்ன செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள்? அதனைப் புரிந்துகொண்டு சர்வதேச சமூகம் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது? அரசியற் தீர்வினை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறதா ? எதுவுமில்லை என்பதுதான் இக்கேள்விகளுக்கான பதில் என்றால், கூட்டமைப்பினரை வெல்லவைத்ததன் மூலம் பொய்யா வாக்குறுதிகளை வழங்கித் தமிழ் வாக்காளர்களைத் தொடர்ந்து ஏமாற்ற முடியும் என்ற ஒரே ஒரு செய்தியைத்தான் இதுவரை சர்வதேசத்திற்கு தமிழ் வாக்காளர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்நிலையில், ஒகஸ்ட் 17ம் திகதி வழங்கும் வாக்குகள் மூலம் தாம் அறிவுபூர்வமாகச் சிந்தித்து வாக்களிப்பவர்கள் என்பதனை சர்வதேசத்திற்கு செய்தியாகச் சொல்வதற்கு தமிழ்வாக்காளர்கள் முன்வரவேண்டும்.

**ஒரு பேப்பர்**
**கிடைக்குமிடங்கள்**

**New Malden**
Ayngaran .............. 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ............... 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House .......... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Selvarajah Gold house 020 8767 3795
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran ............... 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ................ 020 8540 8192

**Croydon**
Best Foods.............. 020 8684 6269
Haran Bros.............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video............ 020 8664 8351
Spice Land.............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ........... 020 8690 6545
Katpagam .............. 020 8694 8810
AJ Video ................ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS Supermarket ... 020 8297 9432
Best Food .............. 020 8692 9811

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple...... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food .............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033
Anjappar ................ 020 8552 1155

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan.................... 020 8514 1744
Angels ................... 020 8553 0490
Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .............. 020 7609 1912
Prabas ................... 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
North Harrow C&C.. 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc.......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha ................... 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Abi Fast Food ......... 0208 813 9494
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret.......... 020 8571 4434


THE MORTGAGE ORGANISATION
AUTHORISED BY THE FINANCIAL CONDUCT AUTHORITY
Contact:
David Eva
OR
Ernest Sri
258- High Street North
Manor Park, London E12 6SB
Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755
Mob: 07803 600 543
RESIDENTIAL MORTGAGES & COMMERCIAL MORTGAGES
Commercial Loans
• Petrol Stations, Social Clubs
• Hotels, Restaurants &
• Takeaways
• Convenience Shops
• Pharmacies, Care Homes,
• Optician, Dentist
• Children Nurseries
Residential Mortgages
• Re-Mortgages
• Buy to Let
• Bridging Loans
• Right to Buy
• Help to Buy
Loans can be arranged for leasehold and freehold businesses
Arrangements are made to meet senior business manager from leading banks in our premisesTHE MORTGAGE ORGANISATION
How will a 'YES' make you feel ?
YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE


www.poojasweets.com
Best Quality Vegetarian Food for Any Occasions!
5% OFF
ON-LINE PURCHASES
ENTER:
"ORUPAPER "AT
CHECKOUTS!
...tempting?
discover a new heaven on earth:
ORDER ON LINE
FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!*
We also do International deliveries*
*Terms apply. See online for details
POOJA
SWEETS & SAVOURIES
The Taste That You Will Love, The Quality That You Can Trust
TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com
KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com

# தேர்தலில் தாக்கத்தை செலுத்துமா முதலமைச்சரின் லண்டன் உரை ?



நிர்மானுசன் பாலசுந்தரம்

திம்புக் கோட்பாடு வெளிவந்து கடந்த யூலை 13ம் திகதியோடு முப்பது வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது. எதிர்வரும் யூலை 23ம் திகதி, தமிழின அழிப்பின் ஒரு முக்கிய அங்கமான கறுப்பு யூலையின் முப்பத்தியிரண்டாவது ஆண்டு நினைவு. யூலை 29ம் திகதி இந்திய - சிறிலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருபத்தெட்டு வருடங்கள் நிறைவடைகிறது. இதேவேளை, ஒகஸ்ட் மாதம் 17ம் திகதி இலங்கைத் தீவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த தேர்தல் தமிழர் தேசத்துக்கும் சிங்கள தேசத்துக்கும் முக்கியமான ஒரு தேர்தலாக அமைந்துள்ளது. மகிந்த ராஜபக்ச மீண்டும் அரியணையேறுவாரா, சிறிலங்கா சுதந்திரக் கட்சி பலவீனமடையுமா, ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் எழுச்சி பெறுமா போன்ற பல்வேறு கேள்விகள் சிங்கள தேசத்தை மையப்படுத்தி நீள்கிறது. அதேவேளை, முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற தமிழின அழிப்புக்குப் பின்னர், ஒப்பீட்டளவில் போதிய தயார்ப்படுத்தல்களுடன் தமிழர் தேசம் இந்த தேர்தலை சந்திக்கவிருக்கிறது.

தமிழர் தேசத்தைப் பொறுத்தவரை, 'தமிழ்த் தேசிய' அடையாளத்தோடு தமிழரசுக்கட்சியின் வீட்டு சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய கூட்டமைப்பும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் முக்கிய போட்டியாளர்களாக தேர்தல் களத்தில் குதித்துள்ளன. ஆயினும், தமிழ் தேசிய கூட்டமைப்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உடையோர், தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மையினம் மற்றும் சிறிலங்கர் என்ற நிலைப்பாட்டுடனுள்ளனர். அத்துடன், இனஅழிப்பு தொடர்பான உறுதியான தீர்மானங்களை கூட்டாக எடுப்பதற்கு தயங்கியும் தவிர்த்தும் வருகின்றனர். அதேவேளை, தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழர்களாகிய நாம் ஒரு தேசம், தமிழ் மக்களுக்கு இடம்பெற்றது இன அழிப்பு என்பதை தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் வலியுறுத்தி வருகின்றது.

இத்தகைய நிலையிலேயே, பிரித்தானியாவுக்கு பயணம் செய்துள்ள வட மாகாண சபை முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள், சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் நிகழ்வில் ஆற்றிய சிறப்புரை தமிழ் அரசியலில் முக்கியத்துவம் பெறுகிறது.

## திம்பு கோட்பாடு

தேர்தல் விஞ்ஞாபனங்களை இதுவரை எந்த தமிழ் அரசியற் கட்சியும் வெளியிடவில்லை. ஆயினும், தேர்தல் விஞ்ஞாபன தயாரிப்பில் இக்கட்சிகள் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகிறது. இத்தகைய சூழலிலேயே, 'அரசியல் தீர்வுத் திட்டங்களைத் தயாரிப்போர் திம்புக் கோடுபாடுகளை மனதிற்கொண்டு செயலாற்ற வேண்டும். சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்' என்று நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார். தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது திம்பு கோட்பாடு. திம்பு கோட்பாட்டின் அடிப்படையில் தேர்தல் விஞ்ஞாபனம் அமைவது தமிழர்களின் பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கும். சிங்கள தேசம் எதனை தர தயாராக இருக்கின்றது என்ற அடிப்டையில் தமிழர்களுடைய செயற்திட்டங்களை வகுக்க முடியாது. மாறாக, தமிழர்களுக்கான உரிமையையும் நீதியையும் அடைவதற்கான உபாயங்களின் அடிப்படையிலான செயற்திட்டங்கள் முன்னெடுக்க வேண்டும். தோல்விமனப்பான்மை உடையோருக்கு இது எட்டாக் கனியாகத் தெரியலாம். அரசியலென்பது சாத்தியமற்றதை சாத்தியமாக்குகின்ற சவாலான பயணம். தளராத தன்னம்பிக்கையுடன், அடிப்பணிவின்றி தொடர்ச்சியாக செயற்படுவதனாலேயே இதனை செயற்படுத்தமுடியும்.

## நாம் சிறுபான்மையினம் இல்லை

சிறுபான்மையினம் என்ற வாதம் தமிழர்களின் அரசியல் அடைவிலக்குகளை திசை திருப்புவதற்காக அண்மைக்காலமாக தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழலில், தமிழர்கள் சிறுபான்மையினம் இல்லை என தனதுரையில் குறிப்பிட்டு அதற்கான வரலாற்று ஆதாரங்களை முன்வைத்தார் நீதியரசர். '1921ம் ஆண்டில் சிங்கள மக்கட் தலைவர்கள் சேர் ஜேம்ஸ் பீரிசும், ஈ.சமரவிக்கிரம என்பவரும் வடகிழக்கு மாகாணங்களில் தமிழ்பேசும் மக்களே பெரும்பான்மையினர் என்றும் மற்றைய மாகாணங்களில்தான் சிங்களம் பேசும் மக்கள் பெரும்பான்மையினர் என்றும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இதை எதற்காகக் குறிப்பிடுகின்றேன் என்றால் நாங்கள் எங்கிருந்தோ வந்து சேர்ந்த சிறுபான்மையினர் அல்ல. அதாவது வேறெங்கோ இருந்து விரட்டப்பட்டதால் இங்கு வந்து குடியேறிய சிறுபான்மையினர் அல்ல. எமக்குரித்தான தனித்துவ தேசிய அந்தஸ்து, சுயநிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகளை விடுத்து இலங்கைத்தமிழர் வெறும் சிறுபான்மையினம் என்ற வாதத்தைப் பயன்படுத்தும் எம்மவர் யாராக இருந்தாலும் அதனை அவர்கள் தவிர்க்க வேண்டும். தமிழ் மக்களுக்கு உரிமைகளையும் நீதியையும் பெற்றுத் தர அர்ப்பணிப்போடு அவர்கள் செயற்பட முன்வரவேண்டும்' என முதலமைச்சர் தனதுரையில் குறிப்பிட்டார்.

## நடந்தது தமிழின அழிப்பே

கடந்த பெப்ரவரி மாதம் 10ம் திகதி வட மாகாண சபையில் இனஅழிப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து உள்ளக வெளியக சவால்களை முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் எதிர்கொண்டார். இனஅழிப்பு தொடர்பாக கதைப்பதை அடக்கி வாசிக்கும் படி, தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் நிசா பிஸ்வல் அவர்கள், முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு அழுத்தம் கொடுத்ததாக அண்மையில் கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அது முற்றிலும் தவறான செய்தி என குறிப்பிட்ட முதலமைச்சர், 'உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சனைகளையும் எதிர்பார்ப்புகளையும் நாங்கள் உதாசீனம் செய்ய மாட்டோம். அவர்களின் நல்வாழ்விற்காக நாங்கள் தொடர்ந்து உழைத்து வருவோம்' என்றே நிசா பிஸ்வல் அவர்கள் கூறினார் எனத் தெளிவுபடுத்தினார். அத்துடன், தமிழ் இனத்துக்கு எதிரான இனஅழிப்பு நிறுத்தப்படவில்லை என்பதை குறிப்பிட்ட முதலமைச்சர் அவர்கள், 'தமிழினத்துக்கு நடந்த இனவழிப்பை வெளிப்படுத்தத் தயங்கும் அல்லது தடுக்கும் தமிழர்கள் தொடர்பாக அவர்களின் அரசியல் நெறி தொடர்பாக எமது மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும். சட்டத்தால் சகித்துக் கொள்ளப்பட்டால்தான் இனஅழிப்பை ஏற்கலாம் என்ற இன்றைய சில சாராரின் கருத்தை ஏற்பது சற்றுக் கடினமாகத்தாக இருக்கின்றது. எனினும் சட்டம் சரியென்று ஏற்கும் என்ற திடமான நம்பிக்கையுடன்தான் நாங்கள் இன அழிப்புப் பிரேரணையைக் கொண்டு வந்தோம்' எனவும் தெரிவித்தார்.

## ஆட்சி மாற்றத்தால் பயனில்லை

தங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகவே தமிழ் அரசியல் கட்சிகளுடனான உறவை சிங்கள அரசியல் கட்சிகள் பாவிக்கின்றன எனத் தெரிவித்த விக்னேஸ்வரன் அவர்கள், சனவரி 8ல் நடந்த ஆட்சிமாற்றமும் அத்தகைய ஒன்றே எனத் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், 'ஏமாற்று வித்தைகளுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நாம் இனியும் ஏமாறும் இனமாக இருக்க முடியாது'. எமது மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சிதைக்கும் இராணுவ ஆக்கிரமிப்பை விலக்குவதற்குப் புதிய ஆட்சியாளர்களும் இதயசுத்தியுடன் செயற்படவில்லை. எமது மக்களுக்குச் சர்வதேச விசாரணை ஒன்றின் மூலம் நீதி கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையவிருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அறிக்கையைப் பிற்போடுவதற்காக புதிய அரசாங்கம் பாடுபட்டது. இறுதியில் தங்கள் முயற்சியில் வெற்றியுங் கண்டுள்ளார்கள். இதனைத் தங்களது வெற்றியாகவும் கொண்டாடினார்கள்' எனவும் தெரிவித்த முதலமைச்சர் அவர்கள், சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாகவே தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற தொனியில் உரையாற்றினார். இது, உள்நாட்டு பொறிமுறைக்கு அமைவாக நீதி கிடைக்கும் என கூறும் தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாட்டுக்கு முற்றுமுழுதாக மாறுபாடான நிலைப்பாடு. இதேவேளை, வட-கிழக்கில் கடந்த பெப்ரவரி மாதம் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி போராட்டங்களை முன்னெடுத்த மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஆதரவான கருத்து.

## எமக்கான அரசியல் – பொதுத்தேர்தல்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை நேரடியாக வெளிப்படுத்தாத விக்கினேஸ்வரன் அவர்கள், 'நேர்மையான அரசியல், கொள்கையில் உறுதி, மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய மனோபாவம், தூர நோக்குப் பார்வை, எந்தக் கட்டத்திலும் எந்த காரணத்திற்காகவும் விலைபோகாத மனோதிடம் கொண்ட அரசியல்வாதிகளே எமக்குத் தேவைப்படுகிறார்கள் எனத் தெரிவித்தார். அத்துடன், தமிழர்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி அவர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி, எமது மக்களுக்கான உரிமையையும் நீதியையும் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களே எமது மண்ணுக்கும் மக்களுக்குமாக இன்றைய காலத்தில் தேவையாக இருக்கின்றார்கள். அதனை உணர்ந்து அவர்கள் தமக்குள்ள வரலாற்றுப் பொறுப்பை, தார்மீகக் கடமையைச் சரிவரச் செய்வதற்கு நான் துணையாக நிற்பேன்' எனவும் தெரிவித்தார்.

## இளைஞர்கள் புரிந்த உயிர் தியாகங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தியாகங்களை பேசி வாக்கு கேட்கும் அரசியல் தொடர்கின்ற நிலையில், 'உரிமை மறுக்கப்பட்டதாலும் அநீதி தொடர்ந்ததாலுமே எமது இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அத்தகையவர்களின் தியாகத்தை நாம் வீணடிக்கக் கூடாது, கொச்சைப்படுத்தக் கூடாது. அவர்களின் உற்றார் உறவினர்கள் இன்றும் வந்து எம்முன் கண்ணீர் சிந்துவதைக் காண்கின்றேன். எனவே தான், தேர்தல் காலங்களில்..

(தொடர்ச்சி 26 ஆம் பக்கம்)



# கோகிலவாணி - மாற்றத்திற்கான குரல்



**சுகி**

*(ஒரு பேப்பருக்காக)*

அடுத்த மாதம் வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்தேசிய மக்கள் முன்னனியின் சார்பில், யாழ்மாவட்டத்தில் போட்டியிடும் பத்து பேரில் மூன்றுபேர் பெண்கள், கோகுலவாணி சின்னமணி, பத்மினி சிதம்பரநாதன், ஆனந்தி சிவஞானசுந்தரம், வரவேற்கத்தக்க மாற்றம், அதிலும் இம்மூன்று பேரிலும், இளையவராக, முன்னாள் பேராளியான, கோகுலவாணியின் ஆணித்தரமான கருந்துக்களும், விளங்கங்களும், மிகவும் அனுபவமான அரசியல் தெளிவுள்ளவர் பேசுவது போல வெளிவருகின்றது.

தனது பதினாறு வயதில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட இவர், 14 வருடங்கள் அவர்களோடு இணைந்து பணியாற்றினார். அங்கு பணியாற்றும் போது விடுதலைப்புலிகளால் பத்தாம்வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பை ஆங்கில மொழியில் படிப்பிக்கப் பெற்று, அந்த பரீட்சையிலும் சித்தி அடைந்தார். அதன் பிறகு 2005 இன் இறுதிப்பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேறி, ஒரு சர்வதேச தொண்டு நிறுவனத்தில் பணிகளை பொறுப்பேற்றார். சுனாமியால் பாதிக்கப்பட்ட, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட, மக்களிடையே வாழ்வாதாரங்களை மேம்படுத்தல், சுயதொழிலை ஊக்குவித்தல் போன்ற மக்களின் அடிப்படை அத்தியாவசியமான உதவிகளை அளிப்பதில், தன்னலம், பாராது செயல் பட்டார்.

இவர் செயற்திட்ட முகாமைத்துவத்துவதில் முறைசார் பயிற்சி பெற்றவர். ஐக்கிய அமெரிக்காவின், சர்வதேச வருகையாளர் தலைமைத்துவ செயற்திட்டத்தில் (International Visitor Leadership Programme) பங்குபற்றியவர். 2014 நவம்பரில் இருந்து USAID இன் நிதி வசதியுடன் மீள் சுழற்சி காகித தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் பணியில் இணைந்து கொண்டார்.

அரசியலில் இணைந்தது பற்றிக் குறிப்பிடும் போது, எமது மக்களுக்கான உரிமை எட்டப்பட வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட போராட்டம் 2009ம் ஆண்டு முடிவுக்கு கொண்டுவரப் பட்டது. அதன் அடுத்த கட்டமாக அரசியல் ரீதியான ஒரு போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை தாயகத்தில் எழுந்தது. எமது பிரச்சனைகளை அரசியல் ரீதியாக கொண்டு வருவதற்காக உருவாக்கப்பட்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தரப்புக்கான அரசியல் உரிமைகளுக்காக போராடி எமக்கு அரசியல் தீர்வை பெற்றுத்தரும் என அனைவரும் எதிர் பார்த்திருந்த வேளையில், தமிழ் தேசிய கூட்டமைப்பு அதற்கான முனைப்புகளைக் காட்டவில்லை என்பது உண்மையாகும். ஏனைய கட்சிகள் கூட தத்தமது கட்சிக் கொள்கைகளோடு அரசாங்கத்துடன் இணைந்து ஒரு இணக்க அரசியலையே நடாத்திக் கொண்டிருந்தனர். அனைத்து தரப்பினரும் ஒரு கால நீடிப்பு அரசியலையே மேற்கொண்டிருந்தனரே தவிர எமது மக்களுக்கான தீர்வு தொடர்பில் சரியான அக்கறையைக் கொண்டிருக்கவில்லை என்பது தான் உண்மை. இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு விதிவிலக்கு அல்ல.

அதனால் தான் போர்முடிந்து 6 வருடங்கள் கடந்துள்ள வேளையில் அவர்களால் எமது மக்களுக்கான அரசியல் உரிமையைப் பற்றியோ அல்லது வாழ்வியல் சுதந்திரம் பற்றியோ உருப்படியான எதையுமே மேற்கொண்டிருக்க முடியாது போய் விட்டது. வெறுமனே நிவாரணம் வழங்குவதன் மூலம் எமது அரசியல் சார் சுயநல அபிலாசைகளை எட்டிவிடலாம் என்கின்ற ஒரு வகையான தந்திரோபாய நடவடிக்கைகளையே அனைத்து கட்சியினரும் செய்து வந்துள்ளனர். இயலாமை, ஏழ்மை, உளவியல் துன்பங்கள் ஆகியவற்றால் மிகவும் நலிந்து போய் உள்ள எமது மக்களுக்கு, அற்ப சேவைகளை வழங்குவதன் மூலம், ஏமாற்றும் ஒரு கீழ்தரமான யுக்திகளையே அனைத்து கட்சிகளும் செய்து வந்துள்ளனர், இதில் தமிழ்தேசிய கூட்டமைப்பு விதிவிலக்கு இல்லை. இந்த நிலை இன்னும் சில வருடங்களுக்கு தொடருமாயின் உலக அரங்கில் எங்களது பிரச்சனை மெல்ல மறக்கடிக்கப்படுகின்ற நிலை ஏற்படும், இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கம் தான் நான் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணம் என்கிறார் கோகுலவாணி.

இவர் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் அலுவலகத்தில் 2014 நவம்பர் மாதத்திற்கு முன்பு மொழிபெயர்பாளராக பணியாற்றியிருந்தார். ஆனாலும் தேர்தல் காலத்தில் மட்டும் தமிழ்த்தேசியம் பேசும் தமிழ் தேசிய கூட்டமைப்போடு என்னால் அரசியல் செய்ய முடியாது என்று கூறுவதோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி அப்படியான கட்சி இல்லை என்கிறார். இந்நிலையில் தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் சுயத்தை வெளிப்படுத்தும் வகையில் தமிழ் தேசிய மக்கள் முன்னனி மக்களின் உரிமை சார்ந்த வழியில் போராட்டங்களை முன் நடாத்தி தனது இருப்பினை நிலை நிறுத்தி வருகின்றது. எமது மக்களின் உரிமைகள், அவர்களின் வாழ்வியல் பற்றிய உண்மையான நிலைப்பாட்டினையும், நியாயத்தன்மையினையும் கஜேந்திர குமார் தலைமையினான, தமிழ் தேசிய மக்கள் முன்னனி கொண்டிருக்கின்றது என்கிறார்.

இவர் முன்னைய பேராளி என்றவகையில், இராணுவத்தால் கைது செய்யப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேல் சிறையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, புனர்வாழ்வு என்பதற்குள் உட்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அந்த வகையில் போராளிகள் எதிர்கொண்ட, எதிர் கொள்கின்ற பிரச்சனைகள் என்ன என்பது பற்றி என்னால் கூறமுடியும் என்கிறார், விடுதலை அடைந்து வெளிவந்த பெரும்பாலான போராளிகளின் எதிர்காலம் என்பது கேள்விக் குறியானதொன்று.

**அனைத்து தரப்பினரும் ஒரு காலநீடிப்பு அரசியலையே மேற்கொண்டிருந்தனரே தவிர எமது மக்களுக்கான தீர்வு தொடர்பில் சரியான அக்கறையைக் கொண்டிருக்கவில்லை என்பதுதான் உண்மை. இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு விதிவிலக்கு அல்ல.**

தமிழர் உரிமைக்காக தன்னலம் இன்றி எல்லாவற்றையும் இழந்து போராடிய போராளிகளின் நிலைமை இப்படி இருக்க, தமிழருக்கான உரிமை என்ற விடயத்தை கையில் எடுத்த தமிழர் தரப்பு அரசியல் கட்சிகள் அதில் இருந்து வழுவி தத்தமது சுயலாபம் கருதி அரசியலை முன்னெடுத்த நிலையினை எந்த போராளியாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் எழுந்த கோப உணர்வும் இயல்பானது, நியாயமானது. எனவே இதுவரை ஏமாற்றிய அரசியல் தரப்புக்கு, ஒரு மாற்றுத்தலைமை வேண்டும் என்று தமிழ் மக்களின் உரிமைக்காக தன்னலம் இன்றி குரல் கொடுக்கும், தமிழ் தேசிய மக்கள் முன்னனி இணைந்த முடிவு நியாயமானது என்கிறார்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper









# தமிழ் வேட்பாளர்களுக்குரிய தகுதிகள்



**நிலாந்தன்**

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மருத்துவத் துறையைச் சேர்ந்த ஒருவர் தனிப்பட்ட உரையாடல் ஒன்றின் போது சொன்னார். "கடந்த ஆறு ஆண்டுகால அரசியலில் எமது மிதவாதிகளிடம் நிறைய எதிர்பார்த்தோம். தமிழ்நாட்டு அரசியல்வாதிகளைப் போலன்றி இவர்கள் வித்தியாசமான புதிய போக்கு ஒன்றைக் காட்டுவார்கள் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால் இவர்களும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளைப் போலவே ஆகிவிடுவார்கள் போலிருக்கிறதே என்று."

அவர் ஏன் அப்படிச் சொன்னார்? சுமார் 38 ஆண்டுகால ஆயுதப்போராட்டத்தின் பின்னணியில் வைத்தே அவர் அப்படிச் சொல்லியிருந்திருக்கக் கூடும். ஏனெனில் முழு உலகிற்கும் ஒரு புதிய அனுபவமாகக் கிடைத்த ஆயுதப் போராட்டம் அது. அது தோற்கடிக்கப்பட்ட பின் அந்த வெற்றிடத்தை நிரப்பும் மிதவாதிகளைக் குறித்து தமிழ் மக்களிடம் அதிகரித்த எதிர்பார்ப்புக்கள் இருப்பது இயல்பானதே. ஆயுதப் போராட்டத்தில் இருந்து கற்ற படிப்பினைகளின் அடிப்படையில் கடந்த ஆறு ஆண்டுகால ஈழத் தமிழ் மிதவாத அரசியல் எனப்படுவது இப்பிராந்தியத்தில் உள்ள ஏனைய மிதவாதப் போக்குகளில் இருந்து ஏதோ ஒரு விதத்தில் வேறுபட்டதாக இருக்க வேண்டும் என்ற ஒரு எதிர்பார்ப்பு இயல்பானதே. அந்த எதிர்பார்ப்பை தமிழ் மிதவாதிகள் நிறைவேற்றியிருக்கிறார்களா?

ஆயுத மோதல்கள் முடிவிற்கு வந்த பின் ஐந்து தேர்தல்கள் நடந்துவிட்டன. இப்பொழுது ஆறாவது தேர்தல் நடக்கவிருக்கிறது. இவ் ஆறு ஆண்டுகால பகுதிக்குள் தமிழ் மிதவாதிகள் தமது வாக்காளர்களின் எதிர்பார்ப்புக்களை எந்தளவு தூரம் பூர்த்தி செய்திருக்கிறார்கள்? வரவிருக்கும் தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது கடந்த ஆறு ஆண்டு காலத்தைப் பற்றிய மதிப்பீடு எதுவும் அவர்களிடம் இருந்ததா?

தமிழ் வேட்பாளர்களை பிரதானமாக இரண்டு பெரும் பிரிவுகளாக்கலாம். ஒரு பிரிவு ஏற்கனவே நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள். மற்றொரு பிரிவு புதிய முகங்கள். இவ்விரு பிரிவினரும் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்கள்?

அவர்களைத் தெரிவு செய்த கட்சிகள் அதற்கான விளக்கங்கள் எதையும் வெளிப்படையாகக் கூறவில்லை. எனினும் தமிழ் வேட்பாளர் தெரிவைப் பொறுத்தவரை பிரதானமாக பின்வரும் தகுதிகளில் ஒன்றே பலவோ கவனத்தில் கொள்ளப்பட்டிருப்பதாக அனுமானிக்க இடமுண்டு.

*தகுதி ஒன்று - கொள்கை அடிப்படையிலானது*

*தகுதி இரண்டு - வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களின் அடிப்படையிலானது*

*தகுதி மூன்று - கல்வித் தகைமைகள்*

*தமிழ் வேட்பாளர்களுக்குரிய தகுதிகள்*

*தகுதி நான்கு - பணபலம்*

*தகுதி ஐந்து - பால் அடிப்படையிலானது*

*தகுதி ஆறு - சமூகப் பிரிவு அல்லது சாதி அடிப்படையிலானது*

இவற்றைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

முதலாவதாக கொள்கை - பிரதானமாக மூன்று கொள்கைகள் தமிழ் தேர்தல் அரங்கில் காணப்படுகின்றன. ஒன்று தமிழ்த் தேசியக் கொள்கை, இரண்டு முழு இலங்கைக்குமான தேசியக் கொள்கை. மூன்று இடதுசாரிகள். இதில் இடதுசாரிகள் தீர்மானகரமான வாக்குப் பலத்தைக் கொண்டவர்கள் அல்ல. எனவே இரண்டு பிரதான கொள்கைகளையும் பார்க்கலாம்.

தமிழ்த்தேசியக் கொள்கையைப் பொறுத்தவரை இரண்டு பெரிய கட்சிகளும் தேசியம் என்ற வார்த்தையை கட்சிப் பெயர்களிலேயே வைத்திருக்கின்றன. ஆனால் அதை எத்தனை பேர் விளங்கிப் பிரயோகிக்கிறார்கள்? தேசியம் என்றால் என்ன என்ற கேள்விக்கு தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் பதில் கூறத்தக்க ஆளுமையோடு காணப்படுகிறார்கள்?

மேற்படி கேள்விக்கு சரியான பதிலைக் கூறினால் தான் இவர்கள் கருதும் இனவிடுதலைக்குள் சமூக விடுதலையும் அடங்குமா இல்லையா என்ற கேள்விக்கும் விடைகாண முடியும். சாதி அசமத்துவங்கள் குறித்தும், பால் அசமத்துவங்கள் குறித்தும் பிரதேச அசமத்துவங்கள் குறித்தும் முஸ்லிம்களுக்கான இறுதித் தீர்வு குறித்தும் பொருத்தமான ஓர் உரையாடலைத் தொடங்குவது என்றால் முதலில் தேசியம் என்றால் என்ன என்ற கேள்விக்கு விடை கிடைக்க வேண்டும். தமிழ் வேட்பாளர்கள் விடை கூறுவார்களா?

இம்முறை தேர்தல் களத்தில் தமிழ்த் தேசியத்துக்கு யார் அதிகம் உரித்துடையவர் என்ற வாதப் பிரதிவாதம் அதிகம் சூடுபிடித்திருப்பதைக் காணலாம். கூட்டமைப்பானது தன்னைத் தேசிய நீக்கம் செய்துவிட்டது என்று கூறும் அதன் எதிரிகள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியே இது விடயத்தில் அதிகம் தேசியத்தன்மைமிக்க ஒரு கட்சி என்று வாதிடுகிறார்கள்.

தமிழ்த்தேசியக் கோசங்களை யாரும் பாவிக்கலாம் என்ற ஒரு நிலைமை தற்பொழுது காணப்படுகின்றது. அதற்குரிய வாழ்க்கை முறை உண்டோ இல்லையோ எந்தவொரு அரசியல்வாதியும் தனது வாக்குவேட்டை நோக்கங்களுக்காக தமிழ்த்தேசியக் கோசங்களை பயன்படுத்த முடியும் என்று நம்புவதாகத் தெரிகிறது. அண்மை நாட்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள யு.என்.பி பிரதானிகள் தமிழ்த் தேசிய கோசங்களை உச்சரித்து வருவதைக் காண முடிகிறது. இது கடந்த ஆறு ஆண்டுகளில் தங்களைத் தமிழ்த்தேசியவாதிகளாகக் காட்டிக் கொண்ட தலைவர்கள் பெற்ற தோல்விகளின் விளைவாக தோன்றிய ஒரு போக்குத்தான். அதாவது மிதவாதத் தலைவர்கள் பலருக்கு தமிழ்த்தேசியம் ஒரு வாழ்க்கை முறையாக இல்லை என்று பொருள்.

அதே சமயம் தமிழ்த்தேசியத்துக்கு எதிர் நிலையை எடுத்து முழு இலங்கைக்குமான தேசியத்தை முன்வைத்த தமிழ்க் கட்சிகள் கடந்த ஆறு ஆண்டுகளாகச் சாதித்தவை எவை? கடந்த ஆறு ஆண்டுகளில் அக்கட்சிகளின் வாக்கு வங்கி படிப்படியாக மெலிந்து போகக் காணலாம். கடந்த வடமாகாணசைபத் தேர்தல் முடிவுகள் இதை நிரூபித்திருக்கின்றன. அபிவிருத்தி மைய அரசியலா? அல்லது உரிமை மைய அரசியலா? என்ற கேள்வி எழும்போது தமிழ் மக்கள் உரிமை மைய அரசியலுக்கே வாக்களித்து வந்திருக்கிறார்கள். வேலை வாய்ப்புக்களுக்கும் ஏனைய தேவைகளுக்கும் அவர்கள் அரசாங்கத்திற்கு விசுவாசமான கட்சிகளைத் தேடிப் போவார்கள். ஆனால் வாக்களிப்பு என்று வரும்போது தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கே பெருமளவில் வாக்களிக்கிறார்கள். எனவே இங்கு கொள்கைப் போட்டி எனப்படுவது யார் தமிழ்தேசியக் கொள்கைக்கு அதிகம் உரித்துடையவர் என்ற போட்டிதான். இது முதலாவது.

இரண்டாவது தகுதி - வெற்றிபெறுவதற்கான அதிகரித்த வாய்ப்புக்களைக் கொண்டிருப்பது. ஏற்கனவே பிரபல்யமடைந்திருப்பவரைப் போட்டியிடவைப்பதன் மூலம் வெற்றிக்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தலாம். முன்பு நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் மறுபடியும் போட்டியிடுவதற்கான அடிப்படைகளில் இதுவும் ஒன்று. இது தவிர வேறு துறைகளில் பிரபல்யமடைந்தவர்களும் தமது பிரபல்யத்தை அரசியலில் முதலீடு செய்வதுண்டு.

எனினும் இம்முறை தேர்தல் களத்தில் எல்லா வேட்பாளர்களும் வெற்றி பெறுவதற்காகத்தான் இறக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ள முடியாது. குறிப்பாகக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை தோற்பதற்காகவும் சில வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட தொகுதியில் ஒரு முதன்மை வேட்பாளரை வெற்றிபெற வைப்பதற்காக அவரைவிட பிரகாசம் குறைந்த சிலரும் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே சில சமயங்களில் தோல்வியுறுவதற்கான வாய்பும் ஒரு தகுதியாக எடுத்துக்கொள்ளப்படுகிறதோ? இது இரண்டாவது.

மூன்றாவது தகுதி - படிப்பு. கல்வித் தகைமைகளின் மூலம் ஒரு வேட்பாளர் தனக்குரிய சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நம்பப்படுகிறது. ஆயுதப் போராட்டத்துக்கு முன்பு காணப்பட்ட இந்த நம்பிக்கைகள் 2009 இற்குப் பின் மறுபடியும் மேலெழத் தொடங்கிவிட்டன. குறிப்பாக சட்டத்துறை வல்லுனர்கள் நன்றாக அரசியல் செய்வார்கள் என்றும் நம்பிக்கைட்டப்படுகிறது. 'அப்புக்காத்து' அரசியல் பற்றிய இக்கருதுகோளானது 70களிலேயே பிழையானது என்று நிரூபிக்கப்பட்டதொன்று. ஆனால் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின் சமூகம் பல விடயங்களிலும் பின்நோக்கிச் சறுக்கியபோது மேற்படி அப்புக்காத்து அரசியலும் மறுபடியும் அரங்கின் முன்னணிக்கு வரத் தொடங்கிவிட்டது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் உள்ள எனது நண்பர் ஒருவர் சொல்வார். 'சட்டத்துறை ஒழுக்கம் மட்டும் ஒருவரை அரசியல்வாதியாக்கி விடாது. பதிலாக அரசியல் எனப்படுவது பல்வேறு அறிவியல் துறைகளினதும் கூட்டு ஒழுக்கமாகும். எமது சட்டத்துறை வல்லுனர்கள் அரசியலை மிகவும் குறுக்கி விளங்கி வைத்திருக்கிறார்கள் என்று.' கடந்த ஆறு ஆண்டுகளில் இது தொடர்பில் ஒரு நடைமுறை உதாரணத்தைக் காட்ட முடியும். வடமாகாண முதலமைச்சர் சட்டத்துறை ஊடாகவே அரசியலுக்கு வந்தார். ஆனால் அவர் சட்டத்தரணியாகவோ அல்லது நீதிபதியாகவோ இருந்த காலங்களில் பேசியிராத அளவிற்கு தற்பொழுது மிகத் தீவிரமாகப் பேசிவருகிறார். அவருடைய சட்டத்துறை ஒழுக்கத்திற்கூடாக அவர் கற்றறிந்தவற்றை விடவும் ஓய்வு பெற்ற பின் ஓர் அரசியல்வாதியாக, பட்டறிவுக்கூடாக அவர் பெற்றுக் கொண்டவைகளே அதிகம் என்று எடுத்துக்கொள்ளலாமா?

நான்காவது தகுதி - பண பலம். அரசியலில் ஈடுபடுவது என்பது ஏறக்குறைய ஒரு முதலீடு தான். ஒரு வேட்பாளர் பிரச்சாரப் பணிகளுக்காக இலட்சக்கணக்கில் செலவழிக்க வேண்டியிருக்கும். ஆளணிகளுக்கும், போக்குவரத்திற்கும் கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், விளம்பரங்கள் போன்ற எல்லாவற்றுக்கும் காசை அள்ளி இறைக்கவேண்டியிருக்கும்.

தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்தின் பங்களிப்பு இந்த இடத்தில் பெரிதும் கவனிப்புக்குரியது. தமிழ் வேட்பாளர்கள் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் கடன்படும் இடம் இது. புலம்பெயர்ந்த தமிழர்கள் தேர்தல் களத்தின் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடிய வாய்ப்புக்களை இது ஏற்படுத்துகிறது. இது நான்காவது.

ஐந்தாவது தகுதி - பால் அடிப்படையிலான தகுதி. தமிழ் வேட்பாளர்கள் தெரிவில்

*(தொடர்ச்சி 24 ஆம் பக்கம்)*

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk
Emergency
079 4764 1876
079 1225 3418

# சரிந்த சீனப் பங்குச் சந்தையில் தீவிர நடவடிக்கை எடுத்த அரசு




**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

சீனப் பங்குச் சந்தையின் சுட்டியான ஷாங்காய் கொம்பசிற் சீன அரசின் தீவிர நடவடிக்கைகளையும் மீறி ஜுலை 14-ம் 15-ம் திகதிகளில் சரிவைச் சந்தித்தது. சீனப் பொருளாதாரம் ஏழு விழுக்காடு வளர்ச்சியில் உறுதியாக இருக்கின்றது என்ற செய்தி 15-ம் திகதி வெளிவந்த வேளையிலும் பங்குச் சந்தையின் வீழ்ச்சியை தொடக்கத்தில் சீனாவால் தடுக்க முடியவில்லை பல தொடர் நடவடிக்கை எடுத்தும்.

### ◆ வட்டி சுட்டதடா!!!!

ஏற்றுமதியில் பெரிதும் தங்கியிருக்கும் சீனப் பொருளாதாரத்தை மாற்றி அமைப்பது சீன அரச முதலாளித்துவவாதிகளின் முதன்மைப் பணியாகும். அதற்கு உள்ளாட்டுக் கொள்வனவாளர்களை பொருளாதார ரீதியில் வலுவிக்கவர்களாக மாற்றுவது அவசியமான ஒன்றாகி விட்டது. 1978-ம் ஆண்டில் இருந்து சீனா உலகச் சந்தையில் தனது பொருட்களின் போட்டியிடு திறனை அதிகரிக்க உள்ளூர் ஊதியத்தையும் சேமிப்புக்கள் மீதான வட்டி வீதத்தையும் திட்ட மிட்ட முறையில் நசுக்கி வைத்திருந்தது. இதனால் சீன மக்களின் கொள்வனவு வலு அதிகரிக்கவில்லை. குறைந்த வட்டி வீதம் அரசின் உற்பத்தி நிறுவனங்களுக்கு மலிவான வட்டி வீதத்தில் நிதியைக் கொடுத்தது. இதனால் அரச உற்பத்தி நிறுவனங்கள் நாடெங்கும் பாரிய உட்கட்டுமானங்களை உருவாக்கின. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக சீன ஆட்சியாளர்கள் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்திச் செலவை அதிகரிக்காமல் எப்படி உள்ளூர் மக்களின் கொள்வனவு வலுவை அதிகரிப்பது என்பதில் தங்கள் தலை முடியை பிய்த்துக் கொண்டிருக்கின்றனர். சீன மக்களை கட்டிடங்கள் வாங்கச் செய்வதாலும் பங்குச் சந்தையில் முதலீடு செய்யச் செய்வதாலும் அவர்களின் கொள்வனவு வலுவை அதிகரிக்கலாம் என சீன ஆட்சியாளர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டனர். இதனால் கடந்த இருபது ஆண்டுகளாக சீனாவில் கட்டிடங்களின் (அசையாச் சொத்துக்கள்) விலைகள் அதிகரித்துக் கொண்டே போயின. கடந்த ஆண்டில் இருந்து பங்குச் சந்தையிலும் பெரும் விலை அதிகரிப்பு ஏற்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக உலகப் பொருளாதார நிபுணர்கள் சீனாவின் அசையாச் சொத்து அளவிற்கு மிஞ்சிய விலை அதிகரிப்பைக் கண்டுள்ளதால் அவற்றின் விலைகள் திடீர்ப் பெரும் சரிவைச் சந்திக்கலாம். அப்படி நடக்கும் போது சீன அவற்றை வாங்கக் கடன் கொடுத்த வங்கிகள் பெரும் இழப்பீட்டைச் சந்திக்கும். அது ஒரு கடன் நெருக்கடிக்கு வழி வகுக்கும் என எச்சரித்துக் கொண்டிருந்தனர்.

### ◆ லட்சோப லட்சம் தொலைந்தது

சீனப் பங்குகள் மூன்று ரில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இழப்பீட்டைச் சந்தித்திருக்கும் வேளையில் சீனாவின் பொருளாதாரம் தொடர்பாக வளர்ச்சியடைந்த நாடுகள் கடும் கரிசனை கொண்டுள்ளனர். சீனாவில் பிரச்சனைகள் ஏற்படும் போது தாம் ஊடகங்களில் தோன்றி மக்களுக்கு ஆறுதலும் உறுதியும் வழங்கிக் கொண்டிருந்த சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் சீனத் தலைமை அமைச்சர் லீ கேகியாங்கும் சீனப் பங்குகளின் விலை 25 நாட்களில் 32 விழுக்காடு வீழ்ச்சியக் கண்ட போது மௌனமாக இருக்கின்றார்கள். தாம் தாய் நாடு எல்லாத் துறையிலும் முன்னேறி உலகின் முதல் தர நாடாக உருவாகப் போகின்றது என நம்பிக் கொண்டிருந்த சீன மத்திய தர வர்க்கத்து மக்களின் நம்பிக்கை தளரத் தொடங்கிவிட்டது. அதிலும் கடன் பட்டு பங்குகளை வாங்கிய மத்திய தர வர்க்கத்து அபிவிருத்தி விரும்பிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

### ◆ அன்று ஜப்பானில் இன்று சீனாவில்

2008-ம் ஆண்டின் பின்னர் அமெரிக்க டொலரில் பார்க்கும் போது சீனாவின் மொத்தத் தேசிய உற்பத்தி இருமடங்காக அதிகரித்துள்ளது. சீனப் பங்குச் சந்தை 2015-ம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் அடைந்த விலை அதிகரிப்பை மட்டுமே இழந்துள்ளது. சென்ற ஆண்டின் பெறுமதியுடன் பார்க்கும் போது சீன பங்கு 75 விழுக்காடு விலை அதிகரிப்பில் இப்போதும் இருக்கின்றத்து. கடன் வாங்கி பங்குச் சந்தையில் செய்யப்பட்ட முதலீடுகளால் பங்குகள் பெரும் விலை அதிகரிப்பை 2015 மார்ச் மாதத்தின் பின்னர் பெற்றன.

### ◆ பங்குச் சந்தையில் சீன அடி சிலம்படி

பங்குச் சந்தை விலைச் சரிவை சீன ஆட்சியாளர்கள் தமது மிகத் தீவிர கவனத்தில் எடுத்தார்கள். பல அதிரடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள். ஜுன் 26-ம் திகதி எழு விழுக்காடு விலை வீழ்ச்சி சீனப் பக்குச் சந்தையில் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஜுன் 27-ம் திகதி வட்டி வீதம் குறைக்கப் பட்டது. ஜுன் 29-ம் திகதி உள்ளூராட்சிச் சபைகள் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு எதிரான தடை நீக்கப்பட்டது. ஜுலை முதலாம் திகதி பங்கு வர்த்தகத்திற்கான கட்டணம் குறைக்கப்பட்டது. வங்கிகள் மைய வங்கியில் வைப்பிலிட வேண்டிய இருப்பு விகிதம் குறைக்கப்பட்டது. இவற்றால் நாட்டில் பணப் புழக்கத்தை அதிகரிக்கப்பட்டது. ஜுலை 2-ம் திகதி வங்கிகள் பங்குச் சந்தையில் முதலீடு செய்பவர்களுக்கு வழங்கும் கடன் தொடர்பான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. சீன அரச நிறுவனங்கள் புதிதாக பங்கு விற்பனை செய்வது இடை நிறுத்தப்பட்டது. ஜுலை 8-ம் திகதி பெரிய அளவில் பங்குகளை வைத்திருப்போர் பங்குகளைப் பெருமளவில் விற்பது தடை செய்யப்பட்டது. பங்கு சந்தையில் குறுகிய கால விற்றல் (short selling) தடை செய்யப்பட்டு அதை மீறுபவர்கள் கைது செய்யப்படலாம் என மிரட்டல் சீன அரசால் விடுக்கப்பட்டது. Shortselling என்பது பங்குளை வாங்க முன்னரே விற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது. ஆனால் சீன ஆட்சியாளர்கள் சீனப் பங்குகளின் விலை அளவுக்கு மிஞ்சி மிகைப்படுத்தப் பட்டிருந்தன என்பதை உணரவில்லை. சீனப் பங்குகள் அதன் உச்ச விலை நிலையில் ஜுன் 12-ம் திகதி இருந்த போது சீனப் பங்குகளின் விலை சராசரியாக அவை கொடுக்கும் பங்கிலாபத்திலும் பார்க்க 25 மடங்காக இருந்தன. இந்த அளவிற்கு மிஞ்சிய விலை குறைக்கப் படவேண்டிய ஒன்று அது விழுவதைத் தடுக்கக் கூடாது என மேற்குலக ஊடகங்கள் கருத்து வெளிவிட்டன.சீன நிறுவனங்களின் இலாபம் வீழ்ச்சியடையும் போது அவற்றின் விலைகள் உயர்ந்தமை விடும்பத்தகாத ஒன்று மட்டுமல்ல நடக்கக் கூடாத ஒன்றுமாகும்.

### ◆ அமெரிக்காவிடமிருந்து அடித்த கொப்பி

1990களில் அமெரிக்காவில் பங்குச் சந்தையில் விலைகள் சடுதியாக சரிவதைத் தடுக்க என ஒரு இரகசிய நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டது. 2008-ம் ஆண்டு ஜனவரியில் அமெரிக்கப் பங்கு விலைகள் சரிந்த போது அமெரிக்காவில் வட்டி வீதம் குறைக்கப்பட்டது. அமெரிக்கா செய்ததை சீனாவும் செய்ய முயல்கின்றது எனச் சொல்லப்படுகின்றது. ஆனால் அமெரிக்கா தலையிட்டது சரியான விலை நிலையிலும் பார்க்க பங்கு விலைகள் குறையாமல் இருப்பதற்கு. கடந்த ஐந்து ஆண்டுகளாக அமெரிக்கா நாட்டில் பணப்புழக்கத்தை அதிகரிக்க எடுக்கும் நடவடிக்கைகள் பங்கு விலைகளை அதிகரிக்க வைக்கின்றன. ஆனால் நாட்டின் பங்கு விலை அளவுக்கு அதிகமாக இருக்கும் போது அதன் வீழ்ச்சியைத் தடுக்க அரசு செய்யும் செலவு விழலுக்கு இறைத்த நீராகும். அமெரிக்க அரசு தாம் பங்குச் சந்தையில் நேரடித் தலையீடு செய்வதில்லை என்கின்றது. பங்குச் சந்தையின் முக்கிய அம்சம் நிறுவனங்கள் மலிவாகவும் பொது மக்களிடமிருந்து நேரடியாகவும் நிதியை பெறுவதும் பொதுமக்கள் சேமிப்பு கணக்கிலும் பார்க்க சிறந்த பங்கிலாபத்தைப் பெறுவதுமாகும். சீனாவின் அரச நிறுவங்கள் தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து முதலீட்டைப் பெற பங்குச் சந்தை மீது அவர்களுக்கு நம்பிக்கை அவசியம். இந்த ஆண்டு சீன நிறுவனங்கள் 72 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமானமான நிதியை பொதுமக்களிடமிருந்து திரட்ட ஏதுவாக அமைந்தது அப்படிப்பட்ட நம்பிக்கையே.

**சீனச் சிறு முதலீட்டாளர்களுக்கு பங்குச் சந்தை அனுபவம் மிகக் குறைவு ஜுலை மாதம் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு அவர்களுக்கும் மேலும் பல புதிதாக வரவிருக்கும் முதலீட்டாளர்களுக்கும் நல்ல படிப்பினை.**

எல்லா முதலாளித்துவ அரசுகளும் பங்குச் சந்தை விலை வீழ்ச்சியடையும் போது தலையிடுவதுண்டு ஆனால் சீனாவின் தலையீடு அதிக நேரடியானதாகவும் தீவிரமானதாகவும் இருக்கின்றது. எந்த ஒரு பொதுவுடமைவாதியும் சீன அரசு உழைக்கும் வர்க்கத்தினருக்குப் போக வேண்டிய நிதி வளத்தை பங்குச் சந்தையில் கொள்ளை இலாபமீட்டும் குட்டி பூர்வாக்களைப் பாதுகாக்கப் பயன்படுத்துகின்றது என வாதிட முடியும். சீனாவின் உயர் பணக்காரர்கள் 400 பேர் 100பில்லியன் டொலர்களை இழந்தது நாட்டின் இழப்பீடா என அவர்களால் கேள்வி எழுப்ப முடியும். சீனப் பொதுவுடமைக் கட்சியின் உயர் பீடத்தினரும் பெரும் இழப்பீட்டைச் சந்தித்திருக்க வேண்டும்.

### ◆ சீனாவால் திட்டமிட்டுத் தப்ப முடியும்

சீனச் சிறு முதலீட்டாளர்களுக்கு பங்குச் சந்தை அனுபவம் மிகக் குறைவு ஜுலை மாதம் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு அவர்களுக்கும் மேலும் பல புதிதாக வரவிருக்கும் முதலீட்டாளர்களுக்கும் நல்ல படிப்பினை. இந்தப் படிப்பினை சீனாவின் முதலீட்டுத் துறைக்கு உதவியாகவும் வள ஒதுக்கீட்டில் சீன அரசு சிறப்பாகச் செயற்படவும் உதவும். சீனப் பொருளாதாரம் தற்போது எழு விழுக்காடு வளர்கின்றது ஏழு விழுக்காடு வளர்ச்சியே சீன ஆட்சியாளரின் இலக்காகும். பங்குச் சந்தை வேறு பொருளாதாரம் வேறு என்பதை சீனா நிரூபிக்கும் ஆனால் சீனாவின் நாணயத்தை உலக நாணயமாக்குவதற்கு ஒரு அரச தலையீடு குறைந்த பங்குச் சந்தை அவசியம்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

**கடன் சுமையால் கஷ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN



BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

# Geopolitics of the Hegemons and Genocide of the oppressed

By : Athithan Jayapalan

The Indian Ocean region, in particular around the Bay of Bengal and the South China Sea, has taken central stage in the accelerated global geopolitical competition between the U.S.A and China. China's recent step in launching the Asian Infrastructure Investment Bank (AIIB) and the Maritime Silk Road Initiative, have effectively challenged the U.S – Japan economical hegemony hitherto exercised through the World Bank (WB), Asian Development Bank (ADB) and the International Monetary Fund (IMF).

Paralleled with the economic dimensions the geopolitical rivalry between China and U.S unfolds itself in the Indian Ocean and South-East Asia through geostrategic approaches pursued systematically by both establishments.

The U.S pursues what is called the Pivot Asia strategy, concentrating on winning allies in the Indian Ocean and South East Asian region, while securing military, economic and strategic interests in key locations. China is on its hand pursuing the String of Pearls strategy, in which China facilitate infrastructure investments and finance to countries in the Indian Ocean region in return to gain access to or control over harbours and ports, air fields and industry facilities.

The regional power India, guided by the Rajagurus at South Block and the ruling elites in New Delhi, are caught in the midst of two titans.

While projecting the SAARC as an alternative platform for Indian Ocean countries, and as independent of the U.S and China, the Indian state too follows a free market styled state to state interaction and plays its bid in the geopolitical gambit.

The Indian foreign policy is ought to buy friends through co-optation and appeasement while promoting its image as a regional power at international scenarios. Contrary to Indian officials' self-proclaimed image of an independent India, New Delhi wary of the growing Chinese assertion maintains a strategic partnership with Washington.

The Indian strategy in regards to Sri Lanka follows structural ties with Colombo, which proves instrumental in supressing Tamils rights. New Delhi facilitates demands made by Colombo concerning Eezham Tamils, in return for political, economic and military concessions.

While Colombo readily deals with New Delhi, and kept them integrated during the conduct of the genocidal war in 2009, various elite camps among the Sinhala political leadership are largely oriented towards either Washington or Beijing.

In this gambit between the establishments of international power, the oppressed, the wretched of the Indian Ocean becomes prey.

China and the U.S- U.K axis are each negotiating with and facilitating the interests of ruling elites in genocidal nation-states such as Burma, Pakistan and Sri Lanka.

India too has proven to practice such an approach by aiding Colombo.

Incidentally the Indian state has intensified multiple counter-insurgency campaigns directed at the liberation movements of various nations in the North-East of the Indian sub-continent.

In terms of overseeing counter-insurgency and facilitating economic progress New Delhi promotes itself as a regional patron. Regionally it has endorsed states embroiled in genocide and it has aided Sri Lankan and Burmese authorities in arresting rebel activities.

Concerning the island of Sri Lanka, since the 1990's Indo-Lanka relations have been characterized by increased structural cooperation between the Indian and Sri Lankan armed forces and intelligence. This has ensured the continuation of Indian state assistance to the Sri Lankan state and the perpetuating of structural genocide against the Eezham Tamil nation.

In such a matrix of intrigues, games, and rivalry between the powers of the world, the condition of the oppressed in the Indian Ocean become inextricably linked to each other.

The present state of the Kachins and Rohyngyas of Burma, reflects the renewed the state of aggression by the Indian state against the suppressed peoples of Manipur, Assam, Nagaland and Mizoram in the North-Eastern states of India. Burma and India has also been coordinating intelligence and border patrol authorities to enhance the Indian counterinsurgency against the liberation struggles of Assamese, Naga, Mizo and other people of North East India.

In Burma, the state, emboldened by western appraises and interactions following the Military juntas' liberalization policies, intensified its counterinsurgency against the Kachin nation, breaking a 17 year old truce in 2013.

While China and the West see fit to deal individually with the Burmese state, such dynamics serves the Bamar elites in enhancing their genocidal policies towards non-Buddhists. Subsequently the Kachins and the Muslim Roghingyas' have been subjected to increasing violence since 2012.

As reported earlier by TamilNet, the Rohingyas have traditionally inhabited a significant geostrategic location in the Burmese mainland near the Isthmus of Kra, which forms a land bridge between Thailand and Malaysia, and which holds strategic potentials in connecting the Bay of Bengal with the South China sea.

The Burmese, Indian, Sri Lankan and Pakistani state have all interacted with each other under the guise of SAARC and through the Washington and Beijing centred alliances in accommodating the strategic interests of various powers while effectuating aid in enhancing counterinsurgency and structuralising genocide.

The modus operandi of the geo-political cold war between the establishments in Washington, Beijing and New Delhi in the Indian Ocean region, has hitherto followed in aiding larger nations controlling the post-colonial states in annihilating the sovereign political power and the national characteristics of smaller nations.

In Sri Lanka, various competing world establishments each aided the state in pursuing a genocidal counterinsurgency war to crush the Tamil rebel movement and to beleaguer the Tamil homeland.

Recent declassified documents from the US state department revealed that the International Monetary Fund (IMF) and World Bank alongside important US statesmen were informed about the unfolding genocide in 2009, but accepted civilians' deaths as 'collateral damage' as they wanted the LTTE destroyed.

With the direct and indirect blessing of the establishments in Washington and New Delhi, Colombo carried out the process of annihilation.

The Sri Lankan model proved paradigm setting within counterin surgency as the Sri Lankan state under the guise of defeating 'terrorism' executed with international legitimacy a genocidal military onslaught.

Since the war's end the state has enforced an omnipresent military occupation subjugating Tamils and their homeland in the North-East of the Island.

Military, economic and political resources are given to these nation-states in enhancing their counterinsurgency capacities towards pursuing a military solution to national questions of the oppressed. Such structural assistance becomes a central component in perpetuating structural genocide and seems to colour the character of the geopolitical dynamics of the present.

The International assistance provided to states committing genocide against other indigenous nations, proves the complicity of world establishments in the structural oppression.

Furthermore these establishments vie to contain the nationhood of the oppressed nations and thus persist on denying their inalienable right to self-determination.

Various nation-states in the Indian Ocean commit various forms of genocidal violence while retaining the legitimacy of the international community and in return the state clears the land and secures strategic locations on behalf of the various international and regional establishments.

The access to and control of strategic locations in the Indian Ocean region, forms the central pillar of respective geostrategic policies of both Washington and Beijing. Suh concession is meant to check each other's sphere of influence in the Indian Ocean region. The Indian Ocean is the third largest container of water in the world, and oversees important sea trade routes and accounts for a significant share of the world sea trade.

> In Sri Lanka, various competing world establishments each aided the state in pursuing a genocidal counterinsurgency war to crush the Tamil rebel movement and to beleaguer the Tamil homeland.

The drive to access economic, strategic and military interests and concessions from nation-states in South Asia is centrifugal in the unfolding process of geopolitical competition between international and regional establishments in the Indian Ocean for the sea trade and lines of communication pillared around it.

The Eezham Tamils occupying the strategic coasts in North-East Sri Lanka facing the Bay of Bengal, the Baloch occupying the coasts where the Persian Gulf meets the Arabian Sea and the Indian Ocean, the Kachins occupying the strategic regions of Burma and the Rohinygas situated near the Isthmus of Kra have all been victims of the geopolitical dynamics involved in the collusion between competing world establishments and Asian nation-states.

Such a future scenario warrants alternative measures to overcome the political injustice of imperialistic geopolitics. Eezham Tamils, being the victims of an internationally orchestrated structural genocide, should take the lead in edifying the oppressed nations of the world in building an alternative global political network, narrative and platform to aide in emancipating their respective national, linguistic and territorial rights.

*Courtesy: TamilNet*



# Wigneswaran calls for united effort to achieve Tamil nation's aspirations

United and coordinated action between the homeland and Tamil diaspora is needed to achieve the Tamil nation's aspirations of redeveloping the North-East, seeking justice for genocide and finding a political solution based on the Thimphu principles, said the Chief Minister of the Northern Province during a visit to the UK last week.

Addressing a full auditorium at the annual lecture of the International Association of Tamil Journalists (IATAJ), CV Wigneswaran said, "Offering the humanitarian support to rebuild our land is a short term goal. For this your support is needed. Ensuring justice for the genocide that was committed is a medium term goal – for this too your support is needed. Finding a political solution based on the Thimbu principles is a long term goal – that too must take place with your support. I end my talk trusting that you will give your understanding and support for all of us to work together with dedication for this."

Condemning the failure of Sri Lanka's new government to address Tamil issues, Mr Wigneswaran said the Northern Province was working to facilitate a mechanism that would allow the diaspora to contribute to the North-East, adding,

"Rebuilding our society and our lands by our own people will be paying respect to and offering to those who sacrificed their lives for us. At the same time it will be an answer to those who are destroying our nation."

Mr Wigneswaran highlighting that several regimes had ignored Tamil sentiment and deceived Tamil politicians, said,

"However, none of the majority government that have till now come to power have given a responsible response to the Tamil struggle. Instead they have been ignoring our demands. Whenever they are at a tight juncture, in order to resolve it, they have called upon Tamil leaders for support. In the end we have been deceived. We need to put a full stop to these acts of deception. We cannot henceforth be a nation that is deceived."

Reiterating comments made by the previous speaker Dr Suthaharan Nadarajah of the School Oriental African Studies, Mr Wigneswaran, said,

"Within the majoritarian state it is not possible to find a solution to the ethnic problem – this is something we have learnt from many incidents throughout history. The professor spoke of this earlier."

Drawing on Dr Nadarajah's comments highlighting the permanent internationalisation of the ethnic issue in Sri Lanka, Mr Wigneswaran called on the next Tamil generation to work with the homeland to increase "international support" for the Tamil cause.

The Chief Minister said, "I believe that the younger generation who live here, can democratically and within the laws of where they live, struggle for the rights and justice of their loved ones in Ceylon. The professor mentioned this earlier. We need to tell the world what we need. We need to take this forward. Therefore to do this - all youth, unite."

Stressing the need for any political negotiation with the Sri Lankan government to start from the Thimphu principles, Mr Wigneswaran said,

"Those engaged in finding a political solution must act holding the Thimbu principles in their mind. Steps towards a political solution must be taken on the basis that within international law the Tamil people have a right to self-determination."

Condemning the new government's failure adding the need for a victims based approach to justice, "across the world" to come forward and "increase international support for the cause."

Drawing on a Northern Provincial Council resolution calling on the international community to investigate the ongoing genocide of the Tamil people, Mr Wigneswaran, added,

"If progressive Sinhala people will join the struggle to find justice for the genocide committed against the Tamil people, it will pave the way to see a political solution to bring out a lasting peace. It is only if the truth is known that true reconciliation can be sought. You may recall that the South African commission for called the "truth" and "reconciliation" commission. The South African people understood that only if the truth is known that reconciliation can be created."

Adding that the claims of genocide were not newly found, he said,

"The use of the term genocide was not brought by me. Mr Chelvanayagam used it first. He submitted a notice of complaint to dignitaries taking part in a Commonwealth Conference in September 1974. In that he clearly outlined the Sinhala nation's genocide against the Tamil nation. Therefore we cannot back track from the position that what happened to our people was a genocide, despite the name calling and complaints."

Refuting news reports that the US Assistant Secretary of State for South Asia, Nisha Biswal had told him to stop speaking about genocide, Mr Wigneswaran said,

"In fact, she said that we will not ignore the Tamil people's expectations and aspirations and we will continue to work for a better life for them."

Responding to a question from the Tamil Guardian asking how his view on the Tamil ethnic issue had changed during his time as Chief Minister of the Northern Province, Mr Wigneswaran said,

"It has been crystalised now. I was born and bred in Colombo… so therefore I had a different opinion of everything with regard to politics. Only after coming to the Northern Province and having discussions with the people and listening to the complaints of the people have I understood their predicament, plight and aspirations. It is because of those things that there has been a change. My outlook has changed."

"This is why I say that the Tamil leaders must be very careful that they do not allow themselves into a position of appeasing the Sinhala thoughts and politicians. There is a tendency for those who live in Colombo, naturally, to please the Sinhala people around them. They do not want people with whom they are in the best of relationship with to feel unhappy. So we automatically water down our thoughts, when we talk to them. If we take that over to the political arena, without knowing the consequences, it may affect the feelings and future of our people. If we do that, we are being extremely hard on our Tamil people."

"So if you ask me what the 1.5 years have done to me. It has changed my outlook. It has taken away my Colombo outlook to have a Northern Provincial outlook. That provincial outlook has been formulated around the people around me. You feel humbled by the expectations they have."

*Courtesy: tamilguardian.com*



# KIDS பப்பர்

## Summer Holiday Word Search

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| v | g | j | j | o | u | r | n | e | y | v | g |
| s | f | i | m | v | s | w | i | m | c | b | h |
| e | u | u | c | b | k | d | a | v | n | e | o |
| n | z | m | n | e | h | g | e | g | j | p | t |
| t | p | u | m | e | c | o | q | n | n | o | e |
| j | c | o | s | e | y | r | m | p | b | s | l |
| t | e | n | t | y | r | w | e | q | v | t | u |
| s | u | i | t | c | a | s | e | a | s | c | r |
| r | l | s | q | i | c | k | t | q | m | a | h |
| f | a | i | r | g | r | o | u | n | d | r | i |
| s | g | f | a | m | i | l | y | n | g | d | w |
| f | o | n | h | s | h | w | r | p | a | c | k |

suitcase | summer | swim | postcard | hotel

fairground | family | fun | icecream | journey | pack | tent |



## நாள் ஒரு குறள்

கொக்குஒக்க கூம்பும் பருவத்து
மற்றுஅதன் குத்துஒக்க சீர்த்த
இடத்து.


விளக்கம்:

ஒரு செயலைச் செய்வதற்குத் தக்க காலம் வராதபோது கொக்கைப்போலப் பொறுமையாக இரு. உரிய காலம் வந்ததும் கொக்கு, திடுமென இரையைக் கொத்திப் பிடிப்பது போல விரைவாகச் செயலைச் செய்து முடி.

Learn from the stork patience to wait in silence and strike firmly like its peck, at the right moment.

## Summer at the Beach Maze

Help the little boy find his sand castle.



## Word of the week

When you swap something with a friend they give you something and you give them something in exchange. "Would you like to swap this book for that one?" Cool!

**Swap**

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள்,
குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள்,
பழ மொழிகள் என்று எதுவானாலும் உங்களது பெயரைக்
குறிப்பிட்டு எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ அல்லது
தபால் மூலமோ அனுப்பி வையுங்கள்.




## Summer Fun Facts

*Summer.. Summer..*

- Summer is one of the four seasons. The four seasons are Winter,Spring, Summer and Fall (Autumn).
- Summer begins on the Summer Solstice which occurs on or around June 20th or June 22nd.
- The Summer Solstice is when the Earth's axis is tilted toward the sun. During Winter the Earth's axis is tilted away from the sun.
- Summer ends on the Autumnal Equinox in September.
- The longest day of the year occurs on the Summer Solstice.
- The word solstice comes from the Latin words sol meaning sun and sistere meaning to stand still.
- Did you know that when it is Summer in the Northern Hemisphere such as the United States it is winter in the Southern Hemisphere such as Australia.
- The month June got it's name from the Roman goddess Juno queen of the gods and patroness of weddings and marriage.
- In the U.S the most ice cream is sold in the month of July.
- The Eiffel Tower in France can grow up to 6 inches during the Summer! How? The Eiffel Tower is made out of the metal iron. The heat from the hot summer days causes the iron to expand making the tower stretch up to 6 inches.

## Colouring - 246






Tharujan R




Bharathwaj



R. Mayuri (7 Years')



Kirishni (9)



**Mayuri Ramanan (7 Yrs)**



S. Chejen (5 yrs)



S.Shobana



இளைய தலைமுறையின் இணையத் தொலைக்காட்சி
தமிழ்ப்பாவை TV வழங்கும் சிறுவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகள்
கோடைக் கொண்டாட்டம்
தாயகம் தேடிவரும் தமிழ்ப்பாவை சொந்தங்களுக்கு
தடைதாண்டி களமாட தமிழ்ப்பாவை தரும் தளம்.
மேலதிக தொடர்புகளுக்கு : +94212216446, 07424638182 (UK)
www.tamilpavai.tv
தமிழ்ப்பாவை TV




sarasas
SOUTH INDIAN RESTAURANT
• தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
• உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
• சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
• நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே
* Outdoor catering * Function hall * Party orders
புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது
SARASAS CATERING
எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்
We make 30 different Types of Dosa
630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com
FREE CAR PARKING UPTO 100 CARS
Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)

# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்


5 Chapel Road, West Ealing, London W13 9AE

தொலைபேசி இல: 0208 810 0835 தொலைநகல் இல: 0208 840 0485, Email: info@ammanealing.org web: www.ammanealing.org


## மகோற்சவ விஞ்ஞாபனம் 2015

அம்பிகை அடியார்களே,

சொல்லும் பொருளும் என, நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் புதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும், சிவலோகமும் சித்திக்குமே.

- அபிராமி அந்தாதி

இலண்டன் மாநகரில் ஈலிங் பதியில் கோவில் கொண்டு அகிலமெல்லாம் அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான மன்மத வருடம் ஆனி மாதம் 32ம் நாள் 16-07-2015 வியாழக்கிழமை மாலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து, ஆடி மாதம் 01ம் நாள் வெள்ளிக்கிழமை (17-07-2015) காலை 9.30 மணிக்கு கொடியேற்றமும், 09-08-2015 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 10-08-2015 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 12-08-2015 இரவு வைரவர் மடையுடன் நிறைவு பெற திருவருள் கூடியுள்ளது. அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து கிரியைகளில் பங்குகொண்டு, தொண்டுகள் புரிந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### 17-07-2015 முதல் 12-08-2015 வரை பூசை நேரம்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை | 08:15 | சங்கல்பம் | மாலை | 05:15 | சாயரட்சைப் பூசை |
| காலை | 08:30 | அபிஷேகம் | மாலை | 05:45 | ஸ்தம்ப பூசை |
| காலை | 10:40 | ஸ்தம்ப பூசை | மாலை | 06:30 | கலாசார நிகழ்வு |
| காலை | 11:30 | வசந்தமண்டப பூசை | இரவு | 07:15 | வசந்தமண்டபப் பூசை |
| பகல் | 01:00 | மகா பிரசாதம் | இரவு | 10:30 | விழா நிறைவு |



### மகோற்சவ நிகழ்வுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17/07/2015 | வெள்ளி | கொடியேற்றக் காட்சி காலை 9.30 மணி | 31/07/2015 | வெள்ளி | கேதார கௌரி அம்பாள் அருட்காட்சி |
| 18/07/2015 | சனி | இராஜ இராஜேஸ்வரி அருட்காட்சி | 01/08/2015 | சனி | வசந்தோற்சவ அருட்காட்சி |
| 19/07/2015 | ஞாயிறு | கனகதாரா இலட்சுமி அருட்காட்சி | 02/08/2015 | ஞாயிறு | பக்தானுக்கிரக அருட்காட்சி |
| 20/07/2015 | திங்கள் | நாகபூசணி அருட்காட்சி | 03/08/2015 | திங்கள் | சந்தானபாக்கிய லட்சுமி அருட்காட்சி |
| 21/07/2015 | செவ்வாய் | மீனாட்சி அம்பாள் அருட்காட்சி | | | (தங்கரதப் பவனி) |
| 22/07/2015 | புதன் | சரஸ்வதி வித்யா அருட்காட்சி | 04/08/2015 | செவ்வாய் | ஜோதி மங்கள அருட்காட்சி |
| 23/07/2015 | வியாழன் | அர்த்தநாதீஸ்வர அருட்காட்சி | 056/08/2015 | புதன் | ஓம்காரரூப தர்சன அருட்காட்சி |
| 24/07/2015 | வெள்ளி | கைலாச தரிசன அருட்காட்சி | 06/08/2015 | வியாழன் | மகாதுர்க்கா தரிசன அருட்காட்சி |
| 25/07/2015 | சனி | அன்னைபூர்ணாம்பிகை அருட்காட்சி | 07/08/2015 | வெள்ளி | வேட்டைத் திருவிழா |
| 26/07/2015 | ஞாயிறு | அபிராமி தரிசன அருட்காட்சி | 08/08/2015 | சனி | சகோபுர தர்சன அருட்காட்சி (சப்பரம்) |
| 27/07/2015 | திங்கள் | சௌபாக்கியா அம்பிகை அருட்காட்சி | 09/08/2015 | ஞாயிறு | இரதோற்சவ அருட்காட்சி (தேர்)காலை10.00மணி |
| 28/07/2015 | செவ்வாய் | காமாட்சி அருட்காட்சி | 10/08/2015 | திங்கள் | தீர்த்த உற்சவம், அருட்காட்சி |
| 29/07/2015 | புதன் | அனந்தசயன அருட்காட்சி | 11/08/2015 | செவ்வாய் | பூங்காவன அருட்காட்சி, திருவூஞ்சல் |
| 30/07/2015 | வியாழன் | புஸ்பக விமான அருட்காட்சி | 12/08/2015 | புதன் | வைரவர் மடை |

**மகோற்சவ பிரதம குரு வேதாகமஞானசாகரம் சிவஞானசிரோமணி**

## சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்த அரவிந்த குருக்கள்

**பூசைக்குரிய பூக்கள், பால், இளநீர் போன்றவற்றை அபிஷேகத்திற்கு முன்னதாக ஆலயத்தில் கொடுத்து உதவுக. அனைவரும் வருக. அன்னையின் அருள் பெறுக.**

**அன்னையின் சேவையில்**

**விழா உபயகாரர்களுடன்,ஆலய நிர்வாக சபை, அறங்காவலர் சபை**

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# திருமாலுக்கு அடிமை செய்

படைத்தல், காத்தல், அழித்தல் என மூன்று வகையான தொழில்களை இந்து சமயக் கடவுள் செய்வதாக, இந்து சமயத்தை பின்பற்று பவர்களின் அசையாத நம்பிக்கை. இதில் பிரதானமாக, காத்தல் தொழிலைச் செய்யும் கடவுளான திருமாலுக்கு கூடுதலான அடியார் கள் வலம் வருவதை திருப்பதி வெங்கடா சலபதி, ஸ்ரீரங்கநாதரை தரிசிக்கும் அடியவர்க ளின் கூட்டத்தைக் கண்டாலே பிரமிக்க வைக் கும். இக்கடவுளின் அடிமையாளர்களில் ஔவை யாரும் ஒருவராகிய காரணத்தினால் அவர் அடைந்த இன்பம் மற்றவர்களும் அடைய வேண்டுமென்ற அவாவினால், திருமாலுக் கடிமை செய் எனக் கேட்பதில் வியப்பில்லையே.

அடிமை செய் என ஔவையார் கேட்பது, தொண்டு செய் என்ற அர்த்தத்தையே இங்கு குறிப்பிடுகிறது. தொண்டு செய்வதில் எதுவும் விதிவிலக்கல்ல. திருமால் குடிகொண்டிருக் கும் கோவில்களில் எத்தனையோ பணிகள் நாளாந்தம் காத்திருக்கின்றன. இவையாவும் இம்மியளவும் பிசகாமல் தொண்டர்கள் மூலம் நிறைவேற்றப்படுவதை, இவ்வணக்கத் ஸ்தலங் களுக்குச் செல்பவர்கள் அறிந்து கொள்ள முடியும். ஔவையார் கேட்டபடி, தொண்டு செய்யும் உள்ளங்கள் இசைந்தபடியால் தான் இத்தகைய பணிகள் பலர் வியக்கும் வண்ணம் நிறைவேறுவது நிதர்சனம்.

இயற்கையினால் படைக்கப்பட்ட உயிரினங் கள் அனைத்தையும் காக்கும் கடமை தான் மிகச் சிரமமான பணியாகும். இதனை நிறைவேற்ற திருமால் நேரினில் வருவதில்லை. அவரை வணங்கும் அடியார்கள் தான் அப்பணிகளை மேற்கொள்கிறார்கள். இந்த அடியவர்களில், அரசாங்கங்கள் தொடங்கி, அடிமட்ட சேவகர்கள் வரை பங்கு கொள்கின்றனர். இவர்கள் செய்யும் தொண்டுகளுக்கு பலர் ஊதியம் பெற்றாலும், ஊதியம் பெறாதவர்களும் அடங்குவர். ஆகவே தான் ஔவையார் திருமாலுக்கு அடிமை செய் என வற்புறுத்துகிறார்.

விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக முன் நிறுத்திய வைஷ்ணவ சமயம், இந்தியக் கண்டத் தில் பல்லாயிரம் பக்தர்களை கவர்ந்து கூட்டிப் போட்டாலும், இந்துக் கோவில்களில் இடம்பிடிக் கும் திருமாலுக்கான விசேட மண்டபம், காவல் கடவுளான விஷ்ணுவுக்கு கிடைத்த அதி உயர்ந்த அர்ப்பணிப்பு.

கோடானு கோடி அடியவர்களை கவர்ந்திருக் கும் திருமாலின் கோவில்களில் தொண்டு செய்து, தேட முடியாத அறிவுச் செல்வத்தை பெற்ற ஔவையார், திருமாலுக்கு அடிமை செய்யத் தூண்டுவது அவரது அனுபவமாகும்.

# சந்தா விருத்தியில் தெரியாத சங்கதிகள்

மாமன் மகளைத் தான் மணமுடிப்பேன் என அடம்பிடிக்கும் மாப்பிள்ளைகளுக்கு சங்கட மான சங்கதிகளை புட்டு வைக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். நெருங்கிய உறவினருக் குள் மணமுடிக்கும் வழக்கம். ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பியா, வடஅமெரிக்கா நாடுகளில் பல ஆண்டுகளாகப் பழக்கத்தில் இருக்கும் பாரம் பரியம். இதனால் உண்டாகும் நன்மைகளை விட தீமைகள் தான் அதிகமென ஆதார பூர்வ மாக ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.

ஐக்கிய இராச்சியத்தின் பிரபல்யமான எடின் பரொ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜிம் வில்சன் என்பவரது தலைமையில் மேற் கொண்ட ஆய்வில் 350000 மணமானவர்கள் ஈடுபடுத்தப்பட்டு, 110 விதமான மரபணுத் தகைமைகள் தொகுக்கப்பட்டன. இதன் அடிப் படையில், உறவினர்கள் அல்லாதவர்களி டையே மணமுடிக்கும் தம்பதியினருக்கு பிறக் கும் குழந்தைகள், உயரமானவர்களாகவும், அறிவாற்றல் உடையவர்களாகவும் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் அணுகாதவர்களா கவும், நீண்ட ஆயுளைக் கொண்டவர்களாகவும் காணப்பட்டுள்ளனர்.

அதேசமயம், நெருங்கிய உறவினர்களுக் கிடையே திருமணமான தம்பதியினருக்கு கிடைக்கும் குழந்தைகள் தாய்வழியிலோ அல்லது தந்தை வழியிலோ அனுபவித்த பரம் பரை வியாதிகளை தமக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்புக்கள் அதிகளவில் இருப்பதை பரி சோதனைகள் நிரூபித்துள்ளன. வில்சன் மேற் கொண்ட ஆய்வுகளின்படி மிக நெருங்கிய உறவினர்களுக்கிடையே மணமுடித்த தம்பதி யினருக்கு பிறந்த குழந்தைகளின் உயரம் சராசரி 1.2 சென்ரி மீட்டர் குறைவாகவும், அறி வாற்றல், மனப்பிராந்தியம், நினைவாற்றல் இழந்தவர்களாகவும் இருப்பதை அவதானித் துள்ளனர்.

திருமண பந்தத்துக்குள் இணைய விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தமது சந்ததியி னரின் நலன்கருதி, அவரவர் விரும்பும் ஜோடி களை நெருங்கிய உறவினரைத் தவிர்த்து தேடு வது புத்திசாலித்தனமான செயலாக ஆய்வுகள் உணர்த்துகின்றன.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

# நாட்டு மருத்துவம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இந்த அறிவுரை கேட்பதற்கு இனிப்பாக இருந்தா லும், நடைமுறையில் இல்லையே. உடலின் ஆரோக்கியத்தைப் பேணுவது உண்ணும் உணவுகளும், அதனால் கிடைக்கும் சத்துக ளும் என்பதே மருத்துவ சித்தாந்தம் கண்ட கண்ட தின்பண்டங்களையெல்லாம் உணவாகத் திணித்துவிட்டு, மலச்சிக்கல், சிறுநீர்ப் பிரச் சினை, உடல் பருமன், வாயுக் கோளாறு, இருதய நோய்கள் என குடும்ப வைத்தியரை நாடும் பழக் கமும் வழக்கமும் நாளுக்கு நாள் அதிகரித் ததை, ஒவ்வொரு குடும்பத்திலும் காணும் சராசரி நடவடிக்கையாகும்.

பின்தங்கிய நாடுகளுடன் ஒப்பிடும்போது ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்களின் வைத் திய சிகிச்சைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி வருடா வருடம் அதிகரித்து வருவதினால் இந்தப் பற் றாக்குறை சமாளிக்க ஒவ்வொரு நாளும் திக்கு முக்காடுகிறது. இத்தகைய பாரிய செல வீனத்துக்கு மூலகாரணமாக அமைவது, நவீன சிகிச்சைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியும், அதிக ரித்து வரும் நோயாளிகளுமென்பது மறைக்க முடியாத உண்மை.

நாளாந்தம் உண்ணும் உணவு வகைகளில், நாட்டு மருத்துவம் இரண்டறக் கலந்திருந்ததை ஆசியப் பிராந்தியத்திலிருந்து குறிப்பாக இந்தியா, இலங்கை போன்ற இடங்களிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் நன்கு அறிவர். நவீன சிகிச்சை முறைகளினால் கைவிடப்பட்ட நாட்டு மருத்துவம் மீண்டும் துளிர்விடுவதை தொலைக் காட்சிகள் மூலமும், பத்திரிகைகள் வாயிலாக வும் வெளிவரும் செய்திகள் உறுதிப்படுத் துகின்றன.

நவீன மருத்துவத்தில் சிகிச்சைபெறும் அனேக நோயாளிகள் நாளாந்தம் குறைந்தது 8 மாத்தி ரைகளையாவது உட்கொள்வதும், அறுவை சிகிச்சைகளுக்கு ஆளாகுவதும் அனேக குடும் பங்களில் நிகழும் சம்பவங்களாகும். அதேச மயம், குறைந்த செலவிலோ அல்லது செலவே இல்லாமலே நிவாரணமளிப்பதுதான் நாட்டு மருத்துவம். இதில் உள்ள சிக்கல் என்ன வெனில், நாட்டு மருத்துவத்திற்கு தேவைப் படும் மூலிகைகளை ஐரோப்பிய நாடுகளில் காண்பது அரிது. வீதியோரங்களிலும், வீட்டு வேலிகளிலும், மற்றைய காடுகளிலும் கடற் கரை பகுதிகளிலும் தேடுவாரற்றுக் கிடைக்கும் மூலிகைகளை பயன்படுத்தும் நாட்டு மருத்து வம் தாயகத்தில் வாழும் மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம்.

பக்கவிளைவுகளே தந்துவிடாத நாட்டு மருத் துவத்தை அழிந்து விடாமல் மீண்டும் துளிர் விடத் தூண்டும் தொலைக்காட்சி நிறுவனங் களுக்கும், பத்திரிகைகளுக்கு நன்றியுணர் வோடு பாராட்டும் அதேவேளை, இத்தகைய மருத்துவ மூலிகைகளை ஐரோப்பிய நாடுக ளில் வரவழைத்து லட்சக்கணக்காக வாழும் ஆசிய மக்களுக்கு உதவ வேண்டுமென ஆசைப் படுகிறோம். எவ்வளவோ பொருட்களை இறக்கு மதி செய்கிறோம். இதைச் செய்ய முடியாதா என்ன? உணவே மருந்து, மருந்தே உணவு.


ஒரு மில்லியனில் நீங்களும் ஒருவர்

Urgent International Appeal to United Nations,
Refer Sri Lanka to International Criminal Court

International Criminal Court

TRANSNATIONAL GOVERNMENT OF TAMILEELAM

சிறிலங்கா இனப்படுகொலை அரசை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை கோரும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கையெழுத்து போராட்டத்தில் அதாவது 10 லட்சம் கையெழுத்து பெறும் போராட்டத்தில் நீங்களும் ஒருவராக.....

இணையத்தில் www.tgte-icc.org என்ற தளத்திற்குச் சென்று
உங்கள் பங்களிப்பை உறுதிப்படுத்துங்கள்

Urging the United Nations to refer the perpetrators and the alleged perpetrators of Genocide, Crimes against Humanity and War Crimes committed against the Tamil on the island of Sri Lanka



வெம்பிளி சிவன் தேரின் போது கையெழுத்துப் போராட்டம்



Mr. Sokalingam Yogalingam TGTE MP getting ready with volunteers to collect signatures at Eela Parenteses Temple Thear at Ealing Road in Wembley.





Volunteers were meet with Mr. Manikavasagar TGTE Foreign Affairs Minister, Professor Sornarajah (head of International Centre for Prevention & Prosecution of Genocide – ICPPG) and Mr. Manivannan TGTE MP & Deputy Head of ICPPG

www.tgte-icc.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கேட்கும் பேரம் பேசும் வலு



**வேல் தர்மா**

***(ஒரு பேப்பருக்காக)***

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 2015 ஒகஸ்ட் மாதம் 17-ம் திகதி நடக்கவிருக்கும் இலங்கைப் பாராளமன்றத் தேர்தலில் தம்மை 20 தொகுதிகளில் வெல்ல வைத்து தமக்கு பேரம் பேசும் வலுவை வழங்கும் படி தமிழ் மக்களை வேண்டியுள்ளனர். அது எப்படி இந்த 20 தொகுதிக்கணக்குப் போட்டார்கள் என்று தெரியவில்லை. எல்லாத் தொகுதிகளிலும் தம்மை வெல்ல வைக்கும் படி கேட்கவில்லை. 20 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டால், ஏனைய இனத்தவர்களும், ஆட்சியாளர்களும் உலகமும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். அடேங்கப்பா எங்களுக்குத் தீர்வு பெறுவதற்கு எத்தனை தரப்பினர் ஏற்றுக் கொள்ளவேண்டும்?

### ◆ குடியரசு தேர்தலில் பேசாத பேரம்

இலங்கையில் நடக்கவிருக்கும் பாராளமன்றத் தேர்தலின் முடிவுகள் முழு உலகிற்கும் முக்கியமானது என அமெரிக்க உளவுத்துறையின் முன்னாள் பொறுப்பாளர் அட்மிரல் டெனிஸ் சி பிளேயர் தெரிவித்ததைப் பார்க்கும் போது 2015 ஜனவரியில் நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் தேவையான ஆட்சி மாற்றத்தை தமிழர்களின் வாக்கு இலகுவாகச் செய்து கொடுத்துள்ளது என்பது தெளிவாகின்றது. அந்த வாக்கு வலுவை வைத்துக் கொண்டு சீனா அரசுறவாளர்களைச் சந்தித்துப்பேச்சுவார்த்தைநடாத்திபின்னர் அமெரிக்க மற்றும் இந்திய அரசுறவாளர்களையும் சிங்களத் தலைவர்களையும் சந்தித்துக் கதைத்து பேரம் பேசத் தெரியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனி யாருடன் எப்படிப் பேரம் பேசப் போகின்றது?

"நாம் அதிகபட்சமாக 20 நாடாளுமன்ற உறுப்பினர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெறுவதன் ஊடாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இன்றியமையாத பேரம்பேசும் சக்தியைப் பெற முடியும். இதனை, நாம் 2016ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் நிறைவு செய்து கொண்டு, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பயணத்தை நிறைவு செய்யத் தயாராகவுள்ளோம்" இது இரசவரோதயம் சம்பந்தர் அவர்கள் திருமலை சேருவாவெலத் தொகுதியில் தனது கட்சியின் பரப்புரைக் கூட்டத்தில் தெரிவித்த கருத்தாகும். இந்தக் கருத்துடன் திரு இராசவரோதயம் சம்பந்தர் தனது திருவாசகத்தை நிறைவு செய்ய வில்லை. மேலும் ஒரு நகைச்சுவையையும் அவர் உதிர்த்துள்ளார்:

***"மைத்திரிபால சிரிசேன இனவாதத்துடன் எந்த சந்தர்ப்பத்திலும் நடந்து கொள்ள வில்லை. (மைத்திரிபால சிரிசேன) மகாத்மா காந்தி, ஆபிரகாம் லிங்கன், மாட்டின் லூதர்கிங், நெல்சன் மண்டேலா ஆகிய பெரியோர்கள் வழியில் செல்லவுள்ளார்".***

### ◆ தமிழர்களின் பேரம் பேசும் வரலாறு

1960-ம் ஆண்டு நடந்த தேர்தலில் டட்லி சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியும் சி பி டி சில்வா தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் முக்கிய கட்சிகளாகப் போட்டியிட்டன. மொத்த 151(ஆறு நியமன உறுப்பினருடன் 157) தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி 50 தொகுதிகளிலும் சிறி லங்கா சுதந்திரக் கட்சி 46 தொகுதிகளிலும் தந்தை செல்வாவின் தலைமையில் தமிழரசுக் கட்சி 15 தொகுதிகளிலும் லங்கா சமசமாஜக் கட்சி 10 தொகுதிகளிலும் மக்கள் ஒற்றுமை முன்னணி 10 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. இதனால் தமிழரசுக் கட்சியின் ஆதரவு அரசு ஒன்றை அமைப்பதற்கு அவசியம் தேவைப்பட்டது. தேர்தல் முடிந்து தந்தை செல்வநாயகமும் மற்றத் தமிழ்ப் பாராளமன்ற உறுப்பினர்களும் இரத்மலான விமான நிலையத்தில் இறங்கிய போது அவரை 'வரவேற்க' ஐக்கிய தேசியக் கட்சியினரும் சுதந்திரக் கட்சியினரும் மட்டுமல்ல சௌமிய மூர்த்தி தொண்டமானின் பிரதிநிதியாக திரு ராமானுஜம் என்ற முன்னாள் பாராளமன்ற உறுப்பினரும் காத்திருந்தனர். அவரை யார் பக்கம் இழுப்பது என்ற போட்டி அப்போது இருந்தது. அப்போது சிங்களக் கட்சிகளுடன் பேரம் பேசுவதற்கு தமது நான்கு கோரிக்கைகளை தமிழரசுக் கட்சியினர் முன்வைத்தனர்:

1. பண்டா செல்வா ஒப்பந்தத்தில் ஒத்துக் கொண்ட படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான பிராந்திய அரசை உருவாக்குதல்.

2. அரச மொழியாக சிங்களத்துக்கு ஈடாக தமிழையும் இணைத்தல்

3. பறித்த மலையக மக்களின் வாக்குரிமையை மீளளித்தல்.

4. மலையக மக்களுக்கு நான்கு பாராளமன நியமன உறுப்பின பதவி வழங்கல்.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மறுத்து விட்டது. தந்தை செல்வா தனது இரண்டாவது மற்றும் நான்காவது கோரிக்கைகள் தொடர்பில் சிலவிட்டுக் கொடுப்புக்களைச் செய்யத் முன் வந்தார். டட்லி தமிழரசுக் கட்சிக்கு அமைச்சுப் பதவிகள் கொடுக்க முன் வந்தார். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையைத் தந்தை செல்வா மறுத்து விட்டார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிராந்திய சபை கொடுக்க மறுத்து யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை ஆகிய மாவட்டங்களுக்கான தனித் தனி மாவட்ட சபைகளை உருவாக்கி அவற்றிற்கு பண்டா செல்வா ஒப்பந்தத்தில் உள்ள அதிகாரப் பரவலாக்கம் செய்ய முன் வந்தது. அதிக தொகுதிகளில் வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சி அமைக்க ஆளுநன் ஒலிவர் குணத்திலகா அழைத்தார். ஆனால் அரியணை உரையின் பின்னர் நடந்த வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக வாக்களித்து அந்த ஆட்சியை ஒரு சில நாட்களில் தமிழரசுக் கட்சியினர் கவிழ வழிவகுத்தனர். பின்னர் ஆளுநர் ஒலிவர் குணத்திலகா சுதந்திரக் கட்சியின் தலைவர் சி பி டி சில்வாவை ஆட்சியமைக்க தனது மாளிகைக்கு அழைத்தார். அங்கு தந்தை செல்வாவும் சில்வாவுடன் சென்றார். அப்போது குணத்திலகா ஒரு குண்டைத் தூக்கி தந்தை செல்வாவின் முன் போட்டார். அது "நீ நிபந்தனையற்ற ஆதரவை சி பி டி சில்வாவிற்கு வழங்குகின்றாயா?" என்ற கேள்வியாகும். இது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளரான குணத்திலகாவின் திட்டமிட்ட சதியாகும். நிபந்தனை அற்ற ஆதரவு அல்ல எனத் தந்தை செல்வா நேர்மையாகப் பதிலளிக்க நாட்டின் உறுதி நிலையைக் கருத்தில் கொண்டு தான் பாராளமன்றத்தைக் கலைத்து புதுத் தேர்தலுக்கு உத்தரவிடுவதாக ஆளுநர் ஒலிவர் குணத்திலகா தெரிவித்தார். தொடர்ந்து வந்த தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழரசுக் கட்சியும் கூட்டணி அமைக்காமல் இணைந்து போட்டியிட்டன. ஏற்கனவே சி பி டி சில்வாவுடன் ஒத்துக் கொண்டவை யாவும் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் நிறைவேற்றப்படும் என அப்போது சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற சிறிமாவோ தந்தை செல்வாவிற்கு உறுதி வழங்கினார். ஆனால் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற சிறிமா தந்தை செல்வாவின் எந்த ஒரு கோரிக்கையையும் நிறைவேற்ற வில்லை.

1965-ம் ஆண்டில் நடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக தொகுதிகளில் வெற்றி பெற்றாலும் அறுதிப் பெரும் பான்மை பெற வில்லை. ஐக்கிய தேசியக் கட்சி-66, சுதந்திரக் கட்சி-41. தமிழரசுக் கட்சி 14, சமசமாஜக் கட்சி-10, தமிழ் காங்கிரசுக் கட்சி -3 எனத் தேர்தல் முடிவுகள் அமைந்தன. டட்லி சேனநாயக்கா தமிழரசுக் கட்சியுடனும், தமிழ் காங்கிரசுக் கட்சியுடனும் இணைந்து ஒரு கூட்டணி அரசை அமைத்தார். வடக்குக் கிழக்கில் தமிழ் அரச மொழியாக்குவதாகவும் மாவட்ட சபை அமைப்பதாகவும் ஒத்துக்கொள்ளப்பட்டதுடன் மூதவை உறுப்பினர் மு திருச்செல்வத்திற்கு உள்ளூராட்சி அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டது. ஆனால் பின்னர் மாவட்ட சபை உருவாக்கப் படவில்லை. தந்தை செல்வா ஏமாற்றப்பட்டார்.

**20 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டால், ஏனைய இனத்தவர்களும், ஆட்சியாளர்களும் உலகமும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்**

1970-ம் ஆண்டு நடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சிகளின் மேடையில் அ அமிர்தலிங்கத்தின் முக்கிய பரப்புரையாக இருந்தவாசகம் 'இந்த முறைத் தேர்தலில் எந்த ஒரு சிங்களக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற மாட்டாது. எம்மை எல்லாத் தொகுதிகளிலும் வெற்றி பெறச் செய்யுங்கள். நாம் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்போம்.' ஆனால் சிறிமா தலைமையிலான சுதந்திரக் கட்சி தனது தேர்தல் பரப்புரையாக அமிர்தலிங்கத்தின் உரையைப் பாவித்தது. தமிழரசுக் கட்சியின் ஆதரவுடனா நாம் ஆட்சி அமைப்பது? எம்மைப் பெரு வெற்றி ஈட்டச் செய்யுங்கள் என்றுபரப்புரை செய்யப்பட்டதுடன் அமிர்தலிங்கத்தின் உரை துண்டுப் பிரசுரமாக சிங்களத்தில் அச்சடிக்கப்பட்டு நாடு முழுவதும் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டது. தேர்தலில் சிறிமா என்றுமே இல்லாத அளவு பெரு வெற்றி பெற்று தமிழர்களுக்கு இருந்த உரிமைகளையும் பறித்தார். அன்று அமிர்தலிங்கம் சொன்னதைப் போலத்தான் இன்று சம்பந்தர் ஐயா சொல்கின்றார்.

அறுபதுகளில் இருந்தது போல் அல்ல இன்று நிலை சில அமைச்சுப் பதவிகளை விட்டெறிந்தால் கூட்டமாக பாராளமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவார்கள். ஆனால் சம்பந்தர் ஐயாவைச் சேர்த்துக் கூட்டணி அமைத்தால் அரசியலமைப்பை மாற்றி கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு எல்லாம் செய்து கொண்டிருக்க வேண்டும் தமிழர்களுக்கு உரிமை கொடுப்பதற்கு. தமிழர்களின் ஆதரவுடன் மட்டும்தான் ஆட்சி அமைக்க வேண்டும் என ஒரு நிலைமை ஏற்பட்டால் பௌத்த தீவிரவாதிகளும் மகாசங்கத்தினரும் களத்தில் இறங்கி சிங்கள அரசியல்வாதிகளை ஒற்றுமைப்படுத்துவார்கள்.

சம்பந்தர் ஐயா உங்கள் ஜட்ஜ்மென்ற் எப்போதும் தப்பு.



# மெய்வல்லுனர் இறுதிப் போட்டிகள்















British Tamil Sports Council மற்றும் British Tamil Chamber of Commerce மற்றும் இணைந்து நடாத்திய பிரித்தானிய தமிழர் மெய்வல்லுனர் இறுதிப்போட்டிகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சி என்பன கடந்த வாரம் இலண்டனில் இடம்பெற்றன. நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்

# வருடாந்த மாநாடு









சர்வதேச தமிழ் பத்திரிகையாளர் ஒன்றியத்தின் வருடாந்த மாநாடு மற்றும் கலைநிகழ்ச்சிகள் என்பன கடந்த வாரம் ஹரோவில் Kadwa Patidar Centreல் நடைபெற்றன.

இசை நிகழ்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள், அரசியல் உரைகள் என்பனவற்றோடு நிகழ்வுக்கு சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் தாயகத்தின் இன்றைய நிலவரம் தொடர்பான சிறப்புரையும் இடம்பெற்றது.

*நன்றி - புகைப்படங்கள் : tamils.co*

# றோயல் அல்பேர்ட் மண்டபத்தில் ஹரோ தமிழ் பாடசாலையின் இசை நிகழ்ச்சி




உலகளவில் பிரபலமான கலைஞர்கள் மேடையேறி பல நிகழ்ச்சிகளை நடத்திய றோயல் அல்பேர்ட் மண்டபத்தில் (Royal Albert Hall) இசைநிகழ்ச்சி ஒன்றை நடத்துவதற்கு ஹரோ தமிழ்ப் பாடசாலையின் இசைக்குழுவிற்கு (Orchestra) அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. புகழ்பெற்ற ஒரு மண்டபத்தில் பல முன்னணி இசைக்கலைஞர்கள் முன்னிலையில் தமிழ் மாணவர்கள் மேடையேறுவது பெருமைக்குரிய விடயமே. இது ஹரோ தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்களின் கடின உழைப்பினால் பெற்றுக்கொண்ட வெற்றி எனலாம்.

ஹரோ தமிழ்ப் பாடசாலையில் கல்வி பயிலும் நுண்கலை மாணவர்களினதும், ஈழத்தைச் சேர்ந்த எமது நுண்கலை ஆசிரியர்களினதும் திறமையை வெளிக்காட்டும் வகையில், கடந்த வருடம் எமது பாடசாலையின் கலைவிழாவிற்காக இசைக்கலாமணி திரு.ஜலதரனினால் உருவாக்கப்பட்ட இவ்விசைக்குழுவானது, பின்னர் பல போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டியது.

ஒக்ரோபர் 9ஆம் திகதி Birminghamஇல் தேசிய ரீதியில் நடைபெற்ற 'Music for Youth 2015' என்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பாக இசைமழை பொழிந்து, நடுவர்களினதும், பார்வையாளர்களினதும் கவனத்தை வெகுவாக ஈர்த்ததன் காரணமாகவே றோயல் அல்பேர்ட் மண்டபத்தில் இசை நிகழ்ச்சியை நடத்தும் சந்தர்ப்பம் அதற்கு கிட்டியுள்ளது. ஒக்ரோபர் மாதம் ஏழாம் திகதி றோயல் அல்பேர்ட் மண்டபத்தில் நடைபெறவுள்ள 'Around the world' என்ற இசை நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கு இவ்விசைக்குழு அழைக்கப்பட்டிருக்கிறது.

இசைக்கலாமணி திரு.ஜலதரன் அவர்கள் இசைக் குடும்பமான அளவெட்டி நாதஸ்வர வித்துவான் சிதம்பரநாதன் அவர்களின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

பங்குபற்றும் மாணவர் விபரம்:

வயலின்: செல்வி வித்தியா நந்தகுமார், செல்வி சரவண்யா செல்வரத்தினம், செல்வி கஜினி ஆனந்த நடேசன், செல்வி ஹரிணி சுரேன், செல்வி மீனுசா பாஸ்கரன். ஆசிரியர் திரு. ஜலதரன்

வீணை: செல்வி லோகிதா குகப்பிரகாசம், செல்வி தர்சிகா துரைராஜா, செல்வி லதீசா பாலமுரளி, செல்வி பிரியந்தி மகேஸ்வரன், செல்வி பெனிற்றா மோகன், செல்வி லதுசா விக்னேஸ்வரன் ஆசிரியர் திரு. சகாதேவன்

சுரத்தட்டு: செல்வன். பிரவீன் மகேஸ்வரன், செல்வன். திஜன் திருஞானசம்பந்தர். ஆசிரியர் திரு. செல்வநாயகம்

மிருதங்கம்: செல்வன் சரண்யன் குகப்பிரகாசம், செல்வன் ஹரிஸ் மோகன், செல்வன் ஹரிசன் சிறிக்காந்தன், செல்வன் கீரன் சிவசுப்பிரமணியம், செல்வன் கபிலேசன் கிரிதரன், செல்வன் நீலேசன் கிரிதரன், செல்வன் தனுசாந் தம்பையா. ஆசிரியர். ஆனந்தநடேசன்

ஹரோ தமிழ் பாடசாலை இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக தமிழ் மொழி, இந்து சமயம், நுண்கலை போன்ற பாடங்களை கற்பிக்கும், ஒரு முன்னிலை கல்வி நிறுனமாகும். தற்போது ஹரோ பகுதியில் உள்ள Whitmore High School இல் சனிக்கிழமை தோறும் இப்பாடசாலையில் நடைபெற்றுவருகிறது.


அங்கு 400 வரையான தமிழ் மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள்.

*தகவல்: சுரேன் மயில்வாகனம்*

# கலையரசி - 2015









யாழ். இந்துக் கல்லூரி நிறுவி 125 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. இதற்காக பிரித்தானிய யாழ் இந்து பழைய மாணவர் சங்கத்தினர் ஒரு கலை நிகழ்சியை இம்மாதம் 11ம் திகதி குறைடன் Fairfield concert hall ல் ஒழுங்கு செய்திருந்தார்கள்.

யாழ் இந்து பழைய மாணவர்களின் பிள்ளைகளின் நாட்டிய நிகழ்சியுடன் விழா தொடங்கியது. நாட்டிய ஆசிரியைகள் திருமதி சாந்தா அன்னபூரணி மற்றும் திருமதி வினோதினி பரதனினதும் நட்டுவாங்கத்தில் பயின்ற மாணவிகள் தங்கள் கலைத்திறனால் பார்வையாளர்கள் உள்ளத்தைக் கவர்ந்தார்கள. இந்தியாவில் இருந்து பின்னணிப் பாடகர் விஜய் பிரகாஷ் தலைமையில் வருகைதந்த இசைகுழுவினர் சிறந்த முறையில் இசை மழை பொழிந்தார்கள். அதற்கு மெருகூட்டுவதுபோல் தனது இன்சுவைப் பேச்சால் பார்வையாளர்களை மதுரை முத்து கவர்ந்தார். விழாவின்போது பார்வையாளர்களைக் கவர்ந்த கலை நிகழ்சிகளின் படங்களையே நீங்கள் காணுகிறீர்கள்.

# வன்னியில் ஒரு காலத்தில் தன்னிறைவு கொண்டு விளங்கிய மூன்று கிராமங்களின் கதை




**மகாலிங்கம் பத்மநாதன்**

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன். செருக்கன் கிராமங்களின் பொற்காலமும் நீலனாறு, கொல்லனாறுகளால் சூழப்பட்டு பொறிக்கடவை அம்பாளின் அனுக்கிரகத்தால் வாழ்ந்த மக்களின் வரலாறும்.

வேரவில், கிராஞ்சி, பூநகரி, நல்லூர், சாமிப்புலம், நீவில், குஞ்சுப்பரந்தன், செருக்கன், பெரிய பரந்தன், கண்டாவளை, கரவெட்டித்திடல் யாவும் வன்னிப் பெருநிலப்பரப்பில் மிகப் பழமை வாய்ந்த கிராமங்கள். இக்கிராமங்களில் சிறிய குளங்கள், கேணிகள், பள்ளங்கள், மோட்டைகள் பல காணப்பட்டன. இவற்றில் பழமையை வானளாவ உயர்ந்து நின்ற பனை மரங்கள் பறைசாற்றின. ஆனால் இப்போது அப்பனைச் செல்வத்தில் தொண்ணூறு வீதம் அழிந்து போய் விட்டன. இக்கிராமங்கள் யாவும் சுய நிறைவு பெற்ற கிராமங்களாகத் திகழ்ந்தன.

### காட்டுவளம்

இக்கிராமங்களைச் சூழக் காட்டு வளம் அமைந்திருந்தது. வேட்டையும் இக்கிராம மக்களின் ஒரு தொழிலாகத் திகழ்ந்தது. உடும்பு, முயல், பன்றி, மரை, மான் போன்ற மிருகங்களின் சுவை மிக்க இறைச்சி வகைகள் இக்கிராமத்தவரைத் திடகாத்திரமாக வைத்திருந்தன. அவர்களால் வளர்க்கப்பட்ட ஆடு, பசு, கோழி, எருமை போன்றன அவர்களின் செல்வத்தின் அளவுகோலாக இருந்தது.

பனங்கிழங்கு, ஒடியல், பனாட்டு, ஒடியல் மாப்பண்டங்கள் இவர்களை மேலும் வலுவுள்ளவர்கள் ஆக்கிற்று. காட்டு மரங்களாலும், தடிகளாலும், பனைமரங்களாலும் வீடுகளை ஆக்கிக் கொண்டார்கள்.

### கடல்வளம்

கடல்வளமும் இவர்களுக்கு மிக அருகே காணப்பட்டது. மீன், இறால், நண்டு, திருக்கையென கடல் உணவும், நன்னீரில் வளர்ந்த விரால் போன்ற மீன்களும் உணவாகப் பயன்பட்டன.

பதின்ம வயதினர் காடை, கௌதாரி, காட்டுக் கோழி போன்றவற்றை வேட்டையாடி உணவிற்கு மேலும் சுவையூட்டினர்.

முட்டை, பால், தயிர் போன்றவை அபரிதமாக உற்பத்தியாயின. தேன், நெய் போன்றவற்றை எடுத்துச் சென்று சந்தைப்படுத்தலும் ஒரு தொழிலாயிற்று.

ஆனால் நெற்செய்கை, மந்தை வளர்ப்பு, மீன்பிடி என்பனவே இக் கிராம மக்களின் பிரதான தொழில்களாகும். உழுந்து, பயறு, எள்ளு, வரகு, சாமை போன்ற பயிர்களையும் காலமறிந்து பயிர் செய்தனர்.

### கிராமங்களின் அமைவு

கிராஞ்சி, வேரவில், பூநகரி, நல்லூர், சாமிப்புலம் போன்ற கிராமங்கள் பின்தங்கிய பூநகரி பிரதேச செயலரின் கீழ் வருவதால் அவை இப்போது முன்னேற்றப் பாதையில் செல்வதை அவதானிக்கலாம். கண்டாவளை, கரவெட்டித்திடல் போன்ற கிராமங்கள் கண்டாவளைப் பிரதேசச் செயலர் பிரிவில் உயர்ச்சி அடைந்து வருகின்றன.

ஒரு காலத்தில் பரந்தன் கிராம விதானை பிரிவிலும் பின்னர், பரந்தன் கிராமசேவையாளர் பிரிவிலும் இருந்த குஞ்சுப்பரந்தன், செருக்கன், பெரியபரந்தன் கிராமங்களை தற்போது வெவ்வேறு கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு மட்டுமல்ல வெவ்வேறு பிரதேசசெயலர் பிரிவுகளுக்கும் சென்று விட்டன. குஞ்சுப்பரந்தன், செருக்கன், உருத்திரபுரம் கிராமசேவையாளர் பிரிவிற்கும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்கும் சென்றன. பெரிய பரந்தன், பரந்தன் கிராமசேவையாளர் பிரிவிற்கும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்கும் சென்றது. ஏனைய கிராமங்களோடு பலவிதத்திலும் ஒத்திருந்த பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன் கிராமங்களிற்கு 1953, 1954ம் ஆண்டுகளின் டி8, டி10 உருத்திரபுரம் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு முழுமையாகச் செயற்படும் வரை 8ம் வாய்க்கால், 10ம் வாய்க்கால் தண்ணீர் ஏகபோக உரிமையாக இருந்தது. இதனால் இந்த இரண்டு கிராமங்களிலும் முப்போகம் நெற்செய்கை பண்ணப்பட்டது. அதனால் வளமும் கொழித்தது.

### எருமை மாடுகளின் பயன்

உழவுக்குப் பெரும்பாலும் எருமை மாடுகள் பயன்பட்டன. அவை ஒன்றன்பின் ஒன்றாக சால் கட்டி உழும் அழகே அழகு. அனுபவம் வாய்ந்த முதிர்ந்த எருமையை அனுபவசாலியான உழவர் முன்னே செலுத்த ஏனையவை அவரின் பின்னே அணி வகுத்துச் சென்றன. மக்கள் எருமைப் பசுக்களை உழவிற்குப் பயன்படுத்தாத பண்பு கொண்டவர்களாக இருந்தனர். நாம்பன்கள் மட்டுமே உழவிற்குப் பயன்படுத்தப்பட்டன.

### பலகை அடித்தல்

தெரிவு செய்யப்பட்ட விதை நெல்லை நல்ல நேரம் பார்த்து நீரில் ஊறப்போட்டு அவை முளை வந்த பின் பலகை அடித்து மட்டம் தட்டப்பட்ட கூழான மண்ணின் மேல் முளை நெல் விதைக்கப்பட்டது. கிராமத்தவர் யாவரும் ஒன்று சேர்ந்து வயல்களின் மேட்டுத் தன்மை, பள்ளம் இனங்கண்டு கூட்டு முறையிலேயே பலகை அடித்து விதைத்தார்கள்.

பலகையடித்தல் மிகவும் கோலாகலமாக நடைபெறும். யாரின் காணியில் பலகை அடிபடுகின்றதோ, அவர் வீட்டில் கிராமத்தின் ஏனையவர்களுக்கும் சாப்பாடு. காலை தோசை, சம்பல், மதியம் ஒரு பெரிய கிடாரத்தில் சோறு, ஒரு பெரிய சட்டியில் மீன் அல்லது இறைச்சிவத்தலும் கத்தரிக்காயும் போட்ட கறி, ஒரு சொதி. சிறுவர்கள் பாடு ஒரே கொண்டாட்டம் தான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையைச் செய்வார்கள். பலகை அடிக்கும் போது பலகையை அழுத்த சுமை தேவைப்படும். அநேக சந்தர்ப்பங்களில் என்னைச் சுமையாகப் பயன்படுத்துவர். மண் நீர்மட்டத்திற்கு மேல் தெரியும் இடங்களில் பலகையில் ஏறி நின்று அம்மண் திடலை அமத்தி விட வேண்டும்.



பன்றி, மான், மரை, யானை முதலியவற்றினால் ஏற்படும் அழிவைத் தடுக்கும் காவல் கடமை

பலகை அடித்து முதல் மூன்று நாட்கள் 'சிறகை' என்றொரு வகைச் சிறிய தாராக்களிலிருந்து நெல்லைக் காப்பாற்ற வேண்டும். ஒரு வயலில் சிறகைக் கூட்டம் இறங்கினால் அந்த வயலின் முளை நெற்கள் யாவற்றையும் குடித்து விட்டுச் சென்று விடும்.

பயிர் முளைத்து அறுவடை வரை பறவைகள் மிருகங்களிலிருந்து அவற்றைக் காப்பாற்றுதல் மிகப்பெரிய கடமையாகும்.



நெல் முற்றும் காலத்தில் பகலில் மயில், கௌதாரி போன்றவை கூட்டமாக வந்து அழிவை ஏற்படுத்தும். பால் பிடிக்கும் காலத்தில் பச்சைக்கிளிகள் கூட்டமாக வந்து நெல்லின் பாலைக் குடித்துச் சென்று விடும்.

இரவில் யானை, பன்றி, மான், மரை, குழுவன் மாடுகளினால் பெரும் அழிவு ஏற்படும். இதற்காக ஒவ்வொரு விவசாயியும் காட்டுக் கரைகளில் காவல் கொட்டில், காவற்பரண் அமைத்து இரவில் அதில் தங்கி மணிகளை அடித்து விலங்குகளை விரட்டுவார்கள். சீன வெடிகளைக் கொளுத்தி எறிவார்கள். விவசாயிகளின் நன்மைக்காக அரசாங்கம் ஒவ்வொரு விவசாயிக்கு ஒவ்வொரு துப்பாக்கிக்கான அனுமதிப்பத்திரம் என வழங்கி அவர்களுக்கு ஒவ்வொரு துப்பாக்கி வைத்திருக்கும் உரிமையை வழங்கியது. சில சந்தர்ப்பங்களில் காவல் கடமையிலிருக்கும் போதே பன்றி வேட்டை வாய்த்து விடும். மான், மரை, யானை போன்றவற்றைச் சுடுதல் சட்டப்படி குற்றம்.

தமது பரண், காவற் குடிலைச் சுற்றி காட்டு மரங்களைப் போட்டு எரித்து விடுவார்கள். காட்டு மிருகங்கள் நெருப்புக்கு அஞ்சி பரண், குடிலை நாடுவதில்லை. ஓரிரவு காவற் கடமையிலிருந்த நான் காலை இரண்டு மணியளவில் அயர்ந்து தூங்கிவிட்டேன். காலையில் எழுந்து பார்த்தால் பரணுக்கு மிக அருகில் இருந்த வயல் யானைக் கூட்டத்தால் துவம்சம் செய்யப்பட்டிருந்தது. வரம்பில் யானை லத்தி சூடாகக் காணப்பட்டது.

காவற்கடமையின் போது சில விவசாயிகள் மணி அடிப்பதுடன் நன்கு இராகம் எடுத்துப் பாடுவர். ஒரு காவற்காரர் மணியடிக்க, பக்கத்திலுள்ளவன் தாமும் முழிப்பு என அடுத்து அடிக்க, அடுத்தவர் தொடர இரவு பயத்துடன் ஒருவித இனிமை கலந்ததாக இருக்கும்.

மணியடித்த இடைவெளியைக் கருத்தில் கொண்டு எந்தக் காவற்காரர் நித்திரை கொண்டு விட்டார், எந்த நேரத்தில் என்று துல்லியமாகக் கூறி விடுவார்கள்.

*அடுத்த பேப்பரில் தொடரும்...*

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா


# எனது அமெரிக்கக் கண்டத்திற்கான குறும் பயணம்

பாகம் 176

சென்றமாத இறுதிப்பகுதியில் அமெரிக்காவில் நியுயோர்க், வாஷிங்டன் உட்பட கனடா ரொறன்ரோவிற்கும் மனைவியுடன் சென்று வந்தேன். பிரயாணத்தின் இறுதிக்கட்டத்தில் ஜெர்மனியில் வாழ்ந்த எனது தமையனார் இயற்கையெய்தியதால் அங்கும் சென்று வர நேரிட்டது. அதனால் சென்ற முறை இந்த அலசுவாரம் தொடரை எழுத முடியவில்லை.

*ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்*
*மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா*

*நமக்கும் அது வழியே நாம் போமளவும்*
*எமக்கென் என்று இட்டுண்டிரும்*

என்கிறார் நல்வழியில் ஔவையார். போனவர்கள் போக இருப்பவர்கள் தமது வாழ்வை தம்காலம் வரும்வரை கொண்டு போவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும். அதனால் இம்முறையும் தவறவிட்டு விடாமல் அலசுவாரத்தைத் தொடர்கிறேன்.

கனடா ரொறன்ரோவிலிருந்து ஐக்கிய அமெரிக்காவின் நியுயோர்க் நகரத்திற்குக் கோச் எனப்படும் பஸ்ஸில் செல்லப் பன்னிரெண்டு மணித்தியாலத்திற்கும் அதிகமாக எடுத்தது. பவ்வலோ - அதாவது எருமை எனப்படும் நகரில் ஐக்கிய அமெரிக்காவிற்கும் கனடாவிற்குமானவோர் ஓர் எல்லைக்காவல் நிலையத்தைத் தாண்டி குடிவரவுக் கட்டுப்பாட்டாளர்களின் அனுமதியுடன் அமெரிக்காவினுள் நுழைந்தோம். பவ்வலோ அமெரிக்காவின் ஓர் சிறு நகரமாகும். புதிதாக அமெரிக்கா செல்ல எண்ணும் வாசகர்களுக்கு இந்தச் செய்தி உதவுமென்பதால் எழுதுகிறேன்:

அமெரிக்காவுக்குள் நுழையும் பிரித்தானியப் பிரஜைகள் கடல் மூலமோ அல்லது வான் வழியாகவோ நுழைவதாயின், அதற்கான நுழைவு விசாவை தாங்கள் இறங்கும் துறையில் பெற்றுக்கொள்ள முன்கூட்டியே பதிவு செய்யுமாறு கேட்கப்படுகின்றனர். ஆன் லைனில் இதனைச் செய்ய முடியும். இதனை 'விசா விட்டுக்கொடுப்பு' அதாவது 'விஸா வெய்வர்' திட்டமென்று கூறுகிறார்கள். தரை வழியாக அமெரிக்காவினுள் பிரித்தானியப் பிரஜைகள் நுழைவதானால் முன்கூட்டிய விண்ணப்பம் வேண்டியதில்லை. எல்லைக்காவல் நிலையத்திலேயே உரிய படிவத்தை நிரப்பிக் கொடுத்து அந்த விஸா விட்டுக்கொடுப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும். முன் கூட்டிய அனுமதியைப் பெறும் விண்ணப்பத்தை, வான் அல்லது கடல்வழி இறங்கு துறையை அடைய எழுபத்திரண்டு மணித்தியாலங்களின் முன் செய்ய வேண்டுமென்று கூறபடுகிறது. நாங்கள் தரைவழிப் பயணத்தை மேற்கொண்டதால் பெரிய தடைகள் இந்த வழிமுறையில் ஏற்படவில்லை. விஸாக் கட்டணம் தலா 6 அமெரிக்க டொலர்களாகும்.

நியுயோர்க் நகரம் சற்று நெரிசலானதாக வானுரஞ்சும் மாடங்களுடன் காணப்படுகின்றது. லண்டனுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த அடுக்குமாடிகள் மிகவும் அதிகம் போலத் தோன்றியது. நகரத்திற்கு வருபவர்களை நகரத்தைச் சுற்றிக் காண்பிக்கவென்று பல பேருந்துச் சேவைகள் இயங்குகின்றன. அச்சேவைகளுக்கு சுற்றுலாப் பயணிகளைச் சேர்த்துக்கொடுக்கப் பல கறுப்பின இளைஞர்கள் முண்டியடித்துக்கொண்டு முன்வருகிறார்கள். இந்தியா போன்ற நாடுகளில் இத்தகைய கிராக்கி பிடித்துப் பிழைக்கும் இளைஞர்கள் காணப்படுவது போலவே நியுயோர்க்கிலுமுள்ளனர். அவர்கள் ஆளுக்காள் போட்டிபோட்டு தங்கள் தங்கள் பஸ் கொம்பனிகளுக்காகச் செயற்படுகின்றனர். ஏதாவது ஒரு கம்பனியின் பஸ்ஸில் ரிக்கற்றை எடுத்துக் கொண்டு நாள் முழுவதும் வேண்டிய இடத்தில் இறங்கி இடங்களைப் பார்வையிட்டபின் தொடர்ந்து வரும் அதே கம்பனி பஸ்ஸில் ஏறி வேறு இடத்திற்கு அதே ரிக்கட்டுடன் செல்லலாம். லண்டனைப் போலவே இப் பேருந்துகள் நகரத்தைச் சுற்றி வலம் வருகின்றன.

நியுயோக்கில் விமானத்தினால் மோதிச் சிதறடிக்கப்பட்ட இரட்டைக் கோபுரங்களிருந்த இடத்தில் ஞாபகச்சின்னமொன்றும், ஓர் காட்சியகமும் கட்டப்பட்டுள்ளது. புதிய உலக வர்த்தக நிலையமும் கட்டப்பட்டுள்ளது. நினைவுச் சின்னத்தை மிக எளிய முறையில் ஒரு பெரிய நீர்த் தொட்டியினுள் சிறிய தொட்டியொன்றை அமைத்துக் கட்டியிருக்கிறார்கள். அதனுள் நீர் வீழ்ச்சிபோல் நீர் விழுகின்றது. தொட்டிச் சுவரின் மேற்பரப்பில் இறந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதில் சில இந்திய, தமிழ் பெயர்களையும் காணக்கூடியதாக இருந்தது. பக்கத்திலேயே சரிந்த சுவரோடு கட்டப்பட்ட காட்சியகம் உள்ளது. ஒரே நாளில் சுதந்திரச் சிலையுட்பட மேலும் சில இடங்களைப் பார்த்துவிட்டு இரவோடிரவாக பஸ் பிடித்து வாஷிங்டன் கிளம்பினோம்.

நாங்கள் காலையில் சென்று இறங்கிய யூனியன் பஸ்நிலையம் ரெயில் நிலையத்துடன் இணைந்திருந்தது. சற்று அமைதியான பிரதேசமாக அந்தக் காலை வேளையில் காணப்பட்டது. அங்கும் பயணிகளைச் சுற்றுலா அழைத்துச் செல்லும் பஸ் சேவைகள் செயற்படுகின்றன. வாஷிங்டன் நியுயோர்க்கை விட நெரிசல் குறைவானதாகவே எனது கண்ணுக்குப் புலப்பட்டது. வெள்ளை மாளிகை, லிங்கன் ஞாபக நிலையம், வாஷிங்டன் கோபுரம் போன்ற பல இடங்களுக்கும் சென்றோம். நாங்கள் சென்ற இரண்டு பெரிய நகரங்களிலும் லண்டனிலுள்ளது போலவே தெருவிலிருந்து கொண்டு பிச்சையெடுக்கும் சிலரையும் காணக்கூடியதாயிருந்தது. ஐக்கிய அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியான வாஷிங்டனின் ஞாபகார்த்தமாகக் கட்டப்படுள்ள கோபுரத்தின் உச்சிவரை கொண்டு சென்று காட்டினார்கள். எடுத்த பஸ் டிக்கட்டில் மேலதிக கட்டணம் எதுவுமின்றி போகக்கூடியதாக இருந்தது. அந்தக் கோபுரத்தின் உச்சியிலிருந்து வாஷிங்டனின் சகல திசைகளையும் பார்க்கக்கூடியதாக இருந்தது.

கனடா, ரொறன்டோவில் அனேக உறவினர்கள் இருந்ததால் கனடாவிற்குள் சில இடங்களை அவர்களின் துணையோடு சிரமமில்லாமல் காரில் சென்று பார்க்க முடிந்தது. அமெரிக்க கனடிய எல்லையிலிருக்கும் நயகரா நீர் வீழ்ச்சி அவற்றில் முதன்மையானது. தூரத்தில் அழகாக வீழ்ந்த அருவியின் அழகை படகில் கூட்டிச் சென்று அருகே காட்டினார்கள். ஒன்றும் தெரியவில்லை. எங்கும் நீர் புகைபோல பரவிக் காட்சியைக் கெடுத்தது. உடுப்புகளும் நனைந்தன. உடுப்புகளைப் பாதுகாக்க அவர்கள் தந்த றெயின் கோட்டுகளை அணிந்தும் பயன்படவில்லை. ரொறன்டோவிலிருந்து நயாகரா போகும் வழியில் நிறையப் பழத்தோட்டங்களுள்ளன. இங்குள்ளதைப் போலவே காசுகட்டி உட்சென்று ஸ்ராபரி, செரிப் பழங்களை நாமே பறித்து உண்பதோடு கட்டிய காசுக்கு அளவாக எடுத்துக்கொண்டும் வரலாம். அதிகம் பறித்திருந்தால் அதற்குரிய மேலதிக விலையை அறவிடுவார்கள். தங்களது உற்பத்தியை மக்களைக் கொண்டே அறுவடை செய்து அதை அறுவடை செய்தவர்களிடமே நல்ல விலைக்கும் விற்றுவிடும் சாமர்த்தியம் மெச்சத் தக்கதாக இருக்கின்றது. தோட்டங்களில் செய்யப்பட்டுள்ள வசதிகளால் அங்கு தரித்துச் செல்லும் உல்லாசப் பிரயாணிகள் அவ்விடங்களில் தங்கி நின்று, கொண்டுபோகும் உணவை உண்டு மேற் செல்லுகின்றனர்.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

ரொறன்டோவில் சிஎன் கோபுரம் சிவில் எஞ்சினியரிங் துறையில் மனித குலம் அடைந்துள்ள முன்னேற்றத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் காணப்படுகின்றது. நிலமட்டத்திலிருந்து உச்சிவரை 553.33 மீற்றர்கள் (1815.4 அடி) உயரமான அக்கட்டிடத்தில் 147 மாடிகள் உள்ளன. அதன் கடைசி மாடியிலுள்ள திறந்த வெளி வரை மக்கள் செல்ல முடியும். கடைசிமாடியில் கோபுரத்துக்கு வெளியேயுள்ள சுற்றுப் பிரகாரத்தில் நின்றுகொண்டு தங்கள் மனவுறுதியைச் சோதிப்பதற்காக மக்கள் பாதுகாப்புப் பட்டியை அணிந்தபடி வெறும் வெளியில் அந்த வட்டத் தட்டின் விளிம்பில் நின்றபடி சரிந்து மகிழ்கிறார்கள். கீழே கிடுகிடு பாதாளம். அதனைப் பார்த்தபடி பாதுகாப்புப் பட்டியை மட்டும் நம்பிக்கொண்டு சரிந்து தொங்குவதற்கு நிறைந்த மனவுறுதி வேண்டும். அந்த விஷப் பரீட்சையில் இறங்கி தற்சோதனை செய்ய மேலதிக கட்டணம் வேறு அறவிடுகிறார்கள். நாங்கள் தீரர்களல்லாத சாதாரண பார்வையாளர்கள் சென்று பார்க்கும் 346 அடி உயரம் வரை சென்று பார்த்தோம். அந்தத் தட்டிற்கு ஒரு மாடி கீழே ஓரிடத்தில் கண்ணாடித் தட்டொன்றை வைத்துக் கீழே கிடுகிடு பாதாளத்தைப் பார்த்தபடி நடந்து திரிவதற்கு இடமொதுக்கப்பட்டுள்ளது. பெரியவர்கள் நடக்கக் கூசும் அந்தத் தட்டில் விபரமறியாப் பிஞ்சுக் குழந்தைகள் ஓடியும் தவழ்ந்தும் விளையாடின. 'இளங்கன்று பயமறியாது' என்பதற்கு இது ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தது.

கனடாவில் எம் தமிழ் உறவுகளைச் சந்திக்கக்கூடியதாயிருந்தது. என்னைத் தெரிந்த இலக்கிய நண்பர்கள் தங்கள் வாராந்த ஒன்று கூடலுக்கு என்னை ஓர் விருந்தினராக அழைத்துக் கௌரவித்தார்கள். ஐயா கவிநாயகர் கந்தவனம் அவர்களது தலைமையில் கவிஞர் அலெக்ஸாந்தர், அருட்கவி, சகோதரி மீரா, மாவலி மைந்தன் சண்முகராஜா, ஐயா முருகேசு மயில்வாகனன் உட்படப் பலர் கலந்து கொண்ட அந்நிகழ்வில் ஓர் விருந்தினராக என்னையழைத்து எனது ஆக்கங்கள், கவிதைகள் தொடர்பான கருத்துக்களைக் கேட்டதோடு லண்டனில் இயங்கும் இலக்கிய அமைப்புகள் பற்றியும் ஆர்வத்துடன் கேட்டறிந்தனர். அவ் இலக்கியச் சந்திப்பே சென்ற பிரயாணத்தின் மிக மனத்திருப்தியளிக்கும் பகுதியாக அமைந்தது. துரதிஷ்ட வசமாக தமையனாரின் மரணச் செய்தி வந்து எட்டிவிட்டதால் விரைவில் புறப்பட வேண்டுமென்னும் அவசர உணர்வு போதிய ஆர்வத்துடன் அந்நிகழ்வில் பங்குபற்றுவதைக் குழப்பியது.

**நகரத்தைச் சுற்றிக் காண்பிக்கவென்று பல பேரூந்துச் சேவைகள் இயங்குகின்றன. அச்சேவைகளுக்கு சுற்றுலாப் பயணிகளைச் சேர்த்துக்கொடுக்கப் பல கறுப்பின இளைஞர்கள் முண்டியடித்துக்கொண்டு முன்வருகிறார்கள். இந்தியா போன்ற நாடுகளில் இத்தகைய கிராக்கி பிடித்துப் பிழைக்கும் இளைஞர்கள் காணப்படுவது போலவே நியுயோர்க்கிலுமுள்ளனர்.**

இம்முறை இந்தத் தொடரில் நான் செய்த பிரயாணத்தை முன் நிறுத்தி முடிந்தவரை சுருக்கமாக வாசகர்களுக்கு அதை ஓர் தகவற் செய்தியாகக் கொடுத்துவிட வேண்டுமென்னும் ஆர்வ மேலீட்டால் இப்பத்தியில் அதுபற்றிய விபரங்களைக் கொடுத்திருக்கிறேன். வழக்கமாக சமகால அரசியல், நாட்டுச் சூழ்நிலைகளை முன்நிலைப்படுத்தியே எழுதப்படும் அலசுவாரம் இம்முறை தடம் மாற்றப்பட்டுள்ளது.

சமீபத்தில் இயற்கை எய்திய இசையமைப்பாளர் எம் எஸ் விஸ்வநாதன் அவர்கள் தமிழிசையுலகில் ஓர் பாரிய இடைவெளியை விட்டுச் சென்றுள்ளார். அவருக்குப் பின்னால் இளையராஜா, ஏ ஆர் ரகுமான், தேவா என்று பலர் இருந்தாலும் அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது. அந்த இசைமேதை அமைத்த மெட்டுக்களும் அவரது தனித்த குரலும் என்றும் தமிழர்களின் நெஞ்சில் நிலை நிற்கும். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் அலசுவாரம் வாசகர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன்.

*தொடருவம்..*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் | அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள் | விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும் அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven | zero**
graphic designers
**020 7043 4310**
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from **concept to design**

வெகுவிரைவில் தரணியெங்கும்...

# தமிழ்

| வணக்கம் தமிழ் | ஞாபகம் வருதே | விம்பம் | உப்பு புளி காரம் |
| வெள்ளித் திரை | ஒளித்தடம் | மயக்கும் மாலைப் பொழுது | அரும்புகள் |
| நான் நீ ! | மருத்துவம் | நாம் யார் ? | நடந்து வந்த பாதை |
| வேங்கைகள் | பாட்டுக்குப் பாட்டு | யாதும் ஊரே | உண்மையின் வெளிச்சம் |
| தரிசனம் | நிகழ்வுகள் | இன்றைய பார்வை |
மற்றும் பல சுவையான நிகழ்ச்சிகள்...

**மேலதிக விபரங்களுக்கு**

Tel : 020 7043 4316

Web : www.tamil.com

Facebook.com/tamiltelevisionnetwork | @tamiltvnetwork

# இசை என்னும் இமயமலை - எம்.எஸ்.விஸ்வநாதன்

இந்த இசை மலை சரிந்ததற்கு நான் எதுவும் எழுத வில்லையெனில் அது பஞ்சமாபாதகம். ஆனால் ஒரு பத்தியில் எழுதி ஓய்ந்துவிடவும் முடியாது. தமிழ்த் திரை இசை வரலாற்றில் அரைப்பங்கையாவது ஆண்டு கொண்டிருந்தவர் எம்.எஸ்.விஸ்வநாதன்.

தமிழ்த் திரையிசைக்கு ஒருவர் என்றால் அவர் எம்.எஸ். விஸ்வநாதன் என்கின்றேனே அது தான் அவர். பழங் கள்ளின் ருசி. நாள் பட்டுப் போன மதுவகை இன்னும் மகத்துவம் பெறுமே. அது தான் எம்.எஸ்.வி.

*"தாழையாம் பூமுடிச்சு..", "கட்டோடு குழலாட.."* போன்ற தெம்மாங்குப் பாடல்களும் *"தொட்டால் பூ மலரும்..", "கண்கள் எங்கே.."* போன்ற மெலடிப் பாடல் களும் (விஸ்வநாதன் இசையமைத்த அத்தனை பாடல்க ளும் மெலடியில் சித்து விளையாடியது *"ஆடலுடன் பாட லைக் கேட்டு"* பாடலில் *"கள்ளிருக்கும் மலரே.."* என்ற வரியில் வந்து போவது மெலடி) இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். விஸ்வநாதன் என்ற பெயர் இசைச் சமுத்திரம் என்பதற்கான மறுபெயர் பல்லாயிரக் கணக் கில் மெட்டுக் கட்டிய பாடல்களில் ஒன்றிரண்டை எடுத்துக் காட்டுவது அவ்வளவு அழகல்ல.

அப்போது இரு திலகங்களாக இருந்தன. இருவரின் பானியும் வேறானவை. *"நான் ஆணையிட்டால்.."* என்று எம்.ஜி.ஆர். சபதமெடுத்தார். சிவாஜியோ *'எங்கே நிம்மதி'* என்ற கழிவிரக்கத்தில் ஆழ்ந்தார். அவரவர் பாணிக்கு மெட்டுக் கட்டியவர் எம்.எஸ்.வி. ஒருவர். ஒன்றும் சோனை போனதில்லை. *"நான் ஆணையிட்டால்.."* என்ற பாடலை கேட்டு பலர் எம்.ஜி.ஆரும் சௌந்தர் ராஜனும் என்று நினைப்பர். நான் எம்.எஸ்.விஸ்வநாதனை மாத்திரமே நினைப்பேன்.

பிம்சிங் *'பாசமலர்', 'பாலும் பழமும்'* என்று குடும்பச் சித்திரங்களை திரையில் வரைந்தால் அதற்கு இசையூட்ட விஸ்வநாதனே இருந்தார். *பிஆர்.பந்துலு, கர்ணன், 'ஆயிரத்தில் ஒருவன்'* என்று காவியம் வரைய இசை ஓவியம் வரைந்தவர் விஸ்வநாதன். கலைச்சித்திரங்கள் எனும் *'நெஞ்சம் மறப்பதில்லை', 'நெஞ்சில் ஓர் ஆலயம்'* என்று ஸ்ரீதர் சித்திரம் வரையும் போது எவரினால் அதற்கு இசையூட்ட முடிந்தது? பாலச்சந்தர், புதுமை எனப் படைத் தவற்றுக்கு பெரும் பங்கு வழங்கியவர் விஸ்வநாதன் அவர்களே. "சிந்துநதியின் விசை என்று பாரதியாரே எம்.எஸ்.வி.யின் இசையில் அற்புதமாக இறங்கினார்".

சௌந்தர்ராஜன், சுசிலாவை விடுங்கள். "செந்தமிழ் தேன்மொழியால் என்று ரி.ஆர்.மகாலிங்கம் பரவசப் பட்டாரே" அப்பரவசம் எம்.எஸ்.வி.க்கு உரியதல்லவா? பி.வி.சீனிவாஸ் என்கின்ற அற்புதமான பாடகர் வெளித் தெரிந்ததும், வெற்றிகள் குவித்ததும் விஸ்வநாதன் ஒரு வரால் மாத்திரமே *"நான் பாடிய பாடலை"* கேட்டுப் பாருங்கள். *"உள்ளத்தில் நல்ல உள்ளம்"* என்று சீர்காழி உருக்கி *"செஞ்சோற்றுக் கடன் தீர்க்க"* என்ற போது விம்மி னோமே. விஸ்வநாதன் அல்லால் யார் செய்த வேலை இது. *"வாராய் என் தோழி வாராயோ"* என்று அழைத்த குரல் எல்.ஆர்.ஈஸ்வரிக்கு மாத்திரம் உரியதல்ல.

*'பாட்டொன்று கேட்டேன்..'* என்று யமுனாராணியை அறிந்தோமே. அறிய வைத்தவர் யார்? *"உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்"* என்று எங்களிடத்தில் தன்னைத் தந்தவர் எஸ்.ஜானகி மாத்திரம் தானா ? விஸ்வநாதன் இல்லையா ? *"தெய்வம் தந்த வீடு"* என்று யேசுதாசை மாத்திரமல்ல எங்களையும் வீதியில் அலைய வைத்தவர் விஸ்வநாதன் அவர்கள். *"உனக்கென்ன மேலே நின்றாய்"* என்று எஸ்.பி.பாலாவுடன் நாமும் நின்று ஏங்கி னோமே. ஏக்கம் தந்தவர் எவர்? *"நீராட நேரம் நல்ல நேரம்?"* என்ற குரலில் குளிர்மையும் விரகமும் வைத்தபடி பாடி நம்மை வசியப்படுத்தினாரே வாணிஜெயராம். அந்த வசியத்தில் நிற்கின்றார் விஸ்வநாதன். *"எங்கிருந்தாலும் வாழ்க"* என்று எல்லாம் கைவிட்டுப் போன துக்கம் ஏ.எல். ராகவனுக்கு மாத்திரம் உரித்த ஒன்றா ? எம்.எஸ்.வி. அங்கு இல்லையா ?

'வசந்த கால நதிகளின் வைரமணி நீரலையாய்' ஜெயசந்திரனை அழைத்து வந்தவர் யாரோ எனில் விஸ்வ நாதன் சாரே தான்.

மெட்டிலேயே ஓர் ஓசை உள்ளது, எம்.எஸ்.வியிடம். *"ஆயிரம் கரங்கள் நீட்டி அழைக்கின்ற தாயே போற்றி"* என்று பாடுகின்ற போது அந்த அழைப்பும் போற்றுதலும் அந்த மெட்டிலேயே உள்ளது. *'ராமன் எத்தனை ராமனடி'* என்ற திரைப்படத்தில் *"சித்திரை மாதம் பௌர்ணமி நேரம்"* என்று ஒரு பாடல். ஒரு தொடரூந்து செல்கின்றபோது பாடுகின்ற பாடல். அப்பாடலில் மெட்டி லேயே தொடரூந்து செல்லும் தாளக்கட்டும் ஹம்மிங்கில் தொடரூந்தின் ஊதல் ஒலியும் கேட்கும். இதனை நுணுகிப் பார்த்தால் உணரலாம்.

## இரவி அருணாசலம்

**எழுதுவது என்னவெனில்**

*'தக தைய தைய'* என்ற ஏ.ஆர்.ரகுமானின் பாடலில் தாளக்கட்டும் 'தக தைய' என்ற சுரவரிசையும் மாத்திரமே அது தொடரூந்து என்று எம்மை உணர்த்துகிறது. இவ் வாறு சொல்லிக் கொண்டு போவதனால் மற்றைய இசைய மைப்பாளர்களை குறைத்து மதிப்பிடுவது என் நோக்கம் அல்ல. ஜி.ராமநாதன், கே.வி.மகாதேவன், இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான் இவர்கள் யாவரும் திருப்பு முனையாக நின்றவர்கள். ஆனால், தமிழ்த் திரை இசைக்கு ஒருவர் எனில் அது எம்.எஸ்.விஸ்வநாதன் மாத்திரமே. அதனைத் தான் இளையராஜா சொல்கின்றார். மிகமிக நுணுக்கமான இசையமைப்பு எம்.எஸ்.வி.யினுடையது. அந்த நுணுக் கங்களே தனக்கு ஆசானாக இருந்தது.

ஒரு திரைப்படத்தில் அத்தனை பாடல்களும் அற்புதம் என்று சொல்லத்தக்க பல திரைப்பட பாடல்களை விஸ்வ நாதன் தந்திருக்கின்றார். *'கர்ணன்', 'புதிய பறவை', 'படகோட்டி', 'பாசமலர்', 'ஆயிரத்தில் ஒருவன்', 'காதலிக்க நேரமில்லை', 'உலகம் சுற்றும் வாலிபன்', 'நினைத்தாலே இனிக்கும்'* என்று பல திரைப்படங்களை குறிப்பிடலாம். அதிலும் *'கர்ணன்'* எனும் திரையிசைப் பேழை போன்று தமிழ் திரைவரலாற்றில் இல்லை என்றே சொல்வேன்.

மிக சின்ன வயது. ஏதோ ஒரு காரணத்தினால் நான் அழுவேன். அம்மா பாடுவார். *"மன்னவனே அழலாமா கண்ணீரை விடலாமா "* நான் இன்னும் கூட அழுவேன். அது துக்கத்தினாலேயோ, அந்தக் காரணத்தினாலேயோ அல்ல அச்சிறுவயதில் நான் நினைத்தேன் அம்மா பாடி யதால் என்று. இப்பொழுது தெரிகிறது எம்.எஸ்.வி.யின் மெட்டுச் செய்து விட்ட கொடுமை அது. இவ்வாறு தான் என் வாழ் நாளில் பல பொக்கிஷ நினைவுகளில், மறைவிடங் களில், நாடி,நரம்புகளில், அபூர்வமான கணங்களில் ஏன், இரத்தத்தின் துடிப்பினில் மறைவாக வாழ்கின்றார் எம்.எஸ்.வி. அவரது இசை நமது ஆரோக்கியத்திற்கு வித் திட்டது. ஓர் உற்சாக / போஷாக்காக / திரவியமாக அவரது இசை எம்மிடை இருந்தது. நான் கார் ஓட்டிக் கொண்டு இருக்கும் போது அவர் இசை கேட்டு மயங்கிய கணத்தில் இரு கைகள் எடுத்துக் கும்பிடுவேன். இதனை எழுதி முடிய கைகள் கூப்பியபடியே இருக்கும். இசைத் தெய்வமே, நீ எப்பொழுதும் உன் இசையால் எம்மிடம் இருப்பாய்.

# குப்பிளான் விக்னேஷ்வரா மன்றத்தின் விளையாட்டுப் போட்டிகள்




# தமிழ் வேட்பாளர்களுக்குரிய..

*- 11ம் பக்கத் தொடர்ச்சி*

.. என்றைக்குமே பால் சமத்துவம் பேணப்பட்டதில்லை. இம்முறையும் அப் படித்தான். எண்பதினாயிரத்துக்கும் அதிகமான விதவைகளைக் கொண்டிருக் கும் ஒரு சமூகத்தில் ஒரு பெண் வேட்பாளரைத் தெரிவு செய்யும்போது எது அடிப்படைத் தகுதியாக இருக்க வேண்டும்? அவருடைய பால் நிலைப்பட்ட விழிப்புத்தான். அதாவது பெண் வேட்பாளர் முதலாவதாகவும் முக்கியமான தாகவும் பெண்ணியச் செயற்பாட்டாளராக இருக்க வேண்டும். தற்போதுள்ள வேட்பாளர்களில் எத்தனைபேர் அத்தனை தகுதிகளை உடையவர்கள்? பெண் வேட்பாளர்கள் வேண்டும் என்பதற்காக தெரிவு செய்யப்பட்ட பலரும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டிராதவர்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஒப்பீட்டளவில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிடம் தான் இது தொடர்பில் ஓரளவிற்கேனும் செயற்பாட்டு ஆளுமைகளைக் காண முடிகிறது. ஆனால் அதுவும் போதாது. இனி ஆறாவது.

ஆறாவது தகுதி - சாதி அல்லது சமூக அடிப்படையிலான தகுதி. முதலில் ஒன்றைச் சொல்ல வேண்டும், இது ஒரு வீழ்ச்சி. ஒரு சமூகத்தின் வாக்குக ளைப் பெறுவதற்கு குறிப்பிட்ட சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு வரையே நியமிக்க வேண்டியிருப்பது என்பது தமிழ்த்தேசியத்தின் கோட் பாட்டு அடிப்படைகளின் மீதும் அதன் உள்ளடக்க போதாமைகளின் மீதும் கேள்விகளை எழுப்புகின்றது. 38 ஆண்டுகால ஆயுதப் போராட்ட மானது சாதியை முழுமையாகக் கடக்க உதவவில்லையா என்றும் கேட்கத் தோன்றுகின்றது. இம்முறை தமிழ்த்தேசியக் கட்சிகள் தமது வேட்பாளர் களைத் தெரிந்தபோது சில தெரிவுகளில் சாதிக்கும் ஒரு பங்கு இருந்தாகக் கூறப்படுகின்றது. அதாவது கொள்கையை முன்வைத்து வாக்குக் கேட்க முடி யாத ஓரிடத்தில் சாதி அடையாளத்தை முன்வைத்து வாக்குக் கேட்கவேண்டிய ஒரு வங்குரோத்து நிலை. இது ஆறாவது.

மேற்கண்ட அனைத்துத் தகுதிகளையும் தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரியவரும். 2009 மே இற்குப் பின்னரான தமிழ் மிதவாத அரசியல் எனப்படுவது இறந்த காலத்தில் இருந்து, குறிப்பாக ஆயுதப் போராட்டத்தின் வெற்றி தோல்விகளில் இருந்தும் கடந்த ஆறாண்டுகால தேக்கத்திலிருந்தும் போதியளவு படிப்பினைகளைப் பெறவில்லை என்பதே. ஆயுதப் போராட் டத்தை ஓர் அளவுகோலாக வைத்துக்கொண்டு மிதவாத அரசியலை அளக்க முடியாது என்பதை இக்கட்டுரை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் ஆயுதப் போராட்டத்தில் இருந்து எதைக் கற்கத் தவறினாலும் ஒரு விடயத்தை மி தவாதிகள் கற்றேயாக வேண்டும். அது என்னவெனில் தமது அரசியல் இலக்கு களுக்காக எத்தகைய உச்சமான அர்ப்பணிப்புக்களுக்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதே. ஓர் அரசியல் தலைமை மென்சக்தியா? அல்லது வன் சக்தியா என்பதல்ல இங்கு பிரச்சினை. அது கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைக்கிறதா அல்லது யதார்த்தத்தை நோக்கி கனவுகளை வளைக்கிறதா என்பதே இங்கு பிரச்சினை. மென் சக்தியோ அல்லது வன்சக்தியோ எது வாயினும் உன்னதமான தலைமைகள் கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைப்பவைதான். கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைப்பதற்காக அவை எத்தகைய அர்ப்பணிப்புக்களுக்கு தயாராக இருக்கின்றன என்பதே இங்கு அடிப்படைத் தகுதியாகும். தமிழ் வேட்பாளர்களில் எத்தனை பேரிடம் அந்தத் தகுதி இருக்கிறது?

Exclusive offer for our Takeaway customers. If you order your takeaway meal through our new website **www.fushia-restaurant.co.uk,** we will give you a **30% Discount!.**

This offer is only available to online orders until the end of March 2015 (T&Cs apply)

**Slow Cooked Lamb shanks** **£9.95 Only**

With a rich rosemary and mint sauce or spicy sauce



FUSHIA

TEL - 020 8680 8833
3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA
web : www.fushiauk.com Mail : info@fushiauk.com

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு **£35** மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:

Address :

Postcode:

Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# முடங்கிப்போகும் சடங்குகள்

அண்மையில் உற்ற நண்பரது வீட்டில் பூப்புனித நீராட்டு விழா நடந்தது. வழக்கம் போல 11 மணிக்கு வரும்படியாக அழைப்பிதழில் குறிப்பு இருந்தது. வந்தவர்கள் தங்கள் தங்கள் மேசையை சுற்றி இருந்தவர்களோடு பேசிக் கொண்டிருந்தார்கள். சற்று முன்னதாக 12 மணியளவில் தான் பூப்புப் பெண் வீடியோகாரரின் படப்பிடிப்புக்கமைய மண்டபத்திற்கு வருகை தந்தார். குத்துவிளக்கு ஏற்ற நின்ற பெற்றோருக்கும் வீடியோ காரன் தான் சைகை காட்டி கட்டளைகளை இட்டுக் கொண்டிருந்தார். இத்தனைக்கும் வெவ்வேறு உடை அணிகளோடு முன்பு 7,8 நாட்களாக வெளிப்புறப் படப்பிடிப்பை மிக அழகாக திரையில் ஓட விட்டுக் கொண்டிருந்தார்கள். வீடியோக் காரன் தனது உச்ச திறமையை அதில் வெளிப்படுத்தியிருந்தார்.

இதேவேளையில் 32 ஆண்டுகளுக்கு முன்னர், இதே வீடியோக்காரனின் தந்தையார் கோண்டாவிலில் நடந்த எங்கள் திருமணத்தின் போது எடுத்த வீடியோ நினைவுக்கு வந்தது. அது ஒரு கோவிலில் நடந்த திருமணச் சடங்கு தான். ஆனால் அந்த நடைபெற்ற திருமணச் சடங்கைத் தான் அந்த நாளில் அவர் தன்னுடைய படப்பிடிப்புக்கு உட்படுத்தினார். இன்று இங்கே படப்பிடிப்பாளரின் சொற்படி தான் பூப்புனித நீராட்டு விழா அல்லது திருமணம் நடைபெறுகிறது. சடங்குகள், சம்பிரதாயங்கள் எல்லாம் சுபநேரங்கள் உட்பட படப்பிடிப்பு ஆசைக்குள் புதையுண்டு போகின்றது. வீடியோக் காரர் தன் திறமையை காட்ட நினைப்பதும், படங்கள் அழகாக வரவேண்டும் என்று பெற்றோர்கள் நினைப்பதும் தவறில்லை. ஆனால், படப்பிடிப்பு சமய சம்பிரதாய நம்பிக்கையாளர் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தும் வகையிலே வெறும் படப்பிடிப்பாக சினிமாவைப் போல நடைபெறுவது ஒரு விரும்பத்தகாத நினைவு தான். இத்தனைக்கும் வீடியோக் காரர்கள் படுபிசி. சென்ற மார்ச் மாதம் நடந்த தமிழ்ப் பள்ளியின் ஆண்டு விழாவில் வீடியோ புகைப்படங்களைத் தர இன்னும் இரு வாரங்கள் வேண்டும் என்கின்றார் அந்தப் படப்பிடிப்பாளர்.

கார் ஓடும் வீதிகளில் தேர் ஓடும் காட்சிகளை ஞாயிறு தோறும் லண்டனிலும் நாங்கள் பார்க்கின்றோம். புலம் பெயர் சைவர்கள், குறிப்பாக தமிழர்கள் வாழும் நாடுகளில் இது அண்மைய காலங்களின் வாராந்த நிகழ்வு. ஊரில் திதியோடு ஒட்டியதாக அமையும் திருவிழாக்கள் இங்கு வசதிக்கேற்ப சனி, ஞாயிறு நாட்களுக்கு மாற்றம் கண்டுள்ளது. இரு ஆலயங்களைத் தவிர பிரித்தானியாவில் எல்லா ஆலயங்களின் கதைகளும் இவைதான். தேர்த் திருவிழாக்களுக்கு மட்டும் ஞாயிற்றுக்கிழமை பார்த்து விதி விலக்கு அளிக்கப்படும் பஞ்சாங்கம், நவராத்திரி, சிவராத்திரி, வருடப்பிறப்பு என்று வரும்போது வாக்கியம், திருக்கணிதம் என்று வேறுபட்டு தனக்குப் பிடித்தது தான் சரியென்ற வியாக்கியானங்களை கோவில் தர்மகர்த்தாக்கள் மத்தியில் விதைத்து விடுகின்றது. வல்லாளர் கருத்துக்களை ஆண்டவனும் ஏற்றுக் கொண்டு அமைதியாகி விடுகின்றார். முன்பெல்லாம் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயம், நல்லூர் கந்தசுவாமி என்று ஊர்க் கோவில்களில் தேர், தீர்த்தம் கிழமை நாட்களில் வரும். இப்பொழுதும் தான். பள்ளிகள் அந்த நாட்களில் விடுமுறைவழங்கும்.

வேறொரு சனிக்கிழமை பாடசாலையை நடாத்தி அந்த நாளை ஈடு செய்யும். ஊர் புனிதம் காக்கின்ற காலமாக உச்சவ காலம் கருதப்படுவதால் இன்றும் ஊரில் அந்த சம்பிரதாயம் கடைப்பிடிக்கப்படுகிறது. மீன், இறைச்சி விற்பனை கூட உற்சவ காலங்களில் மட்டுப்படுத்தப்பட்டு விடும். 25 நாள் உற்சவ காலத்தில் முகச்சவரம் செய்யாது, வேட்டி, சால்வையோடு பெண்களானால் சேலையோடு, நீளப்பாவடையோடு கோவில் நோக்கிச் செல்பவர்களை இன்றும் அதிகம் காண முடியும். புலம்பெயர் நாட்டில் வேலையே வாழ்வு என்ற நிலையிலும், இங்குள்ள கால சூழ்நிலைக்கமையவும் இது ஒத்துவராத ஒன்று என்றாலும் முடிந்தவரை சம்பிரதாயங்களை கடைப்பிடிக்கலாம். கோவில்களில் பெண்களுக்கு மட்டும் சம்பிரதாய கலாசார உடை என்றில்லாமல் ஆண்களும் கூட அதை கடைப்பிடிக்கின்ற நிலை மாற வேண்டும்.

முன்பெல்லாம் பெண்களுக்கு மாதவிலக்கு வந்தால் மூன்று நாட்களுக்கு ஒதுக்குப் புறத்தில் தனியிடத்தில் தான் அவர்கள் தங்க வைக்கப்படுவார்கள். உணவுக் கோப்பை, தண்ணீர் குவளை என்று தனியாக்கப்படும். படுத்திருந்த பாய் உட்பட, கையாண்ட பாத்திரங்கள் வரை எல்லாம் மூன்றாம் நாள் அவர் முழுகும் போது அவற்றோடு மினுக்கிக் கழுவி சாதாரண பாவனைக்கு எடுக்கப்படும். அது அந்தக் கால வழக்கம். ஆனால் காலத்திற்கேற்ப ஊரிலும் கூட இந்த முறை மாற்றம் கண்டுவிட்டது. இப்பொழுது மாதவிலக்கு ஒரு தூற்றுக்கான ஒரு சங்கதியே இல்லை என்ற நிலைக்கு கால ஓட்டம் சம்பிரதாயத்தை மாற்றி விட்டது.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

பிள்ளைப்பேறு கிடைத்தால் 31 நாட்களுக்கு துடக்குக் காண்பது வழக்கம். வயதுக்கு வந்தால் கோவில், குளங்களை தவிர்ப்பது. மரணச் சடங்கு என்று வந்தால் 31 நாட்கள் வரை, கொள்ளி வைப்பவர் ஒரு வருடத்திற்கு கோவிலுக்கு போகக் கூடாது என்ற சம்பிரதாயங்கள் இந்த நாட்கள் மறக்கப்பட்ட நாட்களாகி விட்டது. கால ஓட்டம் இவற்றை சீர் செய்து விட்டது. இவற்றில் பல சரியானதாகவும் தெரிகிறது. திருமணத்தின்போதோ அல்லது பெற்றோருக்கு கொள்ளி வைக்கும் மரணக் கிரியைகளிலும் ஏன் எங்கள் அபிடேகம் என்று ஆலயத்தில் தர்ப்பையோடு ஐயருக்கு முன்னாள் அமர்ந்திருக்கும் அர்த்தம் தெரியாது. ஆனாலும் சடங்குகளை இன்றும் செய்து வருகின்றோம்.

மந்திரம் சொல்லியபடியே எங்களை அப்படிச் செய், இப்படிச் செய் என்று கூறும் ஐயர்மார்களுக்கு எத்தனை பேருக்கு இதற்கான அர்த்தம் தெரியும் என்பது கேள்விக்குறிதான். பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் முன்பெல்லாம் வேள்வி என்ற கிடாய் வெட்டு ஒரு சம்பிரதாயம். இப்பொழுதும் ஊரில் ஒரு சில கோவில்களில் இதை கடைப்பிடிக்கத் தான் செய்கிறது. சட்டங்களால் கூட இவற்றை கட்டுப்படுத்த முடியவில்லை.

சடங்குப் பிரியர்கள், சம்பிரதாயப் பிரியர் இன்றும் இவற்றை நடத்திக் கொண்டு தான் இருக்கின்றனர். சடங்குகள், சம்பிரதாயங்கள் விதிமுறை சூழ்நிலைகளுக்கேற்ப வசதிக்கேற்ப மாற்றம் காண்கின்றது. வல்லாளன் பம்பரம் வரம்பிலும் ஆடுகின்றது.

ஆசோசம், தீட்டு, தெய்வ நிந்தனை என்ற பதங்கள் அர்த்தமற்றுப் போய்விடுகின்றன. தெய்வம் என்றால் அது தெய்வம். வெறும் சிலை என்றால் சிலை தான் என்ற கவிஞர் கண்ணதாசனின் வரிகள் தான் நினைவுக்கு வருகின்றது. சடங்குகளும், சம்பிரதாயங்களும் கால ஓட்டத்தில் மாறுவதில் தவறில்லை. ஆனால் அர்த்தத்தோடு அவை மாறுமேயானால் உரிய முறைப்படி என்ன காரணங்களுக்காக அவை தோற்றுவிக்கப்பட்டதோ அந்தக் காரணத்திற்காக அது மாறுமேயானால் அது வரவேற்கத்தக்கது.

*உங்கள் கருத்துக்களுக்கு -*

*facebook.com/orupaper* *@orupaper*

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ கிழக்கின் அம்மானுக்கு இட்ட கட்டளைகள்

நடுத்தெருவில் அம்போ என விடப்பட்ட கிழக்கின் அம்மானைச் சந்தித்த அடுத்த நாட்டின் றானா வரியில் பத்தாவது எழுத்தைக் கொண்ட உ(க)ளவுத் துறையினர் இனி உனக்குப் பாதுகாப்பில்லை உன்மீது சிங்களக் காவற் துறையினரைக் கொன்றதற்கு வழக்கு வரலாம் கைது செய்யப்படலாம் இதெல்லாம் நடக்காமல் நாம் பார்த்துக் கொள்கின்றோம் அதற்கு நீ நாங்கள் சொல்ற மாதிரி எல்லாம் சொல்ல வேண்டும் எனக் கட்டளையிட்டனராம். தலையாட்டுதவதில் வல்லவரான அவர் தலையாட்டிக் கொண்டு இப்ப இறுதிப் போரில் சரணடைந்தவர்கள் தொடர்பாக பல பேய்க் கதைகளை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றார். இதனால் தமிழர்களுக்காகப் போராடியவர்கள் மீது சேறு பூசலாம் எண்டு அயல் நாட்டுக்காரர் கனவு காணினமாம்.

## ■ சபாஷ் சரியான போட்டி

இலங்கையில் ஒகஸ்ட் 17-ம் திகதி நடக்கவிருக்கும் தேர்தலின் முடிவுகளைத் தீர்மானிப்பவை கட்சிகளுமல்ல, தொண்டர்களுமல்ல, தலைமைகளுமல்ல, கூட்டணிகளுமல்ல. தீர்மானிக்கப் போகின்றவை டொலரும், Yuan Renminbi என்னும் சீன நாணயமும், இந்திய ரூபாக்களுமே. மூன்று தரப்புக்களிடையே கடும் போட்டி நடக்கப் போகின்றது. தேர்தலுக்கும் முன்னும் பின்னும் நடக்கவிருக்கும் கட்சி தாவல்களை இந்த மூண்று நாணயமற்ற நாணயங்கள் தான் தீர்மானிக்கப் போகின்றன.

## ■ தீபத்தைப் பார்ப்பதுவும் தீதா?

தீபத்தைத் தூக்கிய மருத்துவர்கள் மிக மோசமாகக் கைகளைச் சுட்டுக் கொண்டு விட்டனர். இந்தச் சுட்ட புண் ஆற அவர்களுக்கு இப்போது அதிக விட்டமின் `B' தேவைப்படுகின்றது. அந்த மருத்துவர்களுக்கு விட்டமின் `B'வை ஊசி மூலம் செலுத்தப் பட்டு விட்டதாம். இதனால் தீபம் என்று ஒரு இலவசப் பத்திரிகை ஒன்றை பிரசுரித்துள்ளார்கள். இது பல இலட்சக் கணக்கில் வடக்குக் கிழக்கில் விநியோகிக்கப்படுகின்றது. இதில் இரண்டு பேரக் கொண்ட 'உலகத்' தமிழ் பேயவையும் தொடர்பு பட்டிருக்குதாம். இனி ஜீரிவிக்குப் போட்டியா தீபமும் கூட்டமைப்புக்குத் தாளம் போடப்போகினம்

## ■ யார் வென்றாலும் பரவாயில்லை கஜன் வேண்டாம்

அடுத்த நாட்டின் றானா வரியில் பத்தாவது எழுத்தைக் கொண்ட உ(க)ளவுத்துறையினர் யார் வென்றாலும் பரவாயில்லை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெல்லக் கூடாது என்று வரிஞ்சு கட்டிக் கொண்டு நிக்குதாம். அவரின் வெற்றி புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழின உணர்வாளர்களின் வெற்றி என அந்தக் களவுத்துறை கருதுகின்றதாம். சுமந்திரன் வென்றால்தான் செப்டம்பரில் வரவிருக்கும் ஐநா மனித உரிமைக் கழகத்தின் அறிக்கையைச் சமாளிக்கலாம் என அந்தக் களவுத்துறை கருதுகின்றதாம். ஒரு சரியான விசாரணை செய்யப்பட்டால் அந்தக் களவுத் துறை செய்த அநியாயங்கள் அதற்கு இனக் கொலையில் உள்ள பங்குகள் எல்லாம் வெளிவந்து விடுமெண்டு அது சரியாப் பயப்பிடுதாம்.

## ■ வெள்ளை வான் வந்திட்டுது இனிப் புலியும் வருமாம்.

தேர்தல் பரப்புரைகளுக்கு துணையாக வெள்ளை வான் புரளி வரத் தொடங்கியிட்டுது. இதில வாக்குப் போடுறவை திரும்பாவிட்டால் புலிவந்து தாக்குற மாதிரி குண்டு வைக்கிற மாதிரியெல்லாம் நாடகம் அரங்கேற்றப்படும். ஒண்டுமே சரி வராட்டில் இருக்கவே இருக்கின்றது இனக் கலவரம்.

*- ஊருளவாளி*



கறுப்பு ஆடிகள்...
குட்டிமணியின் கண்களை
என்றும் நினைவூட்டிக்கொண்டேயிருக்கும்
அதுவரை
எங்கள் விடுதலைக்காக
எங்கள் ஆயுதங்கள்
முழங்கிக்கொண்டேயிருக்கும்..

– மு.வே.யோ

எமது சேவைகள்: களஞ்சியம் - காப்புறுதி - திறந்த வெளி இட வசதி - பொறுப்பேற்றல் மற்றும் விநியோகம்

தனிநபர் கவனிப்பு - இடமாற்றம் - அதிகப்படியான பொதி



- இலவச பெட்டிகள்
- தொழில்முறை ஆலோசனை
- பொறுப்பேற்றல் - விநியோகித்தல்

கப்பல் மூலம் வாகனம் அனுப்புதல்

- பணியக உதவிகள்
- கடன் கடிதங்கள்
- சுமை அகற்றல் - ஏற்றல்




வீட்டுக்கு வீடு சேவை

இலங்கையிலுள்ள உடன்பாட்டாளர் பெறுபவர் வீட்டிற்கே விநியோகம் செய்வோம்

இயந்திரங்கள் - உபகரணங்கள் - உதிரிப்பாகங்கள்



- விசேட விலைகள்
- தகர்த்தல் மற்றும் தயாரித்தல்

வாணிப சரக்கு நிலையம்

- சுங்க ஏற்றுமதி
- ஆவணங்கள் - செயலாக்கம்
- இறுதி வரை கையாளுதல்

Office: 46, Mead Court, Buck Lane, Kingsbury, London, NW9 0XN Tel: 020 3371 1272 Mob: 07913842265
Warehouse & Yard, Unit1 & 2, Renwick Industrial Estate, Renwick Road, Barking, IG110SD. Tel: 020 3371 1272

# வீட்டுக்கொருவரை கொடுத்தோரே

# "வீட்டு"க்கு ஒரு வோட்டு!

வணக்கம்..

வீரயுகத்தை பிரசவித்த மண்ணிலிருந்து உங்கள் சமூக சேவை வள்ளலின் வணக்கங்கள்.

தாய் மண் பற்றும் தமிழ் மொழி என்ற சிறப்பும் எங்கள் தலைவன் பிரபாகரன் காட்டிய மரபும் நாங்கள் மறக்க முடியாத வரலாற்று பொக்கிசங்கள்.

தந்தை செல்வா காட்டிய 30 வருச அறநெறியும் தலைவன் பிரபாகரன் காட்டிய 30 வருச களநெறியும் எங்கள் தானைத்தலைவன் சம்பந்தர்காட்டப்போகும் புது நெறியும் கல்தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்த குடியாம் தமிழ்க்குடிக்கு தலைப்பா கட்டும் காலங்கள்.

என்ன அப்பு என்ன நடந்தது என்று கேப்பிங்கள். பொறுமையாக கேளுங்கோ.

இது தேர்தல் காலம் என்பதற்காய் சொல்லவில்லை. ஆனாலும் சொல்கின்றேன். ஆனந்தபுரத்தில் அலையாய் வந்து எதிர்த்தோரை மலையாய் எதிர்த்தவீரனின் மட்டற்ற உறவுமட்டுமல்ல. எங்கள் தலைவன் பிரபாவின் மகனுக்கு அகரம் புகட்டிய பள்ளியின் முதல்வன் நான்.

தமிழ்வீரம் எழுந்து களமாடிய பொழுதுகளில் அதன் காற்றை சுவாசித்த நான் மீண்டும் காலத்தின் தேவைய றிந்து தானைத்தளபதி சம்பந்தர் அவர்களையும் அவரின் எல்லாமுமாக இருக்கின்ற சுமந்திரன் என்ற விற்பன்ன னுக்கு தோள்கொடுக்க துணிந்தமை வரலாற்றின் வழியே யன்றிவேறொன்றுமல்ல.

காலச்சுழியில் கட்டுடைத்துப்போன தமிழர் சேனையின் காலப்பெருவெளியை நிரப்பவந்த சம்பந்தர் சேனைக்கு துணைசெய்துநிற்பதே என்வாழ்வுக்கு பெரும் பணியாகும் என அறிந்து கடும்பணியாற்ற துணிந்தேன்.

யாழ்ப்பாண மண்ணுக்கு இம்முறை ஏழு சீற்றுத் தான் வரும் என்று இடியான செய்தி வந்தபோது விழித்துக் கொண்டேன். புறநானூற்றை விஞ்சிய எம்புலிமறவர் களே துணையாக பொழிவாற்ற விழைந்தேன் நான்.

எனக்குப் பெரிய பலம் இணையற்ற ஊடகங்கள். அதனி லும் என்னுறவின் இரத்தம் ஓடுவதால் தான் ஆடா விட்டாலும் தசையாடும் மரபை மறக்காது. இலங்காசிறி என்றும் தமிழை வின்னென்றும் மனிதன் ஆகி மாசுற்ற ஜே.வி.பி நியுஸ் ஆகி எத்தனையோ பெயர்களில் என் குரல் ஒலிக்கும்.

வாய்ப்புகள் ஏழு என்பதால் எங்களுக்கு நாலு சீற்தான் உறுதி என்று வருகின்றன செய்திகள். இருப்பவர்களை இழுத்து விழுத்துவதே ஏற்றத்திற்கு வழிஅல்லது இருக்காது உன்சீற்று.

இதுவே இப்போது எனக்குள்ள வழி.

தன்னவனை தொலைத்து மண்ணின் வீரத்தோடு அடங்காத? தமிழச்சியாய் ஒருத்தி ஆவேசமாய் வருகின்றாள். நீதி கேட்காமல் ஓயாது அவள் பயணம்.

ஆனால் அரசியலே தொழிலாய் போன எமக்கு வேறு வழியில்லை. அவளுக்கு இடம் கொடுத்தால் எங்கள் கதிரை ஆட்டங்காணும். என்ன செய்ய?

ஆனாலும் எனக்கு இடக்கில்லா ஆட்களும் இருக்கிற ார்கள். சுமந்திரர்களின் வாக்கு எனக்கும் பலம். எனது ஆதரவு அவர்களுக்கும் உரம்.

எனவே தான் எழுதப்படாத விதியை ஏற்றுக்கொண் டோம். தவறாய் கொள்ளவேண்டாம்.

அவர்கள் கொஞ்சம் அப்படி இப்படித்தான். என்னைப் போல எம்வீரர்களை புகழ்ந்துரைக்க மாட்டார்கள்.

காதோடு சொல்கின்றேன். அவர்களைவீட்டிற்கு அனுப் புவது என நீங்கள் முடிவெடுத்தால் மனதார ஏற்பேன் நான்.

ஏற்றிவைத்தும் நாணயம் போடலாம். இறக்கிவைத்தும் நாணயம் போடலாம்.

முன்னதை தெரிந்தெடுத்தோம். ஏனெனில் அதுவே புலிகளின் புதிய போர்முறையாய் இருந்தது கூட்ட மைப்பை தொடங்கியபோது.

எனினும் உங்கள் சொல் கேட்போம். தேர்தலிலே சொல்லுங்கள்.

அப்பு அப்பு பொறுங்கோ என்ன நடந்தது உங்களுக்கு? நீங்கள் கேட்பது வடிவாய்க் கேக்கிறது.

நான் சிலவற்றை சொல்வேன். மற்றயவற்றை மற்ற வர்கள் சொல்வார்கள்.

எனதருமை செயலாளர் பொன்னான காந்தம் புற நானூற்று மெடுக்கொடு பொறுப்பாய் சொல்வார். அதற் கும் மேலாய் எனதருமை பேச்சாளர்கள்இருக்கவே இருக் கின்றார்.

அன்னை பூபதிக்கு சிலை வைப்போம் என்று நான் சொன்னால் அங்கயற்கண்ணிக்கேசிலை வைப்போம் என முழக்கமிடுவார்கள் அவர்கள்.

யாரைப்பிடித்தேனும் நாடாளுமன்றம் செல்வோம். யாரோ தந்த ரிக்கற்றில் ஒருமுறை சென்றேன். வென் றேன். ஐங்கரநேசனும் அதனையே செய்தார்.அதனால் சுரேசிடம் இனிக்கேட்க முடியாது. தமிழரசுகட்சி தர வேண்டும் ரிக்கற். தருவாரா? எனை வெல்ல விடுவாரா?

கடந்த வருடத்தில் எங்கள் தேசத்தின் குருத்துகள் தெய்வீகன் கோபி விழுந்தபோது என்னைச்சுற்றி சந்தேகங்கள்.

எதற்காக விளங்கவில்லை. சத்தியமாய் சொல் கின்றேன் எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை.

காற்றோடு சிலர் கதை பரப்புகின்றார்கள்.

நம்பாதீர் மக்களே!

தேர்தல் தெருமுனையில் நிற்பதால் தேர்தல் கோசங்கள் தயார்படுத்தவேண்டும்.

யாரங்கே?

இராசதந்திர சிங்கம் இராஜவரோதயம் சம்பந்தர்

ஒற்றையாட்சியை ஒழித்த ஆபிரகாம் சுமந்திரன்

மண்ணின் மைந்தன் சிறிதரன்

வீரம் படைத்த மண் வீழாது.

வாழ வேண்டும் வீடு.

ஆள வேண்டும் வீடு.

வீட்டுக்கொருவரை கொடுத்தோரே...

உங்கள் வீட்டுக்கு கொடுங்கள் ஒரு வோட்டு!

எப்படியிருக்கிறது எங்கள் கோசம்.

மலைத்துப்போகாதே என் சனமே!

மறுபடியும் வருவேன்!!

நன்றி: tamilleader.com

# தேர்தலில் தாக்கத்தை..

(09ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளை அள்ளுவதற்காக மட்டும் அவர்களைப் பயன்படுத்தி விட்டு மற்றைய காலங்களில் அவர்களின் அர்ப்பணிப்புக்கு அபகீர்த்தியையும் அவ மானத்தையும் ஏற்படுத்துவதுவதை நாங்கள் தவிர்க்க வேண்டும்' என்ற கோரிக்கையையும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் முன்வைத்தார்.

**இளைய சந்ததிக்கான செய்தி**

தாயகத்தில் வாழும் மக்களுக்கும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் களுக்குமிடையில் இடைவெளியையும், பிளவுகளையும் ஏற்படுத்தும் நோக்கில் தீயசக்திகள் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் செயற்பட்டு வருகின்றன. இத் தகைய சூழலில், 'எமது தேசத்தில் வாழும் இன்றைய சந்ததிக்கும், இலங்கைத் தீவுக்கு வெளியே வாழும் இன்றைய சந்ததிக்கும் இடையிலான தொடர்பு மலர்ச்சி அடையவேண்டும். அது இன்னும் ஆழமாக வேரூன்ற வேண்டும் என்பது எனது அவா. எமது தேசத்திலும் வெளிநாடுகளிலுமுள்ள அடுத் தடுத்து வருஞ் சந்ததிகளுக்கிடையிலான தொடர்புகள் மிக நெருக்கமாக கட்டி யெழுப்பப்பட வேண்டும் என்ற எனது கருத்தையும் மிக ஆணித்தரமாக இங்கு வெளியிடுகின்றேன். எமக்குப் புலிப்பட்டம் கட்டி, பயங்கரவாதப் பட்டம் கட்டி புகுந்தகத்தில் இருந்து பிறந்தகத்திற்கு வராது தடுக்க சதிகள் நடைபெற்று வரு வதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்' என முதலமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'பன்னெடுங்காலமாக எமது இனத்தின் மறுக் கப்பட்ட உரிமைகளுக்காகவும், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும் நாம் பல்வேறு வடிவங்களில் போராடி வந்திருக்கின்றோம். ஆயினும், எமது காலத்தில் எமது மக்களுக்கான உரிமையோ நீதியோ உள்நாட்டில் கிடைக் காது என்பதனை தென்னிலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் புலப்படுத்திக் கொண்டுவந்துள்ளன. ஆதலால்தான், எமது காலத்தில் உறுதியான ஜனநாயக அத்திவாரத்தை இட்டு, எமது எதிர்கால சந்ததியிடம் இந்தப் பணியைத் தொடர்வதற்கு அவர்களிடம் கையளிக்கும் வண்ணம் நாம் விரைந்து பணியாற்ற வேண்டியிருக்கின்றது'.

உள்நாட்டு பொறிமுறை என்ற பொறிக்குள் இனஅழிப்புக்குள்ளான மக்களுக்கான நீதியை முடக்குவதற்கு கூட்டுசதியொன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற தருணத்திலே, 'எமது மக்கள் தமது உரிமையையும் நீதியையும் பெறுவதற்குச் சர்வதேச ரீதியான ஆதரவு இன்றியமையாதது. அந்த ஆதரவை பெற்றுக் கொள்வதற்கும் பெருக்கிக் கொள்வதற்கும் உல கெங்கும் பரந்து வாழும் இளைய தமிழ் சமுதாயம் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்த முன்வர வேண்டும். இதற்கான அடித்தளத்தை அமைக்க அவர்தம் பெற்றோர்கள் முன் வரவேண்டும். இங்கே வாழும் இளைய சமுதாயத்தினர் தாம் வாழும் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக, ஜனநாயக ரீதியில், இலங்கைத் திருநாட்டில் வாழ்கின்ற தமது சொந்தங்களின் உரிமைக்காகவும் நீதிக்காகவும் போராட முடியுமென்று நான் நம்புகின்றேன்' என முதலமைச்சர் தனதுரையில் குறிப்பிட்டார். இது, ஈழத்தமிழர்களின் மறுக்கப்பட்ட உரிமைக் காகவும், நீதிக்காகவும் சர்வதேச ரீதியாக போராடி வருகின்ற இளைய சந்ததிக்கு உற்சாகமூட்டும் ஒரு பேச்சு மட்டுமல்ல. மாறாக, சர்வதேசமயப் படுத்தப்பட்ட தமிழர்களின் போராட்டத்தை முன்னகர்த்தி செல்வதில் இளைய சந்ததிக்குள்ள முக்கிய வகிபாகத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

'சிறிலங்கர்' என்றும் தமிழர் ஒரு சிறுபான்மையினம் என்றும் அடையாளத்தை பேண விரும்புகின்ற தரப்புகள், புலம்பெயர் மக்களை பிரச்சினைக்குரிய தரப் பாக அடையாளப்படுத்தும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த தருணத்திலேயே, தாயகத்திலுள்ள மக்களின் மறுமலர்ச்சிக்கு புலம் பெயர் மக்கள் பங்களிப்பு அவசியம் என்பதை சுட்டிக்காட்டியுள்ள முதல மைச்சர், புலம்பெயர்ந்துள்ள இளைய சமுதாயத்துக்குள்ள பொறுப்புக் களையும் சுட்டிக்காட்டியுள்ளார். இதனையும், ஆக்கபூர்வமான விமர்சனங் களையும் சரியான முறையில கவனத்திலெடுத்து, புதிய வீச்சுடன் புலம் பெயர் தமிழர் செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதேவேளை, தாயகத்திலுள்ள மக்கள் நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கவுள்ள தருணத் தில், தமிழ் மக்களுக்கான அடிப்படைக் கோட்பாடுகளையும் அது சார்ந்து அவர்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடுகளையும் முதலமைச்சர் அவர்கள் லண்டனில் ஆற்றிய உரை தொட்டுக்காட்டியது எனலாம் இருட்டடிப்புகளை யும் தாண்டி முதலமைச்சரின் உரை தாயகத்தில் வாழும் அடிமட்ட மக்கள் வரை செல்லுமாக இருந்தால், எதிர்வரும் பொதுத் தேர்தலில் அதன் தாக்கத்தை உணரலாம்.

நீதியரசர் சி.சி.விக்னேஸ்வரன் அவர்களின் முழுமையான சிறப்புரையை orupaper.com/itaj2015 என்ற முகவரியில் நீங்கள் காணலாம்


## புலம்பெயர் தேசங்களில் வாழும் எம் உறவுகளே!

உங்கள் வணிக நிலையங்களில் நடைபெறும் திருட்டு, மோசடி போன்றவற்றை தடுக்கவும் உங்கள் நம்பிக்கை தன்மையை பேணவும் நேரடியாக கண்காணிப்பு கமராவினுடான பதிவுகளை இலங்கையிலிருந்து அனுபவம் வாய்ந்த பணியாளர்களின் மூலம் 24 மணி நேர கண்காணிப்பு சேவையினை வழங்குவதோடு இலவச தொலைபேசி இணைப்பின் ஊடாக உடனுக்குடனான தகவல்களையும் தங்களுக்கு அறியத் தருவோம். எமது சேவை தங்கள் வணிக நிலையங்களுக்கு தேவைப்படின் கீழ் கண்ட இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.



Eagle Vision

CCTV Monitoring Service



172a, Mill Road, Vavuniya, Sri Lanka

Tel : 0094773180716 | 0094242051150

EMail: shopigan@gmail.com

இலண்டனில் தொடர்புகளுக்கு சிவா : 07405 406 806

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 38 வயது, 5'9" British citizen Graduate working in at NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5500
2. 37 வயது, 5'8" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5502
3. 27 வயது, 5'8" British citizen Graduate working in a Own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5503
4. 31வயது, 5'5" British citizen working as a financial sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5509
5. 43 வயது, 5'8" British citizen working in an Investment bank as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558
6. 35வயது, 5'5" British citizen Finished degree in MBA working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5510
7. 30வயது, 6'0" British citizen finished degree in MBA working as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5511
8. 36 வயது, 5'7" swiss citizen living in swiss working in a Own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5512
9. 28 வயது, 5'7" German citizen. living in uk finished degree in German language (Hons), working as a language translator தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5513
10. 33 வயது, 5'8" British citizen graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5514
11. 41 வயது, 5'6" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5516
12. 37 வயது, 5'11" Born and brought up in uk, master degree from Imperial college, working as an Investment banker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5517
13. 34 வயது, 5'5" British citizen, BSc (Hons) in computer science, working as an accounts manager at Deloitte company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 236
14. 42 வயது, 5'6" Divorced, British citizen Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4816
15. 34 வயது, 5'11" Living in uk Graduate working in a information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5482
16. 41வயது, 5'8" British citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5486
17. 31வயது, 5'10" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5488
18. 35 வயது, 6'1" British citizen Graduate working as an IT Programmer and organizer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5490
19. 30வயது, 5'7" living in saudi தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5491
20. 33 வயது, 5'0" Refugee visa working as site engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5492
21. 38 வயது, 5'5" Divorced born & brought up in the UK. Currently working in UAE as business and sales director தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5393
22. 29 வயது, 5'5" Born & brought up in uk graduate working in a Electronic engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5498
23. 24வயது, 5'8" asylum seeker working as a customer services தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5455
24. 27 வயது, 5'6" british born and brought Graduate Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5458
25. 31வயது, 6'0" born and brought up in UK. Working in market ing & financial department தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5465
26. 29வயது, 5'9" graduate Student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5470
27. 32வயது, 5'3" Student visa Graduate completed in Electrical and Electronic Engineering HNDE. working as a technician தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5472
28. 33 வயது, 6'0" british citizen. Working as a engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5475
29. 26 வயது, 5'5" Living in sri lanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5477
30. 26வயது, 5'6" British citizen working as a engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5478
31. 28 வயது, 5'11" British citizen graduate working as a medical sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5480
32. 33 வயது, 5'9" UK citizen graduate working as a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4347
33. 31வயது, 5'5" work permit Graduates working as a financial sector. தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4650
34. 31 வயது, 6'1" PSW visa graduates working as a Electronic Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4687
35. 35 வயது, 5'6" British citizen graduates working as a Store Manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3481
36. 31 வயது, 5'8" UK citizen graduate working as a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3361
37. 35 வயது, 6'2" UK citizen graduate working as a financial sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4510
38. 33 வயது, 5'6" UK citizen graduate working as a manager of five star hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5258
39. 32 வயது, 5'5" work permit graduate working as a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3397
40. 35 வயது, 5'6" UK citizen graduate working as a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4169
41. 32 வயது, 6'0" UK citizen graduate doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 587
42. 31 வயது, 5'6" Divorced UK citizen doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5343
43. 34 வயது, 5'5" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5267
44. 32 வயது, 5'6" British citizen doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3272
45. 27 வயது, 5'8" Work permit graduate. Working as a Tesco team Leader தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5451
46. 39 வயது, 5'10" Divorced British citizen graduates now studying PHD தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5444

## மணமகன் தேவை


1. 33 வயது, 5'4" British citizen Graduate working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5504
2. 28 வயது, 5'6" British citizen working in at Childcare தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5505
3. 27 வயது, 5'3" Finished degree living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5506
4. 25 வயது, 5'4" Studying CIMA at colombo, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5507
5. 30வயது, 5'3" British citizen Graduate working in medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5400
6. 36 வயது, 5'2" Born and brought up in uk, working as a marketing manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5494
7. 26 வயது, 5'0" Living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5518
8. 27 வயது, 5'2" France Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5481
9. 27 வயது, 5'1" living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5485

25 வயது, 5'4" UK Citizen graduate working as a Financial Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5487

10. 30 வயது, 5'4" British Citizen medical doctor, Catholic, seeking a UK professional தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5489
11. 33 வயது, 5'4" British Citizen working as a research & policy officer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5493
12. 29வயது, 4'9" British Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5495
13. 32 வயது, 5'5" Born and brought up in uk working as a accounts Manager. Graduates in BSC horns தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5497
14. 32 வயது, 5'5" Born and brought up in uk working as a accounts Manager. Graduates in BSC horns தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5497
15. 22 வயது, 5'6" British citizen graduates தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5457
16. 31 வயது, 5'3" Living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5459
17. 28 வயது, 5'0" Living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5476
18. 25 வயது, 5'6" British citizen. as a doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5479
19. 26 வயது, 5'4" born in UK Graduate working financial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3504
20. 30 வயது, 5'3" British citizen graduate working in school teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4629
21. 29 வயது, 5'3" British citizen graduate working Assistant financial controller தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4477
22. 29 வயது, 5'4" British citizen graduate working in Accountants தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4096
23. 30 வயது, 5'2" British citizen graduate working as Accounts Assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4754
24. 27 வயது, 5'2" British citizen as a doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1408
25. 29 வயது, 5'5" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3615
26. 31 வயது, 5'6" British citizen working as an investment banker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1722
27. 29 வயது, 5'2" British citizen working nurse தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4681
28. 29 வயது, 5'2" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3615
29. 29 வயது, 5'7" British citizen graduate working as a information technology தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4703
30. 29 வயது, 5'7" France citizen working as a Administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4147
31. 30 வயது, 5'8" British citizen working medial sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359
32. 36 வயது, 5'1" Divorced Asylum seeker living uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5438
33. 30 வயது, 5'4" Living in Sri Lanka Graduate working in a English teacher at school தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5439
34. 25 வயது, 4'8" Living in Sri Lanka Graduate working in a maths teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5447
35. 25 வயது, 4'8" Living in Sri Lanka Graduate working Administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5450
36. 26 வயது, 5'4" British citizen as a doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5448
37. 21 வயது, 5'4" Living in Sri Lanka working as a pharmacist தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5449
38. 35 வயது, 5'3" Living in Sri Lanka Graduate working as a accounts executive தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5425
39. 22 வயது, 5'4" Permanent residence in UK graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5435
40. 32 வயது, 5'4" EU citizen graduate living in Germany தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5431
41. 24 வயது, 5'1" EU citizen graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5424
42. 29 வயது, 5'6" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5417
43. 27 வயது, 5'5" British citizen MBBS doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5413
44. 30 வயது, 5'1" British citizen Graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5400
45. 30 வயது, 5'10" German citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5399
46. 25 வயது, British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5398
47. 28 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5397
48. 42 வயது, 5'3" Permanent residence in uk divorced working in a factory தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5374
49. 30 வயது, 5'6" Graduate nurse living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5391
50. 25வயது, 5'4" German citizen doctor living in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5376
51. 27 வயது, 5'6" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5360
52. 29 வயது, 5'4" student visa graduate working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5354
53. 32 வயது, 5'3" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5345
54. 26 வயது, 5'3" British citizen Graduate Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5343
55. 25 வயது, 5'0" British citizen Graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5331
56. 35 வயது, 5'2" Born and brought up in uk lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5329
57. 22 வயது, 5'2" இந்தியாவில் வசிக்கும் இலங்கை மணமகளுக்கு (Engineer) தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5317
58. 23 வயது, 5'2" British citizen Graduate working in a company மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5225
59. 28 வயது, 5'3" Discretion leave to remain visa 3 year visa eligible to apply permanent residence in uk graduate accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# மூலகங்களின் இணைவே உலகின் பொருட்கள்




மாசிலாமணி
*(ஒரு பேப்பருக்காக)*

உலகில் பல்லாயிரம் பொருட்கள் உள்ளன. இவை எல்லாவற்றிற்கும் 118 பொருட்கள்தான் மூலப்பொருட்கள். அவை மூலகங்கள் என்றழைக்கப்படும். இந்த மூலகங்களின் கூட்டுத் தான் இத்தனை ஆயிரம் பொருட்களும். எடுத்துக் காட்டிற்கு நீரை எடுப்போமானால், அது முதல் மூலகமான நீர்வளியின் (hydrogen) இரு அணுக்களினதும் உயிர்வளியின் (oxygen) ஒரு அணுவினதும் இணைவால் ஆன ஒரு பொருள். அப்படியான இரண்டோ அதற்கு மேற்பட்ட மூலகங்களினதோ இணைவேதான் உலகின் இந்த பல்லாயிரம் வகையான பொருட்கள் அனைத்தும்.

அணு என்பது என்னவென்று கேட்பீர்கள். மேலே கூறிய 118 மூலகங்களையும் நாம் ஒவ்வொன்றாக பிரித்துக்கொண்டே போவோமானால் ஈற்றில் அவை மேலும் பிரிக்க முடியாத ஒரு நிலைக்கு நிச்சயம் போயேயாகவேண்டும் அந்நிலையில்தான் அவற்றை அணு என்று அழைப்போம். இந்த அணுக்கள் மிகவும் சிறியவை. கண்ணுக்குப் புலப்படாதவை என்று கூறினால் அந்த விளக்கம் முழுமை பெறாது. ஒரு மீற்றரின் ஆயிரத்தில் ஒரு பங்கை நாம் மில்லிமீற்றர் என்போம். அந்த மில்லி மீற்றரின் ஆயிரத்தில் ஒரு பங்கை நாம் மைக்ரோ மீற்றர் என்போம். அதாவது ஒரு மீற்றரின் 10 இலட்சத்தில் ஒரு பங்குதான் மைக்குரோ மீற்றர். இந்த அலகைப் பயன்படுத்தி ஒரு அணுவின் விட்டத்தைக் கூறுவதே இயலாத செயல். அவ்வளவு சிறியவைதான் இந்த அணுக்கள். ஏன் இந்த மைக்ரோவின் ஆயிரத்தில் ஒன்றும் 100 கோடியில் ஒரு பங்குமான நனோ மீற்றர் அலகு கூட இந்த அணுவின் அளவைக் கையாளப் போதுமானதாக இல்லை. இதனிலும் சிறிய அலகைத்தான் பயன்படுத்தவேண்டி உள்ளது.

10x10x10 என்பது பத்தின் மூன்றாம் அடுக்கு, அது ஆயிரமாகும். பத்தின் ஆறாம் அடுக்கு மில்லியன், சய ஆறாம் அடுக்கு மைக்குரோ. பத்தின் சய ஒன்பதாம் அடுக்குத்தான் நனோ. பத்தின் சய பன்னிரண்டாம் அடுக்கை pico என்பார்கள். அது ரில்லியனில் ஒன்று. தமிழில் ஒருலட்சம் கோடியில் ஒன்று எனலாம். இந்த ஒருலட்சம் கோடியின் அறுபதுக்கும் அறுநூறுக்கும் இடைப்பட்ட ஒரு பகுதியாகவே அணுக்களின் விட்டம் அமைந்துள்ளது அதாவது ஆகச் சிறிய விட்டம்கொண்ட அணுவின் 10 மடங்கு விட்டத்திற்கு அதிகமாக ஆகப் பெரிய அணுவின் விட்டம் போகாது.

மூலகங்களின் பெயர்ப்பட்டியலுக்கு வருமுன் அணுக்கள்பற்றி இன்னும் சில தகவல்கள் அறியவேண்டி உள்ளது. ஒவ்வொரு அணுவின் மையத்திலும் ஒரு கரு இருக்கும். அந்தக் கருவை எதிர் மின்விசை கொண்ட எலக்ரோன் என்னும் துகள்கள் சுற்றிக்கொண்டிருக்கும். முதல் மூலகமான நீர்வளியைப் பார்ப்போமானால் அதன் கரு நேர் மின்விசை கொண்ட ஒரு புரட்ரோன் ஒன்றால் மட்டுமே ஆனது. இரண்டாவது மூலகமான ஹிலியத்தைப் பார்ப்போமானால் அதன் கருவில் நேர் மின்விசை கொண்ட இரு புரடோரன்கள் இருக்கும். மூன்றாவது மூலகத்திற்கு மூன்று. நான்காவது மூலகத்திற்கு நான்கு என்று இந்தப் புரட்டோன் எண்ணிக்கை ஒரு சீரான முறையில் கடைசியும் 118வதுமான ununoctium வரை உயர்ந்து கொண்டே போகும். கருவினுள் அடங்கியுள்ள புரட்டோன்களின் எண்ணிக்கையே அந்த அந்த மூலகத்தின் அணு எண் ஆகிறது. அது 118 வரை செல்லும் என்று நான் சொல்லத் தேவையில்லை. அந்த அந்த மூலகத்தின் அணு எண்ணளவுபுரட்டோன்கள் உள்ளதுபோல் அவற்றின் அணு எண் அளவு எலக்ரோன்களும் கருவைச் சுற்றிக்கோண்டிருக்கும். சில சந்தர்பங்களில் ஒரு மூலகம் தனது எலக்ரோன்களில் ஒன்றை இழந்து குழப்பம் தரும் நடிக்கலாக மாறுவதும் நடைமுறையில் உள்ளது. அதுபற்றிய விபரம் இங்கு தருவதற்கு இடம் போதாது.

ஒரு புரட்டோனால் ஆன நீர்வளியின் கருவில் ஒரு புரட்டோன் மட்டும் இருப்பதால் அது திடமுடன் இருக்கும். அதை ஒரு எலக்ரான் சுற்றிக் கோண்டே இருக்கும். ஆனால் புரட்டோன் எண்ணிக்கை இரண்டு மூன்று என்று கூடிக் கொண்டு போகும்போது அவற்றை திடமுடன் கருவில் தங்கவைக்க நடுமின்விசைகொண்ட நியுரோன் என்னும் பொருட்கள் தேவைப்படுகிறது. அதுவும் தொடக்கத்தில் ஒரு சீரான முறையில் இரண்டு புரட்டோன்களுக்கு இரண்டு மூன்று புரட்டோன்களுக்கு மூன்று என்று 20 வது மூலகமான கல்சியம்வரை செல்லும். 20 வது மூலகமான கல்சியத்தின் கருவிலுள்ள 20 புரட்டோன்களையும் திடமுடன் தங்கவைக்க 20 நியுரோன்கள் தேவைப்படுகிறது. ஆனால் அனேக பெரிய மூலகங்களில் புரட்டோன்களின் எண்ணிக்கையைவிட கூடுதலான நியுரோன்கள் தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டிற்கு 92வது மூலகமான யுரேனியத்தின் 92 புரட்டோன்களை திடமுடன் வைக்க 145 நியுரோன்கள் தேவைப்படுகிறது. 118வது மூலகமான ununoctiumதின் 118 புரட்டோன்களை திடமுடன் வைக்க 176 நியுரோன்கள் தேவைப்படுகிறது.

அணுக்களுக்கு எடை உண்டு. அதை எந்த அலகைப் பயன்படுத்தி அளப்பது ? விட்டத்தை அளப்பதற்கே ஒருலட்சம் கோடியில் அறுபது என்று பேசுகிறோம். ஒப்பிட்டுப் பேசும் ஒரு முறையை அணு எடையைச் சொல்லக் கையாளுகிறார்கள். அணுவில் 20 வகையான துகள்கள் இருந்தாலும் நாம் மூன்றுவகைத் துகள்கள் பற்றியே பேசியிருந்தோம். அதில் எலக்ரோன் துகள்கள் கவனத்திற்கு எடுக்கவேண்டிய அளவுக்கு எடை கொண்டவை இல்லை. அடுத்த இரு துகள்களாக புரட்டோனும் நீயுரோனும் சம எடை கொண்டவை. இப்போ ஒப்பிட்டு எடை என்று கூறுவதற்கு காரணம் உண்டு. எலக்ரோன் எடை இல்லாததால் அதை விலத்தி ஒரே ஒரு புரட்டோனைக் கொண்ட நீர் வளியின் அணு எடையை ஒன்று என்று சொல்வோமானால், இரண்டு புரட்டோன் துகள்களும் இரண்டு நியுரோன் துகள்ளும் கொண்ட ஹிலியத்தை நான்கு என்று கொள்ளவேண்டும். மூன்று புரட்டோன்களும் மூன்று நியுட்ரோன்களும் கொண்ட லித்தியத்தை ஆறு என்று கொள்ளவேண்டும். இதே முறை தொடருமானால் 118 எலக்ரோன்களும் 176 நியுரோன்களும் கொண்ட ununoctiumத்தை 294 என்று கொள்ளவேண்டும். உலோகங்களைக் கையால் தூக்கும்போது இந்த வேறுபாட்டை நாம் உணர்வோம். எடுத்துக்காட்டிற்கு இரும்பின் அணு எடை 56. பவுணின் அணு எடை 197. ஈயத்தின் அணுஎடை 207. ஒரு குறித்த அளவு இரும்பைக் கையிலெடுத்து வைத்துக்கொண்டு அதே அளவு ஈயத்தையோ பவுணையோ கையிலெடுப்பீர்களானால் அவை இரண்டும் இரும்பு போல் மூன்று மடங்கு பாரம் கொண்டவையாக இருப்பதை நீங்கள் உணர்வீர்கள்.

அறிவியலில் அணுத் துகள்களின் எடையை அளக்க மோல் என்னும் ஒரு அலகைப் பயன்படுத்துகிறார்கள். மோல் ஒரு பொருளின் அளவைக் குறிக்கும் ஒரு அலகு. 12 கிராம் கரியினுள் அடங்கும் புரடோன்களினதும் நியுரோன்களினதும் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து கணிக்கும் கணிப்புத்தான் மோல். ஒருமோலில் கோடானு கோடி அணுத்துகள்கள் அடங்கும். அந்த எண்ணிக்கை பத்தின் அடுக்கில் ஆறு தர பத்தின் 23 ம் அடுக்கு. கோடானு கோடி ஒருகோடி சேர்ந்தால் முக்கோடி என்பார்கள். 600 முக்கோடிதான் 1 மோல். இந்த விடை குத்து மதிப்பில் தசமத்திற்கு பின் பல எண்களை வெட்டியபின் செய்த பெருக்கல். எம்மைப் போன்ற சாதாரமானவர்கள் இதுபற்றி யோசித்து மூளையைக் குழப்பவேண்டிய தேவை இல்லை.

மூலகங்கள் எல்லாம் ஒரே தரமான செயற்திறன் கொண்டவை அல்ல. புளோரின், சோடியம் போன்ற செயற்திறன் கூடிய மூலகங்களும் உண்டு. உயர் பண்பு கொண்ட ஹீலியம், நியோன் போன்ற வாயு மூலகங்களும் உண்டு. செயற்திறன் கூடிய குழப்படி மூலகங்கள் ஏன் அப்படிச் செய்கின்றன என்று அறிய வேண்டு மென்றால் முதலில் உயர் பண்பு மூலகங்கள் பற்றிப் பார்ப்போம்.

மூலகங்களின் கருவை எலக்ரோன்கள் சுற்றுகின்றது என்று மட்டும் முதலில் கூறியிருந்தேன். ஆனால், அவை ஒரே ஓட்டில் சுற்றுவதில்லை, எண்ணிக்கைக்கு தக்கவாறு பல ஒடுகளில் சுற்றுகின்றன.

முதலாவது ஓட்டில் இரண்டு இலக்ரோன்கள் சேர்ந்தாலே அது முழுமை பெற்றுவிடும். ஆகையால், இரண்டு இலக்ரோன்கள் சுற்றும் ஹீலிய மூலகம் முழுமையான மூலகமாக மாறுகிறது. ஹீலியத்திற்கு ஒரு ஒடு மாத்திரம் தான் உள்ளது.

அடுத்த மூலகமான லித்தியத்திற்கு இரண்டு ஓடுகள் உள்ளன. இரண்டாவது ஓட்டில் எட்டு இலக்ரோன்கள் சேர்ந்தால் தான் அது முழுமை பெறும். இரண்டு ஓட்டு மூலகங்களில் இரண்டாம் ஓட்டில் எட்டு இலக்ரோன்கள் கொண்ட நியோன் முழுமையான மூலகமாக மாறுகிறது.

மூன்று ஓடு கொண்ட மூலகங்களில் ஆர்கன் முழுமை பெறுகிறது. இதே வரிசையில் கிறப்டன், செனோன் என்று பட்டியலும் உயர்ந்து கொண்டு போகும். ஓடுகளின் எண்ணிக்கையும் கூடிக் கொண்டு போகும்.

கடைசி ஓட்டில் ஒரு இலக்ரோன் குறைந்தாலோ அல்லது கூடினாலோ அந்த மூலகம் குழப்படி மூலகமாக மாறிவடும். எடுத்துக் காட்டுக்கு பத்துடன் ஒன்று கூடிய சோடியம் எனும் பதினொராவது மூலகம் செயற்திறன் கூடிய மூலகம். இதேபோல், பதினெட்டிலும் பார்க்க ஒன்று குறைந்த குளோரினும் ஒரு செயற்திறன் கூடிய மூலகம். இவை இரண்டிலும் உள்ள பிரச்சினை என்னவென்றால், சோடியம் தேவையற்ற ஒன்றை கூட வைத்துக் கொண்டு குழம்பித் திரிகின்றது. குளோரின் முழுமை பெறுவதற்கு தேவையான ஒன்று இல்லாமல் குழம்பித் திரிகிறது. இவை இரண்டும் ஒன்று சேர்ந்தால் சோடியம் தனக்கு மேலதிகமாக இருந்த ஒன்றை குளோரினுக்குக் கொடுக்கிறது, குளோரினுக்கும் தேடிய ஒன்று கிடைத்து விட்டது. இரண்டும் சேர்ந்து ஒரு கூட்டுப் பொருளாக மாறும் போது எமக்கு மிகவும் வேண்டிய சோடியம் குளோரைட் என்ற உப்புக் கிடைக்கின்றது.

ஒன்று குறைந்தது பற்றிக் கதைத்தோம். இரண்டு அல்லது மூன்று என்று குறையும்போது மூலகத்தின் பண்பும் மாறிக் கொண்டே போகும். மூலகங்கள் உலோகங்கள், அலோகங்கள் என்று மாறுவதற்கும் இப்படியான கடைசி ஓட்டிலுள்ள இலக்ரோன்களின் எண்ணிக்கை மாற்றமே காரணமாகின்றது.

வாகன சாரதிப் பயிற்சி

ஒரே மாதத்தில் ஒரே தடவையில் சித்தியடையவேண்டுமா?

அறிமுறைப் பரீட்சைக்கான இலவச பயிற்சி வேண்டுமா?

Smart Driving School
077 688 244 67

Croydon | Wallington | Sutton | Morden | Mitcham | Tolworth

# அரையாண்டு தமிழ்சினிமா



இந்த வருடம் பயங்கர எதிர்பார்ப்போடு வந்த ஐ , மாசு , உத்தமவில்லன் என்று பெரிய ஹீரோக்களின் படங்கள் சொதப்ப தேசிய விருது பெற்ற காக்காமுட்டை , டார்லிங், டிமாண்டி காலனி போன்ற சின்ன பட்ஜெட் படங்கள் நல்ல வரவேற்பை பெற்றதோடு வசூலையும் பெற்றிருப்பது புது முயற்சிகளுக்கு என்றுமே தமிழ் ரசிகர்களின் ஆதரவு உண்டு என்பதை மீண்டும் நிரூபணம் செய்கிறது ...

ஐ படத்தில் பாடல் காட்சிகளை படமாக்குவதில் மெனக் கட்டதற்கு கால்வாசியாவது ஷங்கர் கதைக்கு பட்டிருந் தால் நன்றாக இருந்திருக்கும். என்னதான் விலை கூடின கைத்தொலைபேசியா இருந்தாலும் சிக்னலே வரேல்லை யெண்டால் எப்படி பாஸ் ? இருந்தாலும் பொங்கல் விடு முறை தயாரிப்பாளருக்கு பொங்கலோ பொங்கல் சொல் லாமல் காப்பாற்றியிருக்கும். Blessing in Disguise என்பது போல ஐ பட டிக்கெட் கிடைக்காமல் டார்லிங் போனவர் கள் `டர்...' ஆகாவிட்டாலும் பேய் ட்ரெண்டில் மற்று மொரு படத்தை ரசிக்க ஆரம்பித்து விட்டார்கள் . தனது அழுத்தமான விமர்சனங்களால் படிப்பவர்களின் மனதை தொடும் கேபிள் சங்கர் நல்ல கதையை தேர்ந்தெடுத்தும் தொட்டால் தொடரும் மூலம் கொடுத்ததென்னமோ மைல்ட் டச் தான் . அடுத்த படத்தில் சிக்சர் அடிக்க வாழ்த்துக்கள் ...

காக்க காக்க , வேட்டையாடு விளையாடு படத்தின் ரீமேக் போல இருந்தாலும் ஐந்து கெட்டப்களில் அஜித்தை அவ்வளவு அழகாக காட்டியதற்கும் , ஸ்டைலிஷான மேக்கிங்குக்கும் பேசப்பட்டது என்னை அறிந்தால் . புதிய மொந்தையில் பழைய கள் தான் என்றாலும் ருசிக்கலாம். தோல்விகளால் துவண்டிருந்த தனுஷுக்கு வி.ஐ.பிக்கு பிறகு மற்றுமொரு வெற்றிப்படம் அனேகன் . க்ரைம் நாவல் போன்ற கதைக்காகவும் , வேகமான திரைக்கதைக்காகவும் வென்றான் இந்த அனேகன் . தந்திர மான திரைக்கதையால் ராஜதந்திரம் அனைவரையும் கவனிக்க வைத்தது . பி சி சென்டர்களில் வசூலோடு சர்ச் சையையும் சேர்த்து கிளப்பியிருக்கிறது கார்த்திக் நடிப் பில் வந்த கொம்பன் . காக்கி சட்டையின் வெற்றி சிவகார்த் திகேயனை சக்சஸ் ஹீரோவாக மீண்டும் நிரூபித்திருக் கிறது. பேய் சீசனின் பேய் ஹிட் காஞ்சனா 2 . இரண்டாம் பாதி கொஞ்சம் மொக்கையாக இருந்தாலும் எல்லா சென்டர்களிலும் கல்லா கட்டியது காஞ்சனா . தனது படங்களில் வெரைட்டியை விரும்பும் அருள் நிதியை டிமாண்ட் நாயகனாக ஆக்கியிருக்கிறது டிமாண்டி காலனியின் வெற்றி . ஐஸ்வர்யா தனுஷின் வை ராஜா வை `ஏ' சென்டர்களில் கையை கடிக்காததாக கேள்வி. ஜனநாதனின் இயக்கத்தில் புறம்போக்கு மேம்போக் காக இருந்ததால் ரசிகர்களின் வரவேற்பை பெறா விட்டாலும் ஷாமின் நடிப்பு பாராட்டப்பட்டது ...

குரு எஸ்.ஜே சூர்யாவின் இசை சவுண்டாக வசூல் செய்யாவிட்டாலும் சிஷ்யன் லக்ஷ்மனின் ரோமியோ ஜூலியட் கமர்சியலாக ஜெயம் ரவிக்கு நல்ல ப்ரேக் கொடுத்திருக்கிறது . பல சர்வதேச விருதுகளோடு தேசிய விருதும் சேர்ந்து கொள்ள கிடப்பிலிருந்த காக்கா முட்டைக்கு டீசண்ட் ஓபனிங் கிடைத்தது . வன்முறை , சோகம் எதுவுமில்லாமல் மென்மையான படங்களாலும் அழுத்தமாக மனதை தொட முடியும் என்பதற்கு நல்ல உதாரணம் இந்த படம் . வெறும் விமர்சகர்களால் மட்டும் பாராட்டப்படாமல் படம் வசூலிலும் பட்டையை கிளப்பிக் கொண்டிருப்பது தமிழ் சினிமாவுக்கு ஆரோக்கியம் ...

ஓ காதல் கண்மணி மூலம் ரசிகர்கள் , விமர்சகர்கள் இருவரிடமும் டபுள் ஓ.கே வாங்கி விட்டார் மணிரத்னம். கணவர் சூர்யாவின் மாசுவை துடைக்கும் வகையில் ஜோதிகாவின் 36 வயதினிலே படம் நல்ல ஹிட். தரமான படங்களை தயாரித்து வரும் சி.வி.குமாரின் மற்றுமொரு நல்ல படைப்பு இன்று நேற்று நாளை. டைம் மிஷின் கதைக்கரு பழசு தான் என்றாலும் தமிழுக்கு சொன்ன விதத்தில் புதுசு.

உலகத் தரத்தில் தமிழ்ப் படத்தைக் கொண்டு செல்லக் கூடிய ஒரே கலைஞன் என்ற பெயரைப் பெற்ற கமல் ஹாசன், மீண்டும் ஒரு கேள்விக்குரிய உத்தம வில்லன் படத்தை எடுத்து தயாரிப்பாளரையும் தவிக்க வைத்து, தன்னுடைய நிலையையும் தத்தளிக்க வைத்து விட்டார். இப்படி ஒரு கதையை அவர் எப்படி யோசித்தார் என்பதை அவர்தான் சொல்ல வேண்டும்.

இரண்டாம் அரையாண்டின் ஆரம்பத்திலேயே பாப நாசம் மூலம் உத்தம வில்லனின் பாதிப்பிலிருந்து மீண்டி ருக்கிறார் உலகநாயகன் . விஜய் நடிப்பில் புலி , சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் நடிக்கும் பெயரிடப்படாத தல 56 இரண்டிற்காகவும் ரசிகர்கள் பசியுடன் காத்திருக் கிறார்கள்...

நகைச்சுவை நடிகரான சந்தானம் தனி ஹீரோவாக முதன் முறையாக நடித்த `இனிமே இப்படித்தான்' படம் கமர்ஷியலாகவும் வெற்றி பெற்றது என்கிறார்கள். நூலி ழையில் சந்தானம் தப்பிவிட்டார். ஆனால், பொறிக்குள் சிக்கிய `எலி'யாக மற்றொரு நகைச்சுவை நடிகரான வடிவேலு எலி படம் மூலம் மாட்டிக் கொண்டார். வடிவேலு இதுவரை நடித்தப் படங்களிலேயே இப்படி ஒரு மோச மான படத்தைக் கெடுத்திருக்க மாட்டார் என்று ஒட்டு மொத்தமாக அனைவரும் சொன்ன படம்.

விஷால், சித்தார்த், ஜெய், உதயநிதி ஸ்டாலின், விஜய காந்தின் மகன் சண்முகப்பாண்டியன், கௌதம் கார்த்திக், ஆர்யா, விஜய் சேதுபதி, சூர்யா என தமிழ்த் திரையுலகின் கடந்த சில வருடங்களின் முக்கிய நடிகர்கள் இந்த அரை யாண்டில் நிறையவே ஏமாற்றி விட்டார்கள். ஆனால், அந்த நடிகர்கள் செய்யாத சாதனையை இரண்டு சிறுவர்கள் ரமேஷ், விக்னேஷ் மிகப் பெரும் சாதனையாகச் செய்தி ருக்கிறார்கள். இரண்டு தேசிய விருதுகள் மட்டும் இந்தப் படத்திற்குப் போதாது என `காக்கா முட்டை' படத்தைப் பார்த்த சாதாரண ரசிகர்களும் சொல்வது உண்மைதான். மணிகண்டன் என்ற அந்த அறிமுக இயக்குனரின் வந்தப் படத்தில் தமிழ் சினிமா நிறையவே தலை நிமிரும் என்ற மாபெரும் நம்பிக்கை ஏற்பட்டது.

இதுவரை வந்த 100 படங்களில் 10 படங்கள்தான் சொல்லிக் கொள்ளும்படியான வெற்றியைப் பெற்றிருக் கிறது என்பது சோகமான உண்மை.

*- இமயவரம்பன்*

# எண்பத்தி மூன்றிலே...

எண்பத்தி மூன்றினிலே —ஆ
இலங்கைத் தீவினிலே

எண்பத்தி மூன்றினிலே
இந்து மா கடலுக்கு
நடுவினிலே — ஆடி
ஈர்பத்து மூன்றிற்
தொடங்கியதே துயர்
இலங்கைத் தீவினிலே

கண்பட்டதோ இத்
தமிழினத்திற்கென
கண்டவர் யாரும் வருந்திட
எங்களைப்
புண்படச் செய்தனரே — ஒரு
போக்கிடமற்ற அகதிகளாக்கியே
எண்பட்ட யாவரையும் தமிழ்
என்றறிந்தால் உடன்
கொன்றெறிந்தார் — அந்தோ
(எண்பத்தி...)

நெஞ்சங் குமுறிடவே—கற்பு
நீங்கிடச் செய்த
கொடுமையிலே — அந்தப்
பஞ்சைத் தமிழ் மகளிர் — கொடும்
பாவிகளாற் தங்கள்
ஆவியை விட்டிட
அஞ்சிய பாலகர்கள் — தங்கள்
அன்னையர் மார்பில்
அமுதமருந்தியே
துஞ்சிய செய்திகளும் — பல
துயரக் கதைகளும் மறந்திடுமோ —
அந்த (எண்பத்தி...)

தேயிலைத் தோட்டத்திலே — அந்தத்
தெற்கு இலங்கையிலே
ஆயிரமாயிரமாய்த் தமிழ்ச் சோதரர்
அன்று இனவெறியாற்
கொலையுண்டதும்
நாயிலும் கீழ்க்கடையாய் — எம்மை
நாடற்ற பேர்களாய் ஆக்கிய
பின்னரும் காயும்
இனவெறியால் — எம்மேல்
காறியுமிழ்ந்ததும் நெஞ்சை
விட்டேகுமோ (எண்பத்தி...)

வெலிக்கடைச் சிறையில்—மனம்
வெம்பிக் கிடந்த எம் சோதரர்
தன்னையே...
சிலிர்க்குதேயுடலம்...அந்தோ!
சிந்தனை செய்திடவும்
மனம் கூசுதே...
பலிக்கு வெட்டினரே...
பத்மாசனப் புத்தன் முன்
கண்களைக் குத்தியே
படையலிட்டனரே — அந்த
பாதகம் எங்களின் நெஞ்சை
விட்டேகுமே (எண்பத்தி...)

ஆண்ட அரச படை — எங்கள்
அன்னையர்
தங்கையர் மானம் பறித்ததும்
மூண்ட பெருந்தீயில் — செல்வம்
முற்றும் இழந்து நாம்
ஏதிலரானதும்
மாண்டவர் கண்களையே — அந்த
மானமிலாதவர் தோண்டி
மகிழ்ந்ததும்
மீண்டும் நினைவலையில் — வந்து
மேவிட வெந்துயர் ஆவியைத்
தீய்க்குது (எண்பத்தி...)

சிங்கள பௌத்தவெறி — எங்கள்
செந்தமிழ்த் தாயைச்
சிதைத்த கொடுமையை
எங்கு முறையிடுவோம் — எமக்(கு)
ஈழத்தையன்றியே யாதும்
புகலுண்டோ!
தங்கையர் தம்பிகளே! — தமிழ்
ஈழ சரித்திரம் நாளும் படித்து நீர்
பொங்குக பொங்குகவே — ஒரு
போக்கிடமற்ற அகதிகளாயினோம்
(எண்பத்தி...)

மேற்குலகந்தனிலே — பொருள்
மேவிய வாழ்வோடு வாழினும்
எங்களின்
நாட்டை மறப்போமோ! — எந்த
நாளினிப் போயதைக்
காண்பதென்றே—அன்னை
வீட்டை மறப்போமோ! — என்று
விம்மியழுது புலம்பிடும் எம்குரல்
கேட்டிருப்பாய் காற்றே — அந்த
கேவலைக் கீழ்த்திசை
சென்றெமதீழத்தில்
மீட்டு முரையாயோ — நாங்கள்
விம்மியழவும் திறன் கெட்டுப்
போயினோம் (எண்பத்தி...)

ஆற்றல் இழந்தவராய்— எங்கள்
அன்னை மொழியை
மறந்தவராய்ப்—பெருங்
காற்றிற் கலந்தவராய் — கலாச்
சாரம் கலைகள்அழிந்தவராய்— நாம்
மாற்றினமாகுவதோ — இல்லை
மானத் தமிழர்களாய் என்றும்
வாழ்வதோ
சாற்றிடுவாய் தாயே — ஹே!
சாமுண்டி காளீ! வீரகராளீ!
(எண்பத்தி...)

**1983 ஆடி 24 இல் எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறையை நினைவு கூர்வோம்.**

*- யுகசாரதி*



# சினிமா




## நாலு பொலிசும் நல்லா இருந்த ஊரும்..

சூப்பர் ஹிட்டான 'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்' படத்தை தயாரித்த லியோ விஷன்ஸ் தயாரித்து ஜே.எஸ்.கே. பிலிம்ஸ் வெளியிட்டிருக்கும் படைப்பிது. ஒய்.ஜி.மகேந்திரன் நடிக்க கோபு – பாபு கதை வசனத்தில் 2007 ஆம் ஆண்டு அரங்கேறிய மாதவன் கேசவன் நாடகத்தின் கதைதான் இது என்று ரிலீஸுக்கு முன்பு ஒரு சர்ச்சை கிளம்பி அடங்கியது. ஆனால் தயாரிப்பாளர் சதீஷ் குமாரோ '1939 ஆம் வருடம் வெளிவந்த ஆஸ்க் அ போலீஸ்மேன் (Ask a Policeman) எனும் பிரிட்டிஷ் படத்தின் கருவை அடிப்படையாக கொண்டது' எனக்கூறி பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. முதல் தகவல் அறிக்கை முடிந்தது. இனி கதையை பார்ப்போம்.

கதை: பல்லாண்டுகளாக குற்றமே நடக்காததால் தொடர்ச்சியாக ஜனாதிபதி விருதுகளை வென்ற ஊர் பொற்பந்தல். அங்கிருக்கும் நான்கு போலீஸ்காரர்களும் எந்த தலைவலியும் இன்றி பொழுதை கழிக்கிறார்கள். திடீரென ஒரு நாள் 'ராமநாதபுரத்தில் கடும் கலவரம் நடக்கிறது. எனவே உங்களை அங்கு மாற்றல் செய்யப் போகிறோம்' என உயரதிகாரி குண்டை தூக்கி போடுகிறார். ராமநாதபுரம் சென்றால் நிம்மதியாக இருக்க முடியாது என்பதால் பொற்பந்தல் ஸ்டேஷனிலேயே இருப்பதற்கு நால்வரும் போடும் திட்டம் எம்மாதிரியான விளைவுகளை ஏற்படுத்துகிறது?

பொற்பந்தல் ஊர் மக்கள் நியாயம், நீதி, நேர்மைக்கு பெயர் பெற்றவர்கள் என்பதை சிங்கப்பூர் மாப்பிள்ளைக்கு எடுத்துச்சொல்வதற்கு மட்டுமே முதல் 20 நிமிடங்களை தியாகம் செய்து கொட்டாவி விட வைக்கிறார் அறிமுக இயக்குனர் ஸ்ரீ கிருஷ்ணா. ஒரு மினி வாய்ஸ் ஓவர் அல்லது இவ்வூர் மக்கள் உத்தம ராசாக்கள் என எழுதிக்காட்டினால் போதாதா பாஸ் ? அருள்நிதி, சிங்கம்புலி, 'நடுவுல கொஞ்சம்' படம் மூலம் கொஞ்சம் புகழ் பெற்ற பகவதி (பக்ஸ்), ராஜ்குமார் ஆகியோர் தான் நா.போ.ந.இ.ஊரின் முக்கிய நடிகர்கள். அருள் நிதியை விட சிங்கம்புலிக்குத்தான் அதிக காட்சிகள். அருமையான வாய்ப்பு. ஆனால் பெரிதாய் பயன்படுத்திக் கொள்ளவில்லை. 'என்னடா கல்லால அடிச்ச பின்னாடி நல்லா எரியுது. இது சைனா பல்பா?' என இவர் பேசும் வசனம் பட்டாசு. பார்க்கப்போனால் படத்தின் உண்மையான ஹீரோ சிங்கம்புலி தான், காமெடி, சென்டிமெண்ட் என அனைத்து ஏரியாக்களிலும் ரவுண்ட் கட்டி அடிக்கிறார். பக்ஸ், ராஜ்குமார், ரம்யா நம்பீசன் எல்லாம் Screen Spaceக்காக வெறுமென வந்து நிற்கிறார்கள். அனைத்து படங்களிலும் காமெடியில் கலக்கும் யோகிபாபு இந்த படத்தில் காமெடியுடன், சற்று Negative கலந்து வில்லனாக கலக்கியுள்ளார். யோகிபாபு எதற்கு வில்லனாகிறார் என்றும் தெரியவில்லை. கோவிலில் அர்ச்சனை செய்யும் சிறுவர்கள் அவருடன் இணைந்து திருடர்கள் ஆவதும் பொருந்தவில்லை. நாலு தெரு மட்டுமே இருக்கும் ஊரை காவலர்களால் காக்க முடியவில்லை என்பது காதுல பூ தான்.

'டிமாண்ட்டி காலனி'யில் வாங்கிய வேப்பிலை கட்டுகளை எடுத்துவந்து தனக்கும், பக்ஸ் மற்றும் ராஜ்குமாருக்கும் அடித்துவிட்டிருக்கிறார் போல அருள்நிதி. சீனுக்கு சீன் மூவரும் பேந்த பேந்த முழித்துக்கொண்டே இருப்பது இம்சை. அருள்நிதிக்கும், ரம்யா நம்பீசனுக்குமான காதல் அலைவரிசை அண்ணாச்சி கடை ஒடச்ச கடலை அளவிற்கு கூட டேஸ்ட் இன்றி நம்மை சோதிக்கிறது. ஹீரோயின் வேண்டுமென்ற கட்டாயத்திற்காக ரம்யா நம்பீசன். படத்தின் கதைக்கோ கதையின் ஓட்டத்திற்கோ எந்த விதத்திலும் சம்பந்தப்படவில்லை அவரது கதாபாத்திரம். ட்ரெண்டில் இருக்கும் யோகி பாபுவை வைத்து ஏதேனும் கிச்சு கிச்சு மூட்டுவார்கள் என்று பார்த்தால் ஏமாற்றம்தான் மிச்சம்.

ஆங்காங்கே திருப்புமுனை வைப்பதாக நினைத்துக் கொண்டு இயக்குனர் செய்திருப்பதெல்லாம் அலுப்பைத் தான் தருகிறது. ஒன்று சிரிப்பு போலீஸாக இருக்க வேண்டும் அல்லது சீரியஸ் போலீஸாக இருக்க வேண்டும். ஆனால் நால்வரும் சீரியல் போலீஸாக மட்டுமே இருப்போம் என்று அடம் பிடித்தால் என்ன செய்வது? பதினைந்து நிமிட குறும்படத்திற்கு ஏற்ற சப்ஜெக்டை 135 நிமிடங்கள் 'ஏலேலோ ஐலசா' என மூச்சு முட்ட இழுத்திருந்தும் சில அடிகளைத்தாண்டி நகர மறுக்கிறது உப்பு சப்பற்ற திரைக்கதை.

இரண்டாம் பாதியில் நிறைய காமெடி இருந்தாலும், படம் கொஞ்சம் நீளமாகவே தெரிகின்றது. காதல் காட்சிகள் படத்தில் எந்த இடத்திலும் ஒட்டவில்லை. முடிவே இல்லாத கிளைமேக்ஸ்.

படுஅமெச்சூர்த்தனமான காட்சியமைப்புகள், தேவையில்லாத இடத்தில் பாட்டுகள், பொருந்தாத க்ளைமாக்ஸ் இன்னும் பல இருக்கிறது. ஆர்வமாகத்தான் படம் பார்க்க உட்கார்ந்தேன்.முடியல்ல....

தியேட்டரை விட்டு வெளியே வந்ததும் ஆட்கொணர்வு மனுவொன்று போட்டு இயக்குனர் ஸ்ரீ கிருஷ்ணாவை அழைத்து வர வேண்டும். பார்த்த மாத்திரத்தில் டிக்கட் காசை திரும்ப வாங்கியே வேண்டும் என நரம்புகள் துடிக்காவிட்டால் உங்களுக்காக நிச்சயம் எடுக்கலாம் இப்படத்தின் இரண்டாம் பாகத்தை !!

மொத்தத்தில் 'நாலு போலீஸும் நல்லா இருந்த ஊரும்' காமெடியே இல்ல...

*பொக்கிஷம் வலைப்பதிவு*

## சினித்துளி

### 'பாட்சா-2'இல் அஜித்தாம்...!



ரஜினி படங்களின் வரிசையில், அனைத்து தரப்பு மக்களையும் கவர்ந்து மாபெரும் வரவேற்பு பெற்ற படம் 'பாட்ஷா'. சுரேஷ்கிருஷ்ணா இயக்கியிருந்த இப்படத்தில் ரஜினி, நக்மா, ரகுவரன், விஜயகுமார் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். தேவா இசையமைத்து இருந்தார். 1995ம் ஆண்டு இப்படம் வெளியானது. தொடர்ந்து அஜீத்தை சுரேஷ்கிருஷ்ணா அணுகி கதை சொன்னதாகவும் பாட்ஷா 2-ம் பாகத்தில் அஜீத் நடிப்பார் என கூறப்படுகிறது.

இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது" என்று செய்திகள் இணையத்தில் வெளியாகி இருக்கின்றன.

### விஜயின் 'புலி'க்கு தனிப்படை !



விஜய், ஸ்ருதிஹாசன், ஹன்சிகா மோத்வானி, சிறீதேவி, சுதீப் நடிக்க சிம்புதேவன் இயக்கும படம் 'புலி'. இந்த திரைப்படத்தின் முதல் புகைப்படத்தை விஜய்யின் பிறந்த தினத்தில் வெளியிட 'புலி' படக் குழுவினர் திட்டமிட்டிருந்தனர். ஆனால் அவரது பிறந்த தினத்திற்கு 12 மணி நேரத்திற்கு முன்பே 'புலி' படத்தின் புகைப்படங்களை இணையத்தில் திருட்டுத்தனமாக வெளியிட்டுவிட்டனர். வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொலீசாருக்கு புகார் அளித்துள்ளனர்.

இதன்படி சைபர் கிரைம் பிரிவின் துணை கமிஷனர் ஜெயகுமார் தலைமையில்வெளியிட்டவர்ளை கண்டுபிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

புகைப்படங்களுக்கே இவ்வளவு அக்கப்போரா ?.....

### திட்டமிட்டபடி வாலு 31இல் !



பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு ஜூலை 17ம்தேதி சிம்பு நடித்த வாலு வெளியாகும் என்று சொல்லப்பட்டது. கடைசிநேரத்தில் அந்தப்படத்துக்கு எதிராகப் பலர் நீதிமன்றத்துக்குப் போனதன் விளைவு படவெளியீடு தள்ளிப்போனது. அவற்றைப் பொய்யாக்கி, வாலு படத்தின் சிக்கல்களைத் தீர்த்து இம்மாதமே அந்தப் படத்தை வெளியிடவிருக்கிறார்களாம். இம்மாதம் 31 ஆம் தேதி அந்தப்படத்தை வெளியிடத் திட்டமிட்டு வேகமாக வேலைகள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

### அப்பாடக்கர் இப்போ சகலகலாவல்லவன் !



சுராஜ் இயக்கத்தில் ஜெய்மரவி த்ரிஷா நடிப்பில் தயாரான அப்பாடக்கர் படத்தின் பெயரை, படம் வெளியாகிற நேரத்தில் சகலகலாவல்லவன் என்று மாற்றி வைத்திருக்கிறார்கள். இவ்வளவுநாட்கள் அப்பாடக்கர் என்று வைத்திருந்துவிட்டுக் கடைசிநேரத்தில் இப்படி மாற்றியதற்கு என்ன காரணம்? திரைப்படங்களுக்கு தமிழக அரசு கொடுக்கும் வரிவிலக்கைப் பெற முக்கியமான தகுதியே தமிழில் பெயர் இருக்கவேண்டும் என்பதுதான். இது பல வருடங்களுக்கு முன்பே சொல்லப்பட்டது.

படப்பிடிப்பு மற்றும் அதற்குப்பிறகான வேலைகள் முடிவடைந்து வரிவிலக்குக்கு விண்ணப்பிக்கிற நேரத்தில்தான் இது தமிழ்ப்பெயர் இல்லை என்கிற உண்மை இவர்களுக்கு உறைக்கிறதா? என்கிற கேள்வி எழுகிறது. அண்மையில் சூர்யாவின் மாஸ் படத்துக்கும் இப்படி நடந்தது.


Kayaal IT Solution Ltd
CCTV Camera Installation & Maintenance
EST Aug 2012
FRIENDLY SERVICES BY QUALIFIED ENGINEER.....



- CCTV Installation and Maintainance
- We are Offering cameras 1000 TVL at Different Prices from £25
- AHD - 720P, 1080p ,1.3 Megapixel Camera, CMOS 1000 TVL all available all day
- Wireless HD IP Cameras also available
- DVR all quality - Sunvision make

CCTV in operation

Only £ 500.00 (Inc VAT)
4 Dome camreas, DAY AND NIGHT, 1000tvl, cmos 4 ch dvr, 500 GB Hard Disk and Install, Online Support.

Only £ 650.00
4 Dome Cameras 12 MM Lens, 30 Meter, Day And Night Vision , 720p, 1080p, 1.3 Mega Pixel AHD 1000 TVL AHD 4 CH dvr With 1TB Hard Drive, All Install And Online Setup

Simply and Friendly Easily In Your Pocket Money!!!
If Any One Start Pay with Month 50 Pounds Then Year after You Make Weekly Earn Regular and Continue Until You Member Weekly earn 250 pounds For More Details Call - JOTHY -07859892657

Please Contact : KAYAL-07457178826
JOTHY - 07859892657
Electrical and Electronic Engineer [BEng Hons ], CITY UNIVERSITY,LONDON
MCP2.0, MCT, [WINDOWS7], MCT[WINDOWS8]. PAT CERTIFIED [CITY AND GUILDS]

Paying Method : By PayPal or Cash
83, Roberts Bridge Road, Carshalton, SM5 1AH

E-Mail : info@kayaalcctv.com
Web : WWW.KAYAALCCTV.COM
COMPANY REG NO : 08193915

# JPN

Shipper | Movers | Transporters

Shipping: World Wide Door to Door
Air Cargo: Faster and Promised Delivery
Removal Services: Rate Lower - Job Higher

குறைந்த செலவில்
விமான மற்றும் கடல்-தரை
மார்க்கமான பொதி சேவை
பாதுகாப்பு - விரைவு - நம்பிக்கை

யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை !

**உலகெங்கும் கடல், வான் மார்க்கமாக பொருட்களை அனுப்ப நம்பிக்கையான ஒரே நிறுவனம்**

- *Shipping & Airfreight*
- *Worldwide Destination*
- *Import & Export*
- *Packing & Crating*
- *Collection & Delivery*
- *All Sizes & Weights*
- *Immediate Insurance Cover*
- *Complete Documentation Service*

*Now we are Operating the Coaches Europe Wide!*




Machinaries & Commercial Cargo Clearances and Door Deliveries to any Corner of Srilanka @ Best Rates

குறைந்த விலையில் இலங்கைக்கு பொதிகளை மட்டுமல்லாமல் இலத்திரனியல் பொருட்களையும் பாதுகாப்பான முறையில் அனுப்பிக் கொள்ளலாம். உங்கள் பொருட்களை உங்கள் வீட்டிற்கே வந்து பெற்று அனுப்பும் சேவையும் உள்ளது.

**Passenger Vehicles Available from 9 to 60 Seater Coaches**

**JPN Shipping Ltd.**
**Unit-A2c, Redlands, Coulsdon,**
**CR5 2HT, Surrey.**

Web: www.jpnshippingltd.co.uk
Email: info@jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk

Call us .........
Tel: **020 8668 0252**
Mob: **079 3119 7571**




# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED